Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்தூார் கிளை நூலகம்

Donated By
S. SEVARATNAM
MKENESWARA STORES
COLOMBO 11.

137732EY

PUBLIC LIBRARY
JAFFNA

பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

32908

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி பிரசுரம்: 65

# கங்கைக் கரை ஓரம்

செங்கை ஆழியான்

PUBLIC LIBRARY
JAFFNA

32908

வெளியீடு
**வீரகேசரி**
த.பெட்டி 160,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KANGAIKKARAI OORAM**

Written by

K. KUNARASA

(Sengai Aliyan)

FIRST EDITION

AUGUST— 1978

**PRICE Rs. 4-60**



*COPYRIGHTS*

RESERVED WITH THE PUBLISHERS



VIRAKESARI PIRASURAM 65



B

32908

DATE OF BINDING

DATE OF BINDING



**Published by**

**VIRAKESARI**

**P. O. Box 160, COLOMBO.**

**Sole Distributors:**

*Express Newspapers (Ceylon) Ltd.*

**185, GRANDPASS ROAD,**

**COLOMBO-14.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# நுழைவாயில்



கங்கைக்கரை ஓரத்தில் கால்களைப் பதிக்கு முன் வாசகர்களாகிய உங்களைச் சற்று நேரம் வழி மறித்துச் சிலவற்றைக் கூறிவிட விரும்புகின்றேன்.

'கங்கைக்கரை ஓரம்' என்ற இந்நாவல் இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்து மாணவர்களின் மனவுணர்வுகளையும் புறச்செயல்களையும் அனுபவ பூர்வமாகச் சித்திரிப்பது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு மூலையிலிருந்து பல்கலைக் கழகத்திற்குச் செல்கின்ற மாணவர்கள் அங்கு எப்படி நடந்துகொள்கின்றார்கள்? கடன் சுமை, நம்பிக்கைகள் என்பனவற்றுடன் அவர்களுக்காக யாழ்ப்பாணத்துப் பெற்றோர் செலவழித்துக் காத்திருக்க, அவர்கள் அவர்களின் நம்பிக்கைகளை எப்படி நிறைவேற்றுகிறார்கள், அழிக்கிறார்கள் என்பதை இந்நாவல் சித்திரிக்க முயல்கின்றது. அவ்வளவு தான்.

இது தான் பல்கலைக் கழகம் என்று வெளியுலகிற்குப் படம் பிடித்துக் காட்டவேண்டும் என்ற ஆவல் கடந்த ஆறு ஆண்டுகளாக எனக்குண்டு. ஆவலின் உந்தலால் இந்த நவீனத்தை உங்கள் முன் படைக்கிறேன். நான்கு ஆண்டுகள் மாணவனாகவும் இரண்டாண்டுகள் உதவி விரிவுரையாளனாகவும் பல்கலைக் கழகத்தில் கழித்த அனுபவத்தை இந்நவீனத்தில் கூறிவிட முயன்றுள்ளேன்.

என்னுடன் பல்கலைக் கழகத்தில் கூடவே கற்ற நண்பர்கள் இக்கதையைப் படிக்க நேரில், என்னுடன் சண்டைக்கு வந்துவிடாதீர்கள். ஏதாவது ஒரு சம்பவம் உங்கள்

PUBLIC LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் நிகழ்ந்தது போல இருக்கலாம். ஆனால் அது உங்கள் அனுபவமன்று. எல்லோருடைய அனுபவங்களும் அவை தாம். உங்களுக்குத் தெரியாததா?

இது ஒரு நவீனம். பல்கலைக்கழக வாழ்வு இவை தாம் என வாசகர்களுக்குப் படம் பிடித்துக் காட்டும் நவீனம். கல்வி கற்று நாட்டின் எதிர்காலத்தை நிர்மாணிக்கும் சிற்பிகளாக வெளிவர வேண்டிய மாணவ இளம் உள்ளங்களில் ஏற்படும் உணர்ச்சிப் போராட்டங்களைச் சித்திரிக்கும் நவீனம்.

இந்நவீனத்தில் வரும் கதாபாத்திரங்கள் யாவற்றினதும் பெயர்கள் கற்பனையே. இதனை மீண்டும் ஒரு தடவை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்நாவல் 'சிரித்திரன்' சஞ்சிகையில் தொடர் நவீனமாக வெளிவந்தது. பூரணமாக வெளிவரவில்லை. அந்நாவல் பூரணப்படுத்தப்பட்டு இன்று வீரகேசரிப் பிரசுரமாக வெளிவருகின்றது.

ஈழத்து நாவலிலக்கியத்தில் நிலையான ஓரிடத்தைப் பெற்றுக்கொண்ட பெருமை என் திறனிற்கு இருந்தாலும், அத்திறனை வெளிக்கொணர்ந்த பெருமை வீரகேசரி வெளியீட்டுத்துறைநிர்வாகி திரு. பாலச்சந்திரனுக்குரியது. அவருக்கு மீண்டும் நன்றி கூறுகின்றேன்.

செங்கை ஆழியான்

''கமலம்''
82, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். 19-6-78


அடுத்த வீரகேசரி பிரசுரம்!

''புயலுக்குப் பின்'' ''யாத்திரை'' நாவல்களை உங்களுக்கு அளித்த

பிரபல நாவலாசிரியர்!


பொ. பத்மநாதன்

எழுதிய

"பொன்னம்மாளின் பிள்ளைகள்"

ஓர் உணர்ச்சிப் படைப்பு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கங்கைக்கரை ஓரம்- படத்திலுள்ள எண்களுக்குரிய விளக்கம்

1. சரசவி உயன புகையிரத நிலையம்,
2. விஞ்ஞான மண்டபம்,
3. ஜயதிலகா விடுதி மண்டபம்,
4. அருணசலம் விடுதி மண்டபம்,
5. மார்ஸ் விடுதி மண்டபம்,
6. விளையாட்டு மைதானம்,
7. ஜிம்னசியம் (உடற்பயிற்சி அரங்கு)
8. அக்பார் விடுதி மண்டபம்,
9. அப்ப கந்தானை,
10. பல்கலைக்கழக பிரதானமண்டபம், (இங்கு தான் நிர்வாக அலுவலகம், நூல் நிலையம் என்பன இருக்கின்றன.)
11. கன்ரீன் (கதை நிகழ்ந்த வேளையில்)
12. கிஸ்சிங் பெண்ட்டும், லவ்வேர்ஸ் பார்க்கும்,
13. ஹில்டா- ஒபயசேகரா விடுதி மண்டபம்,
14. ஜேம்ஸ்பீரிஸ் விடுதி மண்டபம்,
15. மார்க்கஸ் பெர்ணண்டோ விடுதி மண்டபம்,
16. சங்கமித்தா விடுதி மண்டபம்,
17. இராமநாதன் விடுதி மண்டபம்,
18. விஜயவர்தன விடுதி மண்டபம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்)

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கைக்கரை ஓரம்



## முதலாம் பகுதி

## (1)

உலகத்தை வெற்றிகொண்ட பெருமிதம்.

மகிழ்ச்சி என்பதன் பூரண அர்த்தத்தை அன்றுதான் அவன் உணர்ந்தான். அவன் உள்ளமெல்லாம் பெருமிதத்தாலும், ஆயிரமாயிரம் இன்பக்கனவுகளாலும் நிறைந்து வழிந்தது. அவன் இலட்சியத்தின் முதற்படி அவனுக்காகத் திறந்து காத்திருக்கின்றது. அவன் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளான்.

பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை எழுதிவிட்டு ஏக்கத்தோடு ஐந்து மாதங்கள் காத்திருந்த வேளைகள்; ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளையும், தபாற்காரனையும் ஆவலோடு எதிர்கொண்ட அவப்பொழுதுகள். ''தம்பி, பாஸே...?'' என்று ஏளனமாகவும் கவலையோடும் விசாரிக்கும் ஊரவர்கள். நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையில் ஏக்கத்தோடு காத்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் முயற்சி வீண்போகவில்லை.

உள்ளங்கைகளைத் தலையின்கீழ் விரித்து வைத்தபடி முகட்டில் எதையோ தேடியபடி வாங்கில் படுத்திருந்தான் சிவராசா. பல்கலைக்கழகம் பற்றியே அவன் நினைவுகள் ஓயாமல் சுற்றின.

தலைவாசல்திண்ணையில் அவன் தந்தை கனகசபை குந்தியிருந்தார். அவரின் இதயத்தில் புதியதொரு பிரச்சினை விசுவரூபம் எடுத்திருந்தது. அந்தச் செய்தியை அறிந்ததிலிருந்து ஒருபுறம் மகிழ்வு; மறுபுறம் கவலை. அவர் சுருட்டு ஒன்றை எடுத்து வாயில் வைத்துக்கொண்டார். வலதுகை நெருப்புப் பெட்டிக்காக மடியைத் தடவி ஏமாந்தது.

''பிள்ளை... கமலம்... உந்த நெருப்புப் பெட்டியை ஒருக்காக் கொண்டு வா...'' என்று அடுக்களையை நோக்கிக் குரல் கொடுத்தார். கம்பீரம் குறையாத குரல். ஆனால், உடல் தான் தளர்ந்து வாடிவிட்டது. ஆறு பிள்ளைகளுக்கும் மனைவிக்குமாக உழைத்து உழைத்துத் தேய்ந்து போய்விட்டார்.

''நெருப்புப் பெட்டியில ஒரு குச்சி இருந்து இப்பதான் அடுப்பு மூட்டினனான் ஐயா... அம்மா இப்ப கடைக்குப் போட்டா வாங்குறதுக்கு... தணல் கிடக்குக் கொண்டு வரட்டே ஐயா...?'' என்று அடுக்களைக்குள் இருந்துகமலம் குரல் கொடுத்தாள். குரல் கொடுத்ததோடு, அடுக்களையின் பச்சைசுப்பலகைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு, அகப்பை ஒன்றில் நெருப்புத் தணல் ஒன்றை ஏந்தி வந்தாள் கமலம். மகளை ஒருகணம் நிமிர்ந்துபார்த்தார் கனகசபை.

பெண்கள் எவ்வளவு வேகமாக வளர்ந்துவிடுகின்றார்கள். அவர்கள் முன்னால் தம்பிமாரோடு சண்டையிட்டு ஓடிவிளையாடிய கமலம், இன்று பெரியவளாக வளர்ந்து உயர்ந்து நிற்கின்றாள். அவள் முகத்தில் துலங்குகின்ற சாந்தம் வேறு எவருக்கும் வராது. கமலம்தான் மூத்தவள். சிவராசா இரண்டாவதாகப் பிறந்தான். அவனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பிறகு ஐந்து பேர். அதில், ஒரு தம்பி பன்னிரண்டா வது வயதில் அகாலமரணமடைந்தான். வலு கெட்டிக் காரன் அவன். திறமைசாலிகள் வெகுகாலம் வாழ்வதில்லை போலும். இரண்டு தம்பிகளும், இரண்டு தங்கைகளும் படிக்கின்றனர்.

சுருட்டைப் புகைத்தபடி அவர் கேட்டார்: ''கொம்மா எங்கை போனவ, பிள்ளை...''

'கடைக்கு... அதாலை மாமா வீட்டையும் ஒருக்காப் போட்டு வாறன் என்றவ...'' என்று கூறிவிட்டுக் கமலம், தம்பியைப்பார்த்துச் சிரித்தாள்.

''ஏனும்...? என்று ஐயா கேட்டார்.

''தம்பி பாஸ் பண்ணின புதினம் சொல்லுறதுக்காக் கும்...'' கமலம் அதைக் கூறும் போது அவள் குரலில் இழையோடிய குதூகலத்தையும், முகத்தில் படர்ந்த மலர்ச்சியையும் சிவராசா உணர்ந்தான். அவன் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டதில் எல்லாருக்கும் மகிழ்ச்சிதான். ஆனல், திறமை மட்டும் பல்கலைக் கழகத் தில் படிப்பதற்குப் போதாது என்பது அவருக்குத் தெரி யாதா?

ஏழைக் கமக்காரனல் ஆயிரக்கணக்கில் படிப்பிற்கா கச் செலவிட வழியுண்டா?

''ஓவிசியர் இராமலிங்கத்தாரின் மகனும் தம்பி யோடை சோதனை எடுத்தவனும். ஆனல், அவன் பாஸ் பண்ணவில்லை... தம்பி, பாஸ் பண்ணினது ஆரையோ பிடிச்சுத்தான் என்று சொல்லித் திரியிறனும்...'' என்றுள் கமலம். இது அவன், தமக்கைக்குக் கூறிய செய்தி. இராம லிங்கத்தின் மகன் கனகராசன் அவனோடு ஒன்ருகப்படித்த வன். ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு ஆசிரியரிடம் ரியூசன் கேட்டவன்.

கனகசபை சிரித்தார்,

Donated by
S. SEVARATNAM
VIKENESWARA
COLOMBO
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆர் என்னத்தைச் சொன்னாலும் நமக்கு என்ன, மோனை... எங்கடை ராசன் படிப்பில புலி என்பது ஊரறிந்த விசயம்...''

''போயும் போயும் ஆட்ஸ் தானே? இப்ப படிச்சுப் போட்டு எத்தனை பேர் வேலையில்லாமல் றோட்டு றோட்டாத் திரியினம் என்றும் கதைக்கினம்...''

''ஆட்சோ சயன்சோ... அதில என்ன இருக்கு? எல்லாம் திறமையில தான் இருக்கு? ஆட்ஸ் படிச்சவன்கள் எத்தனை பேர் எனக்குத் தெரியத் தக்கதாக ஜீ. ஏ. ஆக டீ.ஆர்.ஓ. ஆக, எக்கவுண்டன்மாராக இருக்கிறுன்கள்... உதை விடு... உதெல்லாம் மோனை பொறுமைக் கதை...'' என்றார் அவர். வேலை வாய்ப்பைப் பொறுத்துத்தான் கல்வியின் தரமிருக்கின்றது.

கமலம் தொடர்ந்தாள்; ''தமிழில படிச்சு என்னத்தைச் செய்யப் போறது என்கினம்...''

''இங்கிலிசில படிச்சவை என்னத்தைச் செய்து போட்டினம்...?'' என்று கேட்டார் கனகசபை.

இவற்றையெல்லாம் கேட்டபடி அவன் படுத்திருந்தான். மாற்றங்களை எங்கள் சமூகம் அவ்வளவு இலேசில் ஒப்புக் கொண்டுவிடுவதில்லை. ஒப்புக் கொண்டாலும் தங்கள் வயிற்றெரிச்சலைக் காட்டாமல் விடுவதுமில்லை.

தகரப் படலை திறந்து மூடும் ஒலி எழுந்தது.

''கொம்மா வாறுபோல...''

''என்ன தேப்பனும் மோனுமாத் திட்டம் போடுறியள்... எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கு...?'' என்றபடி செல்லம்மா வந்தாள். அவளின் முன் தலையில் வெள்ளிக்கம்பிகளாக நரை படர்ந்திருந்தது. தோய்த்துத் தோய்த்துப் பழுப்பேறிய பச்சை நிற லங்காச்சேலை ஒரு தலைப்பில் கிழிந்து தொங்கியது. அவன் உத்தியோகமானதும் அம்மாவிற்குப் பத்துப் பன்னிரண்டு சேலைகள் வாங்கிக் கொடுக்க வேண்டும். தாலியைத் தாங்கியபடி கழுத்

தில் மஞ்சள் கயிறு ஒன்று ஊற்றையேறிக் கறுத்துக் கிடந்தது. அவன் சோதனையில் சித்திபெற்ற நேரத்தில் இருந்து செல்லம்மாவின் முகத்தில் எதிர்காலக் கனவின் உயர் இலட்சியங்கள் தெரிந்தன. அவள் குடும்ப நிலை குப்பை மேட்டிலிருந்து கோபுரத்திற்கு உயர்ந்தது போல மகிழ்ந்து போனாள்.

இலங்கையின் ஆயிரமாயிரம் தாய்களில் அவளும் ஒருத்தி. கணவனால் சுகப்படாத வாழ்வு பிள்ளைகளால் சிறக்கும்; வீடு வாசல், காணி பூமி, உடை நகை என்ற ஆசைகளை மனதில் கொண்டு, நம்பிக்கையிலேயே நல் வாழ்வை எதிர் பார்க்கும் தாய் அவள். மனைவியின் மகிழ்ச்சியை கனகசபை அறியாதவரல்லர். அவரின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அப்புன்னகையில் மறைந்து கிடந்தஅர்த்தத்தை அவள் உணராதவளா?இருபத்தைந்து ஆண்டுகள் அவரோடு வாழ்ந்தவள்; சோர்ந்துபோய் திண்ணையில் அமர்ந்தாள்.

''கமலம், சோறு வடிச்சிட்டியே? வடிச்சிருந்தாக் கொஞ்சம் கஞ்சிகொண்டுவா.''

''வடிச்சிட்டுக் கொண்டு வாறன்...'' என்றபடி கமலம் உள்ளே போனாள்.

''நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதையுங்கோ அப்பா...'' என்றபடி மனைவியைக் கனகசபை நிமிர்ந்து பார்த்தார்.

''கவலைப்படாமல் என்ன செய்வது, செல்லம்?...பண முள்ளவன்ரை பிள்ளையள் படிக்காமல் திரியுதுகள். பண மற்றவனின் பிள்ளைகள் படிக்க வசதியற்று நிக்குதுகள். ராசன் வருசா வருசம் தவறாமல் ஒவ்வொரு சோதனை யாப் பாஸ் பண்ண எவ்வளவு சந்தோஷமாக இருந்தது. இன்று அவனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புவதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் நிக்கிறன். நாலு பரப்புத் தோட்டத்தில் வாறவரும்படி சீவிக்கவே போதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் இருக்குது... இரண்டு குமருகள் வீட்டில... ராசனுக்குப்பிறகு மூன்று சிறிசுகள்... இதுகளை யோசித்தால்...? ராசன் எப்படிப் போறது...? உங்கை பார்... இந்த முறை வீடு மேயாமல் ஆகாசம் தெரியுது... மூத்தவளின்ரை கழுத்துச் சங்கிலி கூட அடைவில கிடந்து மாளுது... சாணேற முழம்சறுக்கிறது போல நம்மடை வாழ்க்கை'' என்றார் கனகசபை.

அவர் கூறியவற்றை அவன் உணராமலில்லை. அவன் இதயம் ஏக்கத்தால் படபடத்தது. ஏழைகள் வாழ்க்கையில் முன்னேறுவது எவ்வளவு கடினமான காரியமாக இருக்கிறது.

''ராசன் ஒரு பி. ஏ. ஆக மட்டும் வந்திட்டான் என்றால் பிறகு ஏன் கவலை...? கைநிறைய உழைப்பான். இரண்டு வருசத்தில தமைக்கை தங்கச்சி இருவரையும் கரை சேர்த்திடுவான். தம்பி தங்கச்சிமாரையும்படிப்பித்து விடுவான்...'' செல்லம்மா கனவில் மிதந்தாள். கல் வீடு... நகை... நட்டு... என அவள் கனவு நீண்டது.

''அதுக்கு வழி...?''

''அதுக்கு நான் ஒரு வழி பார்த்திட்டன்...'' என்றாள் செல்லம்மா. அவன் வியப்போடு வாங்கில் எழுந்து உட்கார்ந்தான்.

செல்லம்மா தொடர்ந்தாள்: ''நான் இப்ப அண்ணரிட்டை போனனான்...''

''ஆர் தம்பிராசனிட்டையோ...?''

''உங்களுக்கு அண்ணரென்டால் கொஞ்சம் இளக்கம்... அவர் ராசனைப் படிப்பிக்கச் சம்மதிச்சிட்டார்...''

''அந்தக் கஞ்சனோ...? சோளியன் குடும்பி சும்மா ஆடாது... அவனாவது சம்மதிக்கிறதாவது...? விஷயத்தைச் சொல்லு...'' என்று ஏளனமாகக் கனகசபை சிரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் அவரின்ரை மூத்தமோள் சரோசாவிற்கு என்ன குறை...? ராசனுக்கு ஏற்றவள் தானே...?'' என்றாள் செல்லம்மா. ''ஓகோகோ'' என அவர் சிரித்தார். விழிகள் பிதுங்கி விடுமாப்போலச் சிரித்தார். அவன் வியப்போடு எல்லாரையும் பார்த்தான். அவனுக்குக் கலியாணமா?

''அடி விசரி, ராசனை நம்பி இரண்டு குமரிருக்குது... அதுகளுக்கு ஒரு வழி பண்ணக் காணவில்லை... நீ உன்ரை கொண்ணன்ரை மோளுக்குக் கலியாணம் ஒப்பேற்றிட்டு வந்திருக்கிறாய்... அடி, செல்லம்மா... உன்ரைகொண்ணர் சிவராசனை பீ.ஏ.ஆக்கிட்டு மாப்பிள்ளையாக்கப் பார்க்கின்றார். லேசான வழி கண்டியோ...''

''அதில என்ன? அவன் படிச்சு உழைச்சுத் தமைக்கையையும் தங்கச்சியையும் கரை சேர்த்திட்டு அண்ணன்ரை மோளைச் செய்யட்டுமே? ஒண்டுக்கை ஒண்டு... உதவியா இருக்கும்'' என்று கூறிவிட்டு அவரைப் பரிதாபமாகப் பார்த்தாள் செல்லம்மா.

''ஓம்... ஓம்... உன்ரை கொண்ணர் இவ்வளவு காலமும் நமக்கு எவ்வளவு உதவிகளைச் செய்திருக்கின்றான். நீ எல்லாத்தையும் மறந்திட்டாய்...? சிவராசனுக்கு சோதனைக்குப் பணம் கட்டப் பணமில்லை... நீ கொண்ணரிட்டைபோய்க் கேட்டாய்...?''

''அவரிட்டை இல்லை அப்ப... இருந்தாத் தந்திருப்பார்...''

''நீ என்னைப் பேயன் விசரன் ஆக்காதை... இந்த விசர்க் கதையை இனி இங்கை கதைக்காதை...'' என்று எழுந்தவர் மனைவியை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்: ''அடி செல்லம், பத்துப் பரப்புத் தோட்டம் இன்றைக்கு நாலு பரப்பானது ஏன்? உன்ரை கொண்ணனாலை... உன்ரை கொண்ணன் செய்த தில்லுமுல்லாலை... இப்ப வந்திட்டார்... ஏன்? அண்டைக்கு வரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர் இண்டைக்கு மட்டும் ஏன் வந்தார்? எல்லாம் பீ.ஏ. அடி. நமக்கு இருளுக்குள்ள தெரியிற மின்னலைப் போல ஒரு ஒளி தெரியுது... அதையும் உன்ரை கொண்ணர் தட்டிப் பறிக்க வந்திட்டார்...''

''வரம்பில்லாத தோட்டத்துக்குத் தண்ணீர் இறைப்பது போல இருந்ததை எல்லாம் இறைச்சியள்... அழிச்சியள்... குடிச்சு முடிச்சியள்... அதாலே தானே இந்த நிலை'' என்றபடி அவள் பெரிதாக அழுதாள்.

''ஏன் இப்ப வீணச் சண்டை பிடிக்கிறியள்... இந்தக் கோதாரி வீட்டில இருக்கேலாது...'' என்றான் அவன். கனகசபை விருட்டென அவனைத் திரும்பிப் பார்த்தார். அந்தப் பார்வையைத் தாங்கிக்கொள்ளமுடியாது அவன் தமக்கையைப் பார்த்தான். கமலம் எதுவும் பேசமாட்டாள். அழத்தான் தெரியும்.

''அப்ப உனக்கும் அப்படி ஒரு எண்ணம் இருக்குது...'' என்றார் கனகசபை.

''இல்லை...இல்லை...அப்படியில்லை ஐயா...'' என அவன் கத்தினான்.

அவர் அமைதியடைந்து விட்டார். கமலமும் அமைதியடைந்தவள் போலக் காணப்பட்டாள். அம்மா அவனை ஏக்கத்தோடு பார்த்தாள். அவன் என்ன செய்வான்?

தென்னைமர வட்டில் இருந்த அணில் ஒன்று தாவல் தப்பியதால் தொப்பென்று நிலத்தில் வீழ்ந்தது.

''நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை... எல்லாத்துக்கும் நான் இருக்கிறன். காணியையும் தோட்டத்தையும் ஈடு வைச்சாவது நான் உன்னைப் படிப்பிப்பன் ராசா... அதுக்கும் காணாட்டில் எல்லாத்தையும் வித்தாவது படிப்பிப்பன்...'' என்றார் கனகசபை.

''ஐயா...''

''ஆறுத் தம்பி, உன்னை நம்பித்தான்... உன்னை நம்பித்தான்...'' கனகசபையின் குரல் தழுதழுத்தது: ''அங்கை உன்ரை எண்ணப்படி நடந்திடாதை...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எல்லாரையும் போல என்னை நினைக்காதையுங்கோ, ஐயா... நான் கவனமாகப் படிச்சு வந்து எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பன்... அக்காவையும் தங்கச்சிமாரையும் நல்ல இடத்தில கலியாணம் செய்து வைப்பன்... தம்பிமாரைப் படிப்பிப்பன்...ஒன்றுக்கும் கவலைப் படாதையுங்கோ ஐயா... மூன்று வருசம் தானே...?'' என்றான் அவன். நம்பிக்கையும் திடநெஞ்சமும் கொண்ட வாலிபனாகத் தான் அவன் இதைக் கூறினான். பணவிடயத்தில் அவன் குடும்பம் வஞ்சிக்கப்பட்டது. அப்பணத்தை அவன் தேடுவான். இந்த உலகத்தின் இன்பங்கள் எல்லாவற்றையும் அவன் குடும்பத்தினர் அனுபவிக்க வைப்பான்.

## 2.

**மாலை** வெயில் முற்றத்தில் படர்ந்திருந்தது. அவன் முகம் கழுவி சேட் போட்டுக் கொண்டு வெளியே புறப்பட இருந்தான். பின்னேரங்களில் வாசிகசாலைக்குப் போய் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்காவிடில் அவனுக்கு அன்று நித்திரை வராது.

''தம்பி, தேத்தண்ணி குடிச்சிட்டுப் போ...'' என்று கமலம் குரல் கொடுத்தாள். கமலம் அடுக்களைக்குள் நுழைந்துஇரண்டாண்டுகள். வீட்டு வேலைகள் யாவற்றையும் அவள்தான் கவனித்துக் கொள்கின்றாள். அம்மாவிற்கு இப்போதெல்லாம் வேலை குறைவு.

கிளாஸ் நிறையத் தேநீர் ஏந்திக்கொண்டு கமலம் வந்தாள். அவளிடம் இருந்து தேநீரை வாங்கிக்கொண்டான். தேநீரைத் தரும்போது அவள் கூறினாள்: ''ஏன் இந்தச் சாறத்தைக் கட்டியிருக்கிறாய்...? அங்கை கொடியில மற்றச் சாறம் தோய்த்துப் போட்டிருக்கிறன். அதைக்கட்டு

மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலம் அவன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள்?

''ஏனக்கா உனக்குக் கஷ்டம்... நான் தோய்த்திருப்பன்தானே...?''

கமலம் சிரித்தாள். அவளுக்குச் சிரிக்க அல்லது அழத்தான் தெரியும்.

''அம்மாவும் ஐயாவும் எங்கை போயிருக்கினம் என்று தெரியுமே?'' என்று கேட்டு விட்டு கமலம் அவனைப் பார்த்தாள்.

''எங்கை அக்கா...?''

''எல்லாம் உன் விஷயமாத்தான்...இந்தக் காணியை ரெண்டாயிரத்துக்கு ஈடு வைக்கப் போயிருக்கினம்...வாற கிழமை மட்டில உன்னை யூனிவேசிற்றிக்குக் கூப்பிடுவினமாமே?...''

''ஓம் அக்கா. ஆரிட்டை ஈடு வைக்கினமாம்?'' என்று கவலையோடு விசாரித்தான் அவன். அவன் தலை மீது அவனை நம்பிச் சுமத்தப்படுகின்ற பாரங்களை அவன் உணராமல் இல்லை.

''ஓவசியர் இராமலிங்கத்தாரிடமாம்... அதுவும் எவ்வளவோ கஷ்டப்பட்டுத்தான். ஐந்து வருச அறுதிக்கு எழுதுகினம்...'' அறுதிக்கு காணி எழுதப் படுவதை அறிந்து அவன் உள்ளம் ஒரு கணம் திக்கென்றது. பிறகு தன்னையே அவன் சமாதானப்படுத்திக்கொண்டான். அவன் பட்டதாரியாகி வந்துவிட்டால் இந்தக் கடன் எந்த மூலைக்கு?

அவன் எதுவும் பேசவில்லை. தேநீரை வாங்கிக் குடித்து விட்டு வாசிகசாலைக்குப் புறப்பட்டுவிட்டான்.

கடை வீதி கலகலப்பாக விளங்கியது. தோட்ட வேலையை முடித்துவிட்டுத்தான் வீட்டிற்குத் தேவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களை வாங்க ஊர் மக்கள் வருவார்கள். கடை வீதி அவ்வளவு பெரிதல்ல. கூப்பன் கடை உட்பட, ஒரு தேநீர்க் கடையும் இரண்டு பலசரக்குக் கடைகளும் இருந்தன. அந்த ஊரின் பிரதான வீதியும் அந்த ஊர் அம்மன் கோயில் வீதியும் சந்திக்கின்ற சந்தியின் ஒரு பக்கத்தில் கிராம முன்னேற்றச் சங்கம் கட்டிவிட்ட வாசிகசாலை இருக்கின்றது. மூன்று தினசரிப் பத்திரிகைகளும், இரண்டு ஈழத்து மாதப் பத்திரிகைகளும் ஒழுங்காக வாசிகசாலைக்கு வருகின்றன.

வாசிகசாலைக்குப் பின்னால்தான் அவன் மாமா தம்பிராசாவின் வீடு இருக்கின்றது. மூன்று அறைகள் கொண்ட அமெரிக்கன் பாசன் வீடு. அந்த ஊரில் கணிக்கப்படுகின்ற ஒரு புள்ளி அவர். காணி பூமிகள் நிறைய அவருக்குச் சொந்தமாக இருந்தன.

மாமாவைப் பற்றி நினைக்கும் போது அவருடைய மனைவியைப் பற்றி அவனால் எண்ணாமல் விடமுடியாது. அவனைப் பொறுத்தளவில் மாமா நல்லவர். இரக்க குணம் உடையவர். ஆனால், மாமி எவரையும் குடும்பத்தோடு அண்ட விடமாட்டாள். மாமா இளவயதில் கலியாணம் செய்துகொள்ளாமல், முப்பத்தொன்பது வயதில் கலியாணம் செய்துகொண்டதால் மனைவியின் ஆதிக்கம் அங்கு மேலோங்கி நிற்பதாக அவன் தந்தை அடிக்கடி கூறுவார்.

''பொண்டிலுக்குப் பயந்தவன்...'' என்பது கனகசபையின் கருத்து.

''பொம்பிளைச் சகோதரங்களோடை பிறந்ததால் காலாகாலத்திலை கலியாணம் செய்யவில்லை... எங்களுக்கு உழைச்சுத் தந்துவிட்டு அந்த மனிசன் கலியாணம் செய்தது... அதுக்கு இப்படிச் சொல்லுறதே? என்ரை அண்ணரைப்பற்றி இப்படிச் சொல்லாதையுங்கோ...'' என்பாள் செல்லம்மா. அவளுக்குத் தமையன் என்றால் தனியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு பாசம். ஆனால், அவனுக்குப் புத்தி தெரிந்த காலத்தில் இருந்து மாமாவிற்கும் ஐயாவிற்கும் நல்லஉறவு இருந்ததை அவன் காணவில்லை. எனினும், நன்மை தீமைக்கு இரண்டு குடும்பங்களும் சேரும். அவன் தாய் அடிக்கடி மாமா வீட்டுக்குப் போய் வருவாள். அவனும் போவான். கனகசபை இதைத் தடுத்தது கிடையாது.

மாமாவின் குடும்பம் சிறியது. மூத்தபெண் சரோசா; மற்றைய இருவரும் ஆண்கள்.

அவன் வாசிகசாலைக்குப் போகும் போது தன் வீட்டு வாசலில் தம்பிராசா நின்றிருந்தார். வழுக்கை விழுந்த தலை, நெடிய உருவம், கம்பீரமான வடிவம்.

''ராசனே? வாசிகசாலைக்குப் போறியே?''

''ஓம் மாமா...'' என்று தயங்கி நின்றான் அவன்.

''எப்ப நீ சர்வகலாசாலைக்குப் போறாய்?''

''அடுத்த வாரம் மட்டில்...''

''சந்தோசம்... நீ நல்லாப் படிச்சு நல்லா வர வேண்டும்... உன்னை இந்தப் பக்கம் கன நாளாகக் காணவில்லை. வாவன் வீட்டை... மாமியும் தேடினா...'' என்றார் தம்பிராசா.

அவருடைய அழைப்பை அவனால் தட்ட முடியவில்லை. ஆனால், அவனுள் ஒரு வகைத் தயக்கம் குடி கொள்வதை உணர்ந்தான். வெகு சுதந்திரமாக மாமாவின் வீட்டிற்குள் ஓடியாடித் திரிந்தவன் அவன். ஆனால்,இன்று மாமா அவனைப் படிப்பித்து விட்டுச் சரோசாவிற்குக் கலியாணம் செய்ய எண்ணியிருந்தார் என்று அறிந்ததிலிருந்து மாமா வீட்டிற்குள் நுழைய அவன் கால்கள் தயங்கின. அவன் உணர்வுகளுக்கு விளக்கம் கொடுக்க அவனால் முடியவில்லை.

படலையைத் திறந்து கொண்டு தம்பிராசா முன்னே போக அவன் பின்னே சென்றான். அவர்கள் வருவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் கண்டவள் சரோசாதான். தம்பி ராசா அமெரிக்கன் பாசனில் வீடு கட்டியிருந்த போதிலும், வீட்டிற்கு முன்னால் பெரியதொரு தலைவாசலும் கட்டியிருந்தார். தென்னங் கீற்றுகளால் வேயப்பட்ட அக் கொட்டில் நமது நாட்டின் சுவாத்தியத்துக்கு ஏற்றதாக இருந்தது.

தலைவாசல் திண்ணைக் குந்தில் அமர்ந்திருந்து தலை வாரிக்கொண்டிருந்தாள் அவள். அவர்கள் வந்ததும் எழுந்து நின்றாள். ''அம்மா, அத்தான் வாறார்...'' என்று அடுக்களையை நோக்கிக் குரல் கொடுத்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்தாள். அவளை என்றும் அவன் கண்டிருக்கின்றான். ஆனால், இன்று அவளைப் பார்க்கும் போது அவனுக்கு வேறொருபெண்ணாக அவள் தெரிந்தாள். அவனுக்குப்பேசப் பட்ட பெண் என்ற நினைவு ஏனோ அவனுள் எழுந்தது. இப்படிப்பட்ட நினைவு முன்பொருபோதும் அவனுக்கு ஏற் பட்டது கிடையாது. சரோசாவோடு முன்பு அவன் பேசி யிருக்கின்றான். சண்டை பிடித்திருக்கின்றான், அப்படி யிருந்தும் இன்று ஏன் அவன் உள்ளம் வித்தியாசமாக கற் பனைகளில் சிக்கித் தவிக்கிறது? அவள் எழுந்து செல்கின்ற அழகை அவன் இரசித்தானா?

தந்தையைப் போல சரோசா நல்ல சிவப்பு. செல்வ மாக வளர்ந்தவள். அதனால் சற்றுப் பருமனாக இருந் தாள். அவலட்சணமான பருமனல்ல. அழகிதான்.

அவன் புதியதொரு மனிதன் போலத் தலைவாசலில் இருந்த கதிரையொன்றில் அமர்ந்தான். மாமா திண்ணை குந்தில் அமர்ந்து கொண்டார். அடுக்களைக்குள் இருந்த மாமியும், ''தம்பி ராசனே...!' எங்களையெல்லாம் மறந் திட்டாய்'' என்றபடி வெளியே வந்தாள். மாமியின் குர லில் என்றுமில்லாத வாத்சல்யம் இருப்பதாக அவனுக் குப்பட்டது.

வீட்டு ஹோலில் ரேடியோ மேசை முன் அமர்ந்து ரேடியோவைத் திருப்பியபடி சரோசா அவனைப் பார்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை அவன் கண்டான். முகம் கழுவிப் பவுடர், திலகம் இட்டு அவள் முகம் செந்தாமரையாக விளங்கியதா? அவள் அவனைப் பார்த்து புன்னகைத்து விட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். அவன் மாமியைப் பார்த்தான்.

''அப்படியொன்றுமில்லை மாமி... ஒரே அலுவல்'' என்றான் சிவராசா.

''கொப்பர் காணியை ஈடு வைக்கிறாராமே...? சொந்தம் பந்தம் என்று இருக்கிறது உதவத்தான். படிக்கிற பிள்ளையனுக்கு கட்டாயமாக உதவ வேண்டும். உன்ரை மாமி தான் ஒற்றைக் காலில் நின்று உன்னைப் படிப்பிக்க வேண்டும் என்றாள். ஆனால் உன்ரை கொய்யா பிடிவாதமாய் மறுத்திட்டார். நான் ஆர்?'' என்று கூறிவிட்டு தம்பிராசா அவனைப் பார்த்தார். அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''ஐயான்ரை குணத்தை உங்களுக்குத் தெரியாதே?''

''அதாலேதான் சும்மா இருக்கிறன்... நான் கொடுத்த காணியிலை எல்லாத்தையும் வித்து முடிச்சு இப்ப நாலு பரப்புத்தான் மிச்சம். அதையும் ஈடு வைச்சாச்சு. நாளைக்கு ஒவிசியன் குடி எழும்பச் சொல்லுவான். நடுறோட்டிலதான் நிக்க வேண்டும். சரி என்ரை காசு சும்மா வேண்டாம். கடனுக்குக் கேட்கக் கூடாதே? உதவ மாட்டனே?'' தம்பிராசா கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது.

''சரோசாவுக்கு நல்ல இடத்திலை பார்த்து கலியாணம் செய்யிறதுக்கு என்று இருக்கிற காசை உன்ரை படிப்புக்கு உதவலாம் என்று பார்த்தம். ஒண்டுக்கைஒண்டு கொய்யாவுக்குப் பிடிக்கவில்லை'' என்று மாமி குமுறினாள். அவன் எதுவும் பேசாது இருந்தான். பலன் கருதா உதவியைத் தான் அவன் தந்தை எதிர்பார்க்கின்றார். ஆனால் இன்றைய உலகில் அது சாத்தியமல்ல என்பது அவனுக்குத் தெரியும். தோட்டக்காரனைப் பொறுத்தளவில் மிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கின்ற ஒவ்வொரு பணமும் திட்டமிட்ட சேமிப்பே. காணி, வீடு, சீதனம் என்ற இலக்குகளுக்காகத் தேடப் படும் சேமிப்பு.

மாமா உதவிவிட்டுப் பலனை எதிர்பார்ப்பதைப் பிழை யென்று அவன் சொல்ல மாட்டான். தன்மானத்திற்காக அந்த உதவியை வேண்டாம் என்று அவன் தந்தை மறுப் பதையும் தவறென்று அவன் கூறமாட்டான்.

''ராசனுக்கு தேத்தண்ணி வைத்திவா...''

''சரோ... அத்தானுக்குக் கோப்பி வைத்து'' என்ருள் மாமி.

சரோசா எழுந்து போவது தெரிகின்றது. 'வெட்கம் கெட்ட மனமே. நீ இன்று ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கின்ருய்? சரோசாவை உனக்குத் தெரியாதா? அவளை இன்று மட்டுமா நீ பார்க்கின்ருய்?' பின்னிவிட்ட கூந்தல் இடைக்குக் கீழ் தொங்கியது. அவள் அசைந்து நடக்கும் போது அது மெல்லெலன ஆடியது. 'என் இதயம் ஏன் இப்படி அடித்துக் கொள்கின்றது? எனக்கு என்ன பிடித்தது?'

வாசலில் தம்பிராசாவை யாரோ கூப்பிட்டார்கள். அவர் எழுந்து வாசலுக்குப் போஞர்.

''இரு தம்பி... மாடு வந்திருக்கும்... கண்டு பாலைக் குடிச்சிடும்... கட்டிப் போட்டு வாறன்'' மாமி வளவுக் குள் போனுள்.

அவன் உள்ளே எழுந்து சென்று ரேடியோ மேசை முன் அமர்ந்து கொண்டு ரேடியோவைத் திருகிறன். அவன் கை ரேடியோவைத் திருகிய போதிலும் அவன் மனம் அதில் லயிக்கவில்லை. சற்று முன் இதில் தான் சரோசா அமர்ந்திருந்தாள். இதிலிருந்து கொண்டுதான் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

சரோசா கோப்பியுடன் வந்தாள். அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவளிடம் இன்று ஏதோ விசேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அழகும், கவர்ச்சியும் சூடி கொண்டிருப்பதாகப்பட்டது. அரைப் பாவாடையும் பிளவுசும் அணிந்திருந்தாள். அளவுக்கு மீறிப் பூரித்திருந்த அவள் அங்கங்கள் அவன் கண்களை முட்களாகக் குத்தின. அவள் முகத்தில் படிந்த அவன் விழிகள் உவள் உடலின் மேடு பள்ளங்களில் உலாவிய போது அவள் சிவந்து போனுள்.

''என்ன அத்தான்...?'' என்று கேட்கவும் செய்தாள். அமைதியான ஓடையில் கல்லொன்று வீசப்பட்டது. 'உள்ளமே என் இப்படி நடந்து கொள்கின்றுய்? எத்தனை ஆண்டுகளாக அவள் உன்னேடு பழகியிருக்கின்றுள். அப்போதெல்லாம் இல்லாத உணர்வுகள் இன்று மட்டும் எப்படி வந்தன?' அவன் உடல் மெதுவாகக் கொதிக்கத்தொடங்கியது. அவன் தன்னைச் சமாளித்துக் கொள்ள முயன்றுன். கண்களைத் தாழ்த்திக் கொண்டான்.

கோப்பியை அவன் முன் வைத்தாள் சரோசா. அவன் கோப்பிக் கிளாசை எடுத்துக்கொண்டான்.

''அத்தான்'' என்றுள் அவள். என்ன என்பது போல அவன் நிமிர்ந்து பார்த்தான். அவள் விழிகள் ஆவலோடு அவனைப் பார்த்தன. ஓராயிரம் கனவுகளை அவ்விழிகள் தேக்கியிருந்தன.

''யூனிவேசிற்றிக்குப் போறவை கெட்டுப் போயிடுவினமாம்... அங்கை ஆண்களும் பெண்களும் சகசமாகப் பழகுவினமாம்...'' என்றுள் அவள்.

''அதுக்கென்ன சரோ?'' என்றுன். அவள் அவனை வியப்போடு பார்த்தாள்.

''அப்ப நீங்களும் அப்படி...?''

''நான் அப்படிப் போகமாட்டேன். என்னை எச் சூழ்நிலையும் கெடுத்துவிட முடியாது. நான் படிக்கத்தான் அங்கை போறன்.''

இவற்றைக் கேட்டதும் அவள் முகம்மலர்ந்தது. அந்த மலர்ச்சிக்கு அர்த்தம் என்ன? அவன் இப்படியெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக் கூடாது. அவனைச் சுற்றி ஆயிரம் கனவுகளைப் படரவிட்டுவிட்டு அவன் குடும்பமே காத்திருக்கின்றது. அவனுல்தான் எல்லாருக்கும் நல்வாழ்வு கிடைக்கும் என அவன் பெற்ருேர் நம்புகின்றனர். அவனுல் கரைசேர்க்கப் படத் தயாராக இரண்டு குமருகள் உள்ளன. அவன் கடமையைச் சரிவரச் செய்யப்பிறந்தவன். 'மனமே அமைதி கொள்.'

''எங்கை மாமியைக் காணவில்லை?'' என்ருன் அவன்:

''ஏன் என்னேடு பேசக் கஷ்டமாக இருக்கிறதா?'' என்ருள் சரோசா.

''அப்படியில்லை சரோ... பயமாக இருக்கிறது......'' என்று அவன் சிரித்தான். அவளும் முறுவலித்தாள்.

''சிவநாதன் எங்கே?''

''எங்கையாவது விளையாடப் போயிருப்பான்...'' என்ற சரோசா தொடர்ந்தாள்: ''அத்தான் எங்களையெல்லாம் யூனிவேசிற்றிக்குப் போனுல் மறந்து விடமாட்டியளே?''

''இல்லை'' என்ருன் அவன்.

தம்பிராசா வருவது தெரிந்தது. சற்று நேரம் அவருடன் இருந்து பேசிவிட்டு வீட்டிற்குப் போனுன்.

அன்று இரவு வெகுநேரமாகத் தூக்கமின்றித் தவித்தான். நினைவெல்லாம் சரோசாவைச் சுற்றியே சுழன்றது. அவன் நினைவில் சரோசா ஒரு போதும் தாக்கத்தை ஏற்படுத்தியவளல்லள். ஆனுல், இன்று அவள், அவன் உள்ளம் எல்லாம் பரவி நின்ருள்.

அக்காவும் தங்கச்சிமாரும் அவன் கண்களின் முன் தோன்றினர். 'உங்களுக்கு நல்லதொரு வாழ்வை நான் தருவேன், அக்கா.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.

மலைநாட்டின் பயங்கர அழகை நமக்குக் காட்டிய படி மூக்கி முனகிக்கொண்டு புகையிரதம் விரைந்தது. அதிகாலைக்குரிய குளிர் காற்று வேகமாக உடலில் பட்டு மெல்லிய நடுக்கத்தை உண்டாக்கியது. இரவு முழுவதும் கும்மாளமிட்டபடி பாடிச் சத்தமிட்டு வந்த பல்கலைக்கழகத்திற்குக் காலடி எடுத்துவைக்கும் மாணவர் கூட்டம் பொல்காவலையில் கண்டிப் புகையிரதத்தில் ஏறியதும் பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டது. அவனுடன் அவனது கொம்பாட்மென்டில் பல மாணவ மாணவிகள் இருந்தனர். எல்லாரது முகங்களிலும் கொலைக்களத்திற்குச் செல்கின்ற பயப்பிராந்தி குடிகொண்டிருந்தது. எவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. பல்கலைக்கழகத்திற்கு வரவிருக்கின்ற புதிய மாணவர்களைப் பழைய மாணவர்கள் வரவேற்கக் காத்திருக்கின்றார்கள் என்ற நினைவு எல்லோரது சிந்தையிலும் பூதாகாரமாகக் கவிந்து பயமுறுத்திக் கொண்டிருந்தது.

சிவராசன் இதற்கு விதிவிலக்கல்லன். கொம்பாட்மென்டின் யன்னலில் முகத்தைப் பதித்துக்கொண்டு மலைச்சாரலின் செங்குத்துச் சாய்வில் வெண்புகார் திரையாகப் படிந்திருக்கின்ற அழகைப் பார்த்துக்கொண்டிருந்தான். பள்ளத்தாக்கின் அதலபாதாளத்தில் வெள்ளி இரசமாக அசைகின்ற சிற்றாறின் தெளிவு, மென்புகாரிப் படைப்புலத்தில் பாம்பாகத் தெரிந்தது. மனிதனின் இடைவிடாக் கடின உழைப்பினைக் காட்டியவாறு, படிப்படியாக மலைச்சாய்வில் நீர்ப் பசுமையுடன் அமைந்திருந்த நெல் வயல்களும், ஆங்காங்கு சிறுசிறு திட்டுகளில் தென்னை மரங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையே உருவாகியிருந்த வீடுகளும் அதிகாலையின் அற்புத அழகினை விரித்தன. இவற்றையெல்லாம் உண்மையில் முதன்முறை அவன் கண்டபோது ரசிக்கின்ற மனநிலையில் இருக்கவில்லை. அவன் விழிகள் இவற்றை நோக்கியபோதிலும் அவன் உள்ளத்தில் வீட்டாரைப் பிரிந்து வருகின்ற ஏக்கமும், பல்கலைக்கழகத்தின் 'ருகிங்' என்ற பயங்கர வரவேற்பை எண்ணியதால் ஏற்பட்ட பயமும் நிறைந்திருந்தன.

'ஐயா இப்போது எழுந்திருப்பார். சுருட்டொன்றைப் புகைத்தபடி தலைவாசல் குந்தில் அமர்ந்திருப்பார். அம்மா நிச்சயமாக இரவு தூங்கியிருக்கமாட்டா. பெருமிதமும் என் பிரிவும் அவளைத் தூங்கவிட்டிருக்கா. என் சகோதரங்கள் நிம்மதியாகத் தூங்கியிருப்பார்கள். என் அக்கா......? அவளுக்குத் தான் எவ்வளவு மகிழ்ச்சி?...தன் வாழ்வே மலர்ந்ததுபோலப் பூரித்துப் போனாளே?...சரோ...சரோ... அவள் நினைவு ஏன் எனக்கு இப்ப ஏற்படவேண்டும்? அத்தான் யூனிவேசிற்றிக்குப் போனால் மறந்துவிடமாட்டியளே...?எங்கை மாமியைக் காணவில்லை?ஏன் என்னோடு பேசக் கஷ்டமாக இருக்குதா?...சரோ இப்படியெல்லாம் பேச எங்கு கற்றாள்...?' அவனுக்கு மெதுவாகச் சிரிக்க வேண்டும் போலிருந்தது.

"என்ன மச்சான்... உன்பாட்டிற்குச் சிரிக்கிறாய்?... எனக்குப் பயத்தால உடல் நடுங்குது. நீ என்னென்னடால்...?" என்றான் என் அருகில் அமர்ந்திருந்த கோபாலரத்தினம். அவனுடன் ஒன்றாகக் கல்லூரியில் படித்தவன். கல்லூரியிலிருந்து அவர்கள் அறுவர் அந்த ஆண்டு பல்கலைக்கழகத்திற்குக் கலைப் பிரிவிற்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள்.

32908

"ஒன்றுமில்லை..." என்றான்.

இருந்தாற்போல அவர்கள் கொம்பாட்மென்டில் பரபரப்பு நிறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதோ...நாங்க இறங்கவேண்டிய ஸ்ரேசன்...''

அவன் அடி வயிற்றிலிருந்து வேகமாக ஏதோ ஒன்று உச்சியை நோக்கி எழுந்தது.

இனிய கனவுகளோடு, பயமும் நெஞ்சமெல்லாம் நிறைந்து வழிய சரசவி உயன புகையிரத நிலையத்தில் கால்களைப் பதித்தார்கள். அவனோடு ஏறத்தாழ நாற்பது மாணவர்கள் இருந்தனர். எல்லாரது விழிகளிலும் கொலைக் களத்திற்குச் செல்கின்ற பயப்பிராந்தி குடிகொண்டிருந் தது. ஒவ்வொருவரையும் பயத்தோடு பார்த்துக்கொண்டு தங்களது சூட்கேசுகளையும் காட்போட் பெட்டிகளையும் இறக்கிவைத்தனர்.

மலைநாட்டிற்கேயுரிய அதிகாலைக் குளிர் காற்று அவர் களைத் தழுவிச் சென்றது. வடக்கே உயர்ந்து பரந்த மலைத் தொடர்களில் பல்கலைக்கழகக் கட்டிடங்கள் தெரிந்தன. அவற்றிற்கும் அப்பால் மலை உச்சிகளில் வெண் முகில் வெண்திரையாகக் கவிந்துகிடந்தது.

''என்ன மச்சான், உன்ரை தேகம் நடுங்குது...'' என்று சிவராசனை மெதுவாகக் கேட்டான் கோபாலரத்தினம்.

''குளிர் கோபால்...'' என்றான் அவன்.

''வீணாய் பயப்படாதை மச்சான்...உவங்கள் அப்படி என்ன செய்துபோடுவான்கள்... அழகை ரசிக்காமல்...... பயந்து சாகிறாய்...''

அவன் அவனை ஏறிட்டுப் பார்த்தான். அவன் சிரிக்க முயன்றான். அவன் விழிகள் ஒரு பக்கமாகச் சென்றன.

''மலைநாட்டின் அழகை நான் சொல்லவில்லை...அதோ பார்...பட்டாம்பூச்சிகளாக பேயறைஞ்சது போல நிக்குது கள்...அவர்களைத்தான்...யூனிவேசிற்றி லைவ் சொர்க்க மாத்தான் இருக்கும்...'' என்றான் கோபால்.

சிவராசனின் கண்கள் அவன் பார்த்த திசையில் படிந் தன. அழகுக் கும்பல் [illegible] பலவர்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலங்கள் மின்னின. பெண்கள், குமருக்கேயுரிய பளபளப் போடு அவர்கள் நின்றிருந்தார்கள். சேலைகள்... ஸ்கேட்... கவுன்கள்... ரைற்றுகள்... பலபல ஆடைகள்... பின்னல்கள்... குதிரை வால்கள்... அவன் கண்களை வெகு சிரமத்துடன் திருப்பிக்கொண்டான்.

''உனக்கு எல்லாமே அழகுதான்ரா... நீ படிக்க வந்தியா, அல்லது...''

''ரசிக்கவும் வந்தேன்...'' என்முன் கோபால்.

''அதோ பார் சுவரோடு ஒதுங்கி நிற்கிறுளே, அவள் நமது ஊர்... பெயர் வசந்தி... கொஞ்சம் தலைக்கனம்... ஆனுல், நல்ல வடிவான பெட்டை....'' என்முன் கோபால்.

சரசவி உய்ன புகையிரத நிலையத்தின் பக்கச் சுவ ரோடு ஒரு பெண் நின்றிருந்தாள். மற்றவர்களிடமிருந்து விலகி நிற்பது போலக் காணப்பட்டாள். ஒடிந்துவிழுமாப் போலக் கவர்ச்சியாகக் காணப்பட்டாள். செந்நிற நைலெக்ஸ் சாறி ஒன்றை அவள் அணிந்திருந்தாள். ஒழுங் காகப் பின்னி விடப்பட்ட கூந்தல் சற்றுச் சிலும்பி நின் றது. சிவந்த அவள் முகத்தில் காலை வெயில் பட்டுத் தெறித்தது. அவள் தனது தலையைச் சற்று அசைத்தபடி தன் கன்னத்தில் ஒதுங்கிய கூந்தலை ஒதுக்கிவிட்டாள். ஒதுக்கிய வேளையில் உயர்ந்த அவள் வலக் கரத்தின் பொன் நிறத்தோடு மூன்று நான்கு தங்க வளையல்கள் போட்டியிட்டன. மின்னியது கரமா? கர வளையலா?

அவன் அழகிதான்.

''நாம இனிப் போவம்...'' என்முன் கோபால்.

''வா எல்லாரும் போகிமுர்கள்... நமது ஹோலைத் தேடிப் பார்ப்பம்... மார்க்கஸ் பெர்னண்டோ ஹோல் நமக்கு... அது எங்கை இருக்கோ...''

''போற வழியில ஆராவது சீனியேர்ஸ் கண்டால் போச்சுது... ருகிங் பண்ணிப் போடுவான்கள்... கார் ஒன் றைக் கயர் பண்ணிப் போவமா...?'' என்முன் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வின்ன செலவு...கன காசு கேட்பான்கள்...கிட்டத் தான் இருக்கும்...நடந்தே போவம்...இடமும் பார்த்த தாக இருக்கும்..."

சிவராசன் தன் சூட்கேசைக் கையில் எடுத்துக்கொண் டான். அவனைப் போன்று பலரும் புறப்பட ஆயத்த மானார்கள். பலர் கார்களை வாடகை பேசி அமர்த்திக் கொண்டு புறப்பட்டனர். எல்லாருக்கும் கார் கிடைக்க வில்லை. எனவே, எல்லாரும் புகையிரத நிலையத்தைவிட்டு வீதியில் பயத்தோடு இறங்கினார்கள்.

சரசவி உயன புகையிரத நிலயத்தின் பழைய பெயர் புதிய பேராதனை. இந்நிலயத்தில் இருந்து கிழக்குப் பக்கத் தில் வளைந்து செல்லும் வீதி பல்கலைக்கழகத்தின் விளை யாட்டு மைதானத்திற்கும் 'சயன்ஸ் புளொக்'கிற்கும் இடையாக விரைந்து சென்று கலகா வீதியில் ஏறுகின் றது. கலகா வீதியே பல்கலைக்கழகத்தின் முதுகெலும்பு. கலகா வீதியின் இருமருங்கும் பல்கலைக்கழகக் கட்டிடங் களும் விடுதிகளும் விரிவுரையாளர்களின் பங்களாக்களும் அமைந்திருக்கின்றன.

அழகிய சூழலில் மனதைக் கவரக்கூடிய வகையில் பேராதனைப் பல்கலைக்கழகம் அமைந்திருக்கின்றது. அமைதி யும் எழிலும் சூழ்ந்த பிரதேசம். அவர்களால் இவற்றை இரசிக்கமுடியவில்லை. இரசிக்கக்கூடிய சூழ்நிலையில் அவர் கள் இருக்கவில்லை.

பல்கலைக்கழகத்திற்கு முதன்முதல் வருகின்ற புதிய மாணவர்களைப் பழைய மாணவர்கள் வரவேற்கின்ற பாணி அலாதியானது. 'ருகிங்' என்ற 'வரவேற்பு' புதிய மாணவர்களை முதல் இரு வாரங்களும் கதிகலங்க வைத்து விடும். ஏன் படிக்க வந்தோம் என்ற மனநிலைக்கு அவர்கள் வந்துவிடுவார்கள்.

இகில் நிறைந்த காலை வேளையில் சிவராசனும் அவ னொத்த மாணவ மாணவிகளும் தமது விடுதிகளைத் தேடி

வந்துகொண்டிருந்தனர். நடந்து வந்தார்களே, அதுதான் அவர்கள் செய்த தவறு. அவர்கள் வந்துகொண்டிருந்த வீதியின் வலது பக்கத்தில் விளையாட்டு மைதானம் பச்சைக் கம்பளமாகக் காட்சி தந்தது. தொழிலாளர்கள் சிலர் வளைவான கத்தியொன்றை வைத்துப் புல் வெட்டிக் கொண்டிருந்தார்கள். காற்றில் உயர்த்தி லாவகமாக அவர்கள் கரத்தை வீசி புற்களை வெட்டினர். எவ்வளவு புல் வீணே வெட்டப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இப்படி இருந்தால்...? அங்கு புல்லுக்கும் காசு. வீதியின் இடது பக்கத்தில் உயர்ந்தமைந்த கட்டிடங்கள் காணப்பட்டன. அக் கட்டிடங்கள் விஞ்ஞானப்பிரிவு விரிவுரைக் கட்டிடங்கள்.

அவர்கள் சென்றுகொண்டிருந்த வீதி கலைா வீதியில் சென்று சந்திக்கின்றது. அச் சந்தியின் இரு மருங்கும் இரு பெரிய விடுதிகள் காணப்பட்டன. ஒன்று ஜெயதிலகா மண்டபம். மற்றையது அருணாசலம் மண்டபம்.

சிவராசனின் கை கனத்தது. சூட்கேசைக் கரம் மாற்றிக் கொண்டான்.

அவர்களுடனேயே வசந்தியும் வந்தாள்.

"அங்கை பார்...சிவா..." என்றான் கோபால்.

"பலபோர் சந்தியில குறுக்கை நிக்கினம். எங்களைப் பார்த்தபடி நிக்கிறான்கள்..."

"ஐயோ...சினியோர்ஸ்..." என்று ஒரு பெண் வீரிட்டாள்.

"எனக்கு தலையைச் சுத்துது..."

"இப்ப என்ன செய்யிறது...?"

"ஓடுவமா?..."

அவர்கள் கால்களெல்லாம் சோர்ந்தன. கோபால் கூறினான்:

"அவங்கள் சொல்லிறதைச் செய்வோம்...நிச்சயமாக அடிக்கமாட்டான்கள்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோ சந்தி நெருங்குகின்றது.

"ஆங்கிலப் படங்களில் வருகின்ற வில்லன்கள்மாதிரி நிக்கிருன்கள்...அவங்களின்ர மீசையும் தாடியும்...உடுப்பும்..." என்று கோபால் முணுமுணுத்தான். இருந்தாற் போல "கூய்..." என்ற ஒலி எழுந்தது. அச்சத்தம் இவ்வளவு பயங்கரமானதா?... சிங்கங்களின் கர்ச்சனை கேட்டால் சிறு முயல்கள் இப்படித்தான் நடுங்குமோ?...

"வாருங்கள்...வாருங்கள்..." என்ற வரவேற்பு எழுந்தது. அந்த அழைப்பொலியில் இருந்த கேலியைப்போல ஒரு உணர்ச்சியை சிவராசன் என்றும் கேட்டதில்லை. நக்கல் பாஷை இதுதானே?

குரல் வந்த திசையில் அந்தக் கூட்டத்திற்கே தலைமை தாங்குபவன் போல முழுத்தாடிக்கார மாணவன் ஒருவன் நின்றிருந்தான். கட்டையாக உருண்டு திரண்டு நின்றிருந்தான்.

"எல்லாரும் வரிசையாக நில்லுங்கள்..." என்று இன்னெரு குரல் எழுந்தது. குரல் வந்த திசையில் இன்னெரு அரைத்தாடி. "கூய்" என்ற ஒலி மீண்டும் ஒலித்தது. அருணுசலம் விடுதியின் வீதிக்கு இறங்கும் சரிவில் பல பழைய மாணவர்கள் இவர்களை நோக்கி இறங்கி வந்தார்கள். அச் சரிவில் அவர்கள் இறங்கிவந்த வேகம்?...றகிங் ஆரம்பமானது.

"பிளடி பிறசேஸ்..." என்முன் ஒருவன்.

"பிறஸ்சேசோ...? பிறஸ்சியேஸ்..." என்று பெண்களைப் பார்த்துக் கூறினன் இன்னெருவன். அவர்கள் எல்லாரும் வரிசையாக விறைத்து நின்றனர்.

"உன் பெயரென்ன?..." என்று சிவராசனை நோக்கி ஒருவன் கேட்டான்.

"சிவராசன்..." என்முன். தொண்டைக் குழியில் ஏதோ அடைத்துக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சிவராசனோ?... நீ எப்படியடா என் பெயரை வைத்திருக்கலாம்?...ஒரு கொனறபின் சீனியரின் பெயரை,கேவலம் பிளடி பிறஸ்சேஸ் ஒருவன் எப்படி வைச்சிருக்கலாம்? சகிக்கமுடியாது...மன்னிக்க முடியாது...நீ பெயரை மாற்றிக் கொள்...'' என்று உறுமினன் அவன்.

''சரி...'' என்ருன் அவன்.

''சரி சேர் என்று கூறவேண்டும்...''

''சரி சேர்...''

''நீ ஏன் உன்ரை லோங்சிற்கு பட்டின் ஒன்றும் பூட்டவில்லை?...பொம்புளைப் புள்ளையள் கூட நிக்கிறது தெரியவில்லையே?...''

விக்கித்துப் போன சிவராசன் பட்டன் மாட்டப்பட்டிருக்கிறதா எனப் பார்த்தான்.கொல்லென்ற சிரிப்பொலி எழுந்தது.பழைய மாணவர்களோடு சில புதிய மாணவர்களும் சிரித்தனர்.

''பிளடி பிறஸ்சேஸ் ஒருபோதும் சிரிக்கக்கூடாது...நீ சிரிக்கிருய்...இங்காலை வாடா ஒருக்கா...உன் பெயர் என்னடா கழுதை...?''

''கோபாலரத்தினம்...'' என்று கூறியபடி முன்னல் வந்தான் கோபால்.

''நான் மட்டும் சிரிக்கேல்லை...அவயளும் சிரிச்சவை தானே...?''

''எவையள்?...''

''பொம்பிளையள்...''

''பொம்பிளையளோ?... அவை சிரிக்கட்டும்... அவை வாழ்க்கையில சிரிக்கிற காலம் மிகக் குறைவு...சிரிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கிற நேரமெல்லாம் அவை சிரிக்கட்டும்... அழவென்றே பிறந்த சாதி அது...'' என்ருன் முழுத்தாடிக்காரன்.

''நீர் வந்த உடனேயே பொம்பிளையளைப் பார்க்கத் தொடங்கிவிட்டீர் என்ன?...இவரை மெதுவாகத் தூக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிப்பாட்டுங்கள்...'' என்று உத்தரவிட்டான் தாடிக்காரன்.

அச் சந்தியில் ஒரு சிறு நீர்த்தேக்கம் அழகிற்காகக் கட்டப்பட்டிருந்தது. பாசி படர்ந்து காகங்கள் எச்சமிட்ட அசுத்த நீர் அதில் தேங்கிக் கிடந்தது. கோபாலை இரு மாணவர்கள் நெருங்கிவந்து தூக்கினர்.

''ஐயோ...'' என்று கோபால் அலறினன்.

''நான் இனிப் பொம்பிளையளைப் பார்க்கேல்லை சேர்...''

அவர்கள் செய்வதறியாது நின்றனர். கோபாலைப் பொத்தென அந் நீரில் போட்டனர்.

''நீந்தடா...''

திக்குமுக்காடியபடி கோபால் எழுந்து நின்ருன். 'பொலபொல'வெனக் கண்களிலிருந்து நீர் பெருகியது.

''இனிமேல் இதில நிக்கிற பிளடி பிறெசேஸ் ஆராவது பெட்டையளைப் பார்ப்பியளா?...யூனிவேசிற்றிக்கு இம்முறை வந்த பெண்கள் யாவரும் சீனியேசுக்குச் சொந்தமானவர்கள்...முதல் ஆறு மாதங்களும் எந்த ஒரு பிறெசேஸ்சும் 'லவ்' பண்ணக்கூடாது...சீனியேஸ் 'லவ்' பண்ணி முடிஞ்சபிறகுதான் நீங்கள்...'' என்று பிரசங்கம் செய்தான் தாடிக்காரன்.

''உமக்கு என்ன பெயர்?...'' என ஒரு மாணவியை ஒருவன் கேட்டான்.

''மிஸ் கனகப்பு...''

''அப்படியென்ருல்...?''

அம் மாணவி பயத்தால் வெடுவெடுத்தாள்:

''புஸ்பா...''

''புஸ்பா...புசுப்பாவோ?...நல்ல வடிவா இருக்கிறீர்...இந்தச் சட்டையை எங்கை வாங்கினீர்?...'' என்று அவன் மீண்டும் கேட்டான். புஸ்பா எதுவும் பேசாமல் தலைகுனிந்து நின்ருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் கேட்கிறன்...நீ பேசாமல் நிக்கிறாய்?...பதில் சொல்லாட்டில் கட்டித் தூக்கிக் குளிப்பாட்டுவோம்..." என்று உறுமினான் அவன்.

"நான் வடிவா இருக்கிறனே?..."

"அட இங்கை பார்...சிவப்பு அழகியே முன்னால் வருக..." என்றபடி அரைத் தாடிக்காரன் வசந்தியை நோக்கினான். எல்லாரது கவனமும் வசந்தி பக்கம் திரும்பியது. அவள் பேயறைந்தவள் போல நின்றாள்.

"உமது பெயரென்ன...?"

"வசந்தி கந்தையா..."

"நான் வடிவா இருக்கிறனே?..." என்று கேட்டான் அரைத்தாடி.

"ஓம்..." என்றாள் பயத்தோடு வசந்தி.

அவன் தனது சேட் கொலரைத் தூக்கிவிட்டுக்கொண்டான். குறுக்கும் நெடுக்குமாக ஒரு ராஜநடை நடந்தான். பின் கூறினான்:

"அப்ப உமக்கு என்னைப் பிடிச்சுக்கொண்டது... நாம் காதலிப்போமா?..."

அப்பெண்ணின் கண்களிலிருந்து நீர் அருவியெனக் கொட்டியது. நிலத்தைப் பார்த்தபடி நின்றாள். ஏனோ சிவராசனின் உடல் பதறியது. அப்படியே பாய்ந்து அந்தத் தாடிக்காரனின் கழுத்தை நெரித்துவிடவேண்டும்போன்ற ஆவேசம். பண்புகள் நிறைந்த ஒரு சமூகத்தின் பிரதிநிதிகளாக வரவேண்டிய பட்டதாரி மாணவர் கூட்டம் பல்கலைக்கழகத்தில் ஏன் இப்படி நடந்துகொள்கிறது? இவர்களை நம்பித்தான் நாளைய இலங்கையின் ஏற்றமும் வீழ்ச்சியும் அமையப் போகின்றது. ஒழுக்கம் நிறைந்த ஒரு சமூகத்தை ஆக்கவேண்டிய இவர்கள் நடந்துகொள்ளும் முறை இதுதானா? சகோதரிகளோடு பிறக்காதவர்களைப் போல நடந்துகொள்கின்றார்களே?

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி சரி அழாதையும்...'' என்ற தாடிக்காரன் சிவராசன் பக்கமாகத் திரும்பினான். அவன் பார்வை சிவராசனுக்குப் பின்னால் நின்ற ஒரு மாணவன் மேல் பதிந்தது.

''டேய் தடியா, இங்கை வா...பேர் ஊர் என்னடா தடியா?...''

எனக்குப் பின்னால் நின்ற மாணவன் முன்னால் வந்தான்.

''என் பெயர் தெய்வசிகாமணி பொடியா...'' என்றான். இப்பதில் பழைய மாணவனின் கோபத்தைக் கிளறிவிட்டது.

''பிளடி பிறெசேஸ்...'' என்று உறுமினான்.

''பிளடி சீனியேஸ்...'' என்றான் தெய்வசிகாமணி.

எல்லாரும் ஒருகணம் திகைத்துநின்றனர். என்ன நடக்கப் போகுதோ?

''இவனை...''

அவ்வளவுதான். சிகாமணி வேகமாக ஓடிப்போய் அந்த நீர்த்தேக்கத்தில் தானாகவே விழுந்து எழுந்தான். ''இன்னும் ஏதாவது செய்யவேணுமா?...'' என்று கேட்கவும் செய்தான்.

தாடிக்காரன் கோபத்தோடு எழுந்தான்.

''எல்லா மாணவிகளும் தங்களது சூட்கேசுகளைத் தூக்கித் தலையில் வைத்துக் கொள்ளுங்கள்... நல்லா நெளிஞ்சு நெளிஞ்சு நடந்து போகலாம்...எல்லா மாணவர்களும் நல்லாக் களைச்சுப் போய் இருக்கிறியள்...ஆதலால், பெரியீர், ஒரு தடவை நீவிர் எல்லீரும் இத்திருக்குளத்தில் திருநீராடிப் போகக்கடவீர்...எல்லாரும் வரிசையாக் குளத்தில் விழுந்து நீந்துங்கடா...''

சொன்னபடி யாவும் நடந்தன. விறைத்து நடுங்கியபடி வீதியோரத்தில் அவர்கள் நின்றிருந்தார்கள். கலகா வீதியில் குறுக்கும் நெடுக்குமாகக் கார்கள் சென்றன. கார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் இருந்தவர்கள் அவர்களைப் பார்த்துச் சிரித்தபடி சென்றனர்.

"நாங்கள் போகலாமா...?" என்று சிகாமணி கேட்டான்.

"கொஞ்சம் பொறடா ராஸ்கல்..."

"யூனிவேசிற்றியில் மீசை வைச்சிருக்கிற ஏகபோக உரிமை சீனியேசுக்கு மட்டுமே உண்டு...புதியவர்களுக்கு இல்லை...அவர்கள் விரும்பினால் அரைவாசி மீசை மாத்திரம் வைத்துக்கொள்ளலாம். ஆதலால்..."

"எனக்கு மீசையில்லை..." என்றான் தெய்வசிகாமணி.

"சுறுவல் தடியா...உனக்கு மீசை இருந்தாலும் தெரியவே போகுது..."

சிவராசன் தனது இள அரும்பு மீசையைத் தடவிக் கொண்டான். எவ்வளவு ஆசையோடு வளர்த்தான்.

ஒரு பழைய மாணவன் கையில் றேசருடன் தோன்றினான்.

"டேய்...யோக்கர்...இங்கை வா...எல்லாற்றை மீசையிலும் பாதி பாதி எடுத்துவிடு..."

சிகாமணி எதுவும் கூறாமல் றேசரை வாங்கிக்கொண்டான். சர்...சர்...சர்...மீசை வைத்திருந்த மாணவர்களின் ஒருபக்க மீசை சரி. சிவராசனுடையதும்தான். அவனுக்கு அழவேண்டும் போல இருந்தது. அவன் அழமாட்டான்... ஒருக்காலும் அழமாட்டான்.

"மீசைகளை மட்டும்தானா?..." என்று சிகாமணி கேட்டான்.

"நீ ஒரு யோக்கர்..."

"திங் யோக்கர்..."

"எல்லாரும் போகலாம்...மீண்டும் சந்திப்போம்... ..டாட்டா..."

ஈரம் சொட்டச் சொட்ட, அரை மீசைக் 'கண்றாவி' யோடு கலகா வீதியில் பதின்மூறு மாணவர்கள் நடந்துசென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். அவர்கள் இதயங்களில் ஆத்திரம் எரிமலையாகக் குமுறியது.

இதுதான் பல்கலைக்கழகமா?

## 4.

மார்க்கஸ் பெர்ணண்டோ மண்டபம் உச்சி தட்டையாக்கப்பட்ட ஒரு குன்றின் மீது அமைந்துள்ளது. இம்மண்டபத்திலிருந்து பல்கலைக்கழகத்தின் பெரும்பகுதியைத் தெளிவாகப் பார்க்கமுடியும். இம் மண்டபத்தின் அடிவாரத்தில் ஜேம்ஸ் பீரிஸ் மண்டபமும், அதற்கு அப்பால் கலகா வீதியின் அருகில் கில்டா ஒபயசேகரா பெண்கள் விடுதி மண்டபமும் அமைந்திருக்கின்றன. பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர் விடுதி மண்டபங்கள் ஒவ்வொன்றும் இலங்கையின் சுதந்திர வரலாற்றில் இடம்பெற்ற தேசியப் பெரியார்களின் பெயர்களைத் தாங்கியனவாக உள்ளன.

கில்டா ஒபயசேகரா விடுதிக்கு அப்பால்—

மகாவலி கங்கை மெல்லென அசைவது தெரியும். மூங்கில் மரங்கள் பற்றை பற்றையாகக் கங்கை மருங்கில் வளர்ந்திருக்க, ஆடி அசைந்து மகாவலி விரைவது கண்கவரும் காட்சியாகும்.

மார்க்கஸ் பெர்ணண்டோ மண்டப விடுதியில் சிவராசனுக்குப் பதினேராம் இலக்க அறை கிடைத்தது. அவனது அறையிலேயே சிகாமணிக்கும் இடம் வழங்கப்பட்டது. கோபாலுக்குப் பதின்மூன்றாம் இலக்க அறை. அவனுடைய அறை நண்பனாக பண்டார என்ற சிங்கள மாணவன் உள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடுதியின் மேல் மாடியில் பழைய மாணவர்கள் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் சுற்றுடலில் வளர்ந்துவிட்ட சிவராசனுக்குப் பல்கலைக்கழகத்தின் சூழல் திகைப்பையும் பயத்தையும் ஏற்படுத்தியது. மொழியால் வேறுபட்ட இரு இன மக்கள் இங்கு கூடி இருந்தனர். தேசிய நலன் கருதாது, குறுகிய அரசியல் லாபம் கருதிய அரசியல்வாதிகளால் ஏற்பட்ட வகுப்புவாதக் கருத்துக்கள் ஆழமாக வேரூன்றியிருந்த ஒரு காலகட்டத்தில் தான் சிவராசனது பல்கலைக்கழகப் பிரவேசம் அமைந்திருந்தது. அது மட்டுமன்று, சுயபாஷை மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு முதன்முதல் அனுமதிக்கப்பட்ட காலமும் அதுதான். வரலாற்றின் ஒரு படிக்கல்லாக அவர்கள் அமைந்தனர்.

ஒரு வாரம் முழுவதும் பழைய மாணவர்களின் 'றகிங்' தொல்லை நீடித்தது. சாப்பிடச் சென்றால் 'றகிங்; குளிக்கச் சென்றால் றகிங். பல தடவைகள் அரை வயிற்றோடு சாப்பாட்டு அறையைவிட்டு எழுந்து சிவராசன் வந்திருக்கின்றான். ஆனால், சிகாமணி இதற்கெல்லாம் அசையவில்லை. சொன்னபடி எல்லாம் செய்துகொண்டு ஒருபிடி பிடித்தான்.

துரதிர்ஷ்டவசமாக முழுத் தாடிக்காரனும் சிவராசனின் விடுதியைச் சேர்ந்தவனாக இருந்துவிட்டான்.

''டேய், யோக்கர் சிகாமணி, ஏன் வாயால் சாப்பிடுகிறாய்?...மூக்கால சாப்பிடடா...'' என்று உத்தரவிட்டான் சுந்தரம். அதுதான் தாடிக்காரனின் பெயர்.

''மூக்கில சளி சேர்...சாப்பிடுவது கஷ்டம்...மூக்கிற்கு கீழாலயுள்ள ஓட்டையால சாப்பிடுகிறன்...'' என்றான் தெய்வசிகாமணி. 'கொல்'லென்ற சிரிப்பொலி எழுந்தது. சுந்தரமும் சிரித்தான். ''யோக்கர்...யோக்கர்...''

இருந்தாற்போல ஒரு சிங்கள மாணவன் கட்டளையிட்டான்: ''பிளடி பிறெச்சேஸ்...கையால அள்ளி ஒருத்தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடக் கூடாது...நீங்கள் எல்லாரும் மிருகங்களின் வழித்தோன்றல்கள்...ஆதலால் உங்களுக்குக் கை கிடையாது...நாய்களைப் போலக் குனிந்து வாயால சாப்பிடுங்கள்..."

அவர்கள் திருதிருவென விழித்தனர்.பசி ஒருபுறம். அவமானம் இன்னொரு புறம்.பலருடைய கண்கள் கலங்கித் தவித்தன.

இருந்தாற்போலச் சிகாமணி "ளொள்...ளொள்...ஊ ...ஊ...ஊய்..." என்று ஊளையிடத் தொடங்கினான். அவ்வளவுதான்.எல்லாப் புதிய மாணவர்களும் அவனோடு சேர்ந்து ஊளையிடத் தொடங்கினர்.மண்டபமே இடிந்து விழும்போலச் சத்தம் நிறைந்தது.

"ஸ்ரொப் தற்...ஸ்ரொப் தற்..." என்று பழைய மாணவர்கள் கத்தினார்கள்.மண்டப வார்டன் வரும் வரை ஊளை ஒலித்தது.

"டேய் யோக்கர் சிகாமணி...ஐ வில் சீ யூ..." என்று இதற்குக் காரணமாக இருந்த பழைய மாணவன் உறுமினான்.

"ளொள்..." என்றான் சிகாமணி.

சிகாமணியால் அன்று இரவு தூங்கவே முடியவில்லை. அவனோடு ஒரே அறையில் வசித்த குற்றத்திற்காக சிவராசனும் தூங்கவில்லை.அவர்கள் நல்ல தூக்கத்தில் இருக்கும்போது யன்னலின் ஊடாக வாளி வாளியாக நீர் அவர்கள்மீது இறைக்கப்பட்டது.படுக்கை,மேசை, துணி எல்லாம் வெள்ளத்தில் மிதந்தன. மலைநாட்டுக் கடுங்குளிர். இரண்டு போர்வையால் போர்த்தாலும் அடங்காத குளிர்.அத்தகைய நிலையிற் குளிர் நீர் அபிஷேகமும் சேர இரவு முழுவதும் அவர்கள் இருவரும் மேசை மீது குந்தியிருந்தனர்.சிவராசன் அடிக்கடி சிகாமணியைத் திட்டினான்.

இரண்டாம் நாள் இரவு.பதினொரு மணியிருக்கும். அவர்கள் அறைக் கதவு படபடவென்று தட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்தபடி அவன் கதவைத் திறந்தான். ஒரு சீனியர் மாண வன் நின்றிருந்தான்.

"நீங்கள் இருவரும் உடனடியாக ரூம் நம்பர் 72க்குச் செல்லலாம்..."

"ஏன்...?"

"ஏனோ?... சுந்தரம் வரட்டாம்..."

"படுக்கப் போறம்..." என்றான் சிகாமணி.

"பிளடி யோக்கர் ஓடடா..." என்றான் அவன்.

முதல் நாள் இரவுக் குளிப்பாட்டல் சிவராசனின் நினைவுக்கு வந்தது. இருவரும் 72ம் இலக்க அறைக்குச் சென்றனர். அந்த அறையில் பல புதிய மாணவர்கள் நின் றிருந்தார்கள். பழைய மாணவர்கள் மூவர் கதிரைகளில் அமர்ந்திருந்தனர். மூவர் கைகளிலும் சிகரெட் எரிந்து கொண்டிருந்தது.

புதிய மாணவர்கள் நின்றிருந்த கோலம்? கண் கொள் ளாக் காட்சிதான்.

ஒரு மாணவன் சாறம் மட்டும் அணிந்திருந்தான். இன் னொரு மாணவன் சேட் மட்டும் அணிந்திருந்தான். ஒரு மாணவன் குஸ்திப் பயில்வான் போல பென்ரர் மட்டும் அணிந்திருந்தான். பிறிதொரு மாணவன் லோங்சிற்கு மேல் பென்ரர் கட்டியிருந்தான். இன்னொரு மாணவன் கௌபீனம் மட்டும். இன்னொரு மாணவன் அதுவுமில்லா மல் நின்றிருந்தான்.

இக்காட்சிகளைக் கண்டதும் சிவராசன் திகைத்துப் போய் நின்றுவிட்டான். இவர்கள் ஏன் இப்படி எல்லாம் நடந்துகொள்கின்றனர்? ஏதோ பழிக்குப்பழி வாங்குகின்ற உணர்வு தெரிகின்றது. அவர்கள் அப்படி என்ன தீங்கு இவர்களுக்குச் செய்தனர்? இவர்களுக்கு இவர்களின் சீனிய மாணவர்கள் செய்ததை இவர்களிடம் பழிதீர்த்துக் கொள்கின்றார்களோ?...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைக் கண்டதும் சுந்தரம் உறுமினான்: ''யோக்கர் சிகாமணி...உடுப்புகளைக் கழட்டிப்போட்டுச் சுவரோடு நில்லும் பிள்ளாய்...''

சிகாமணி மரமாக நின்றான். துரியோதனன் சபையில் திரௌபதி நின்ற நிலை. துகிலுரியும் கட்டம். துச்சாதனனாக ஒரு பழைய மாணவன் எழுந்தான். கண்ணபரமாத்மாவைக் காணோம்.

சிவராசன் பக்கம் சுந்தரத்தின் பார்வை நிலைத்தது. அவனைத் திரௌபதியாக்க இவன் முயன்றால்...? அவன் முடிவு செய்துவிட்டான். தன் முன்னால் இருக்கிற கதிரையைத் தூக்கி...

''நீர் பெரிய பேச்சாளன் என்று கேள்விப்பட்டன்... இப்படி வந்து இந்த மேடையில் ஏறும்...'' என்று ரீப்போ ஒன்றில் ஏறும்படி கட்டளையிட்டான். சிவராசன் ஏறிக் கொண்டான். சத்தியலிங்கம் என்ற பழைய மாணவன் பேப்பர் வேஸ்ற் பாஸ்கற் ஒன்றை எடுத்து சிவராசனின் தலையில் தொப்பியாக வைத்தான். சிறீஸ், துடைப்பம் ஒன்றை எடுத்து 'மைக்' போலப் பிடித்துக்கொள்ளும்படி கொடுத்தான். சுந்தரம் ரை ஒன்றை இடுப்பில் கட்டி முன்னால் தொங்கவிட்டான். அத்துடன் லோங்சின் ஒரு காலை முழங்கால் வரை மடித்துவிட்டான். இத்தகைய அலங்காரங்களுடன் ரீப்போ மேடை மீது சிவராசன் பேச்சாளனாக நின்றிருந்தான். 'ஐயா இதற்காகவா நீங்கள் காணியை ஈடுவைத்து என்னைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினீர்கள்? தாயே உன் மகனின் இந்தக் கோலத்தை நீ கண்டால் என்ன மாதிரித் துடித்துப் போவாய்?... அக்கா உன் தம்பியைப் பார்... எனக்கு இவர்கள் கற்றுத் தரும் பாடத்தைப் பார்... இந்த வெறிநாய்களிடமிருந்து எப்படி மீளப்போகிறன்? இந்த ருகிங் நரகத்தில் இருந்து எப்படி மீளப்போகிறன்? சரோ... நீ இதைக் கேள்விப்பட்டால்?...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் விழிகள் கலங்கின.

''ம்...பேசடா...யோக்கர்...''

அவன் பேசினன்:

''அன்பான சேர்களே, ஏன் எங்களைப் போட்டு இப்படிச் சித்திரவதை செய்கின்றீர்கள்? நாங்கள் என்ன பாவம் செய்தோம்? நாளைய இலங்கையின் தலைவர்கள் நீங்கள்...''

''நிறுத்தடா...யோக்கர்...காதலைப் பற்றிப் பேச...''

''காதல்...அது புனிதமானது...தெய்வீகமானது...''

''விசரா...விசரா... ஆர் சொன்னது புனிதமான தென்று?...மண் தின்னிற உடலை மனுசன் தின்னுறது தான்ரா காதல். காமம் தான் புனிதமானது...காதல் புனிதமானதல்ல...அசிங்கமானது. போகப் போக புரிந்து கொள்வாய்...தெய்வீகமானது...காதலா?...மடைச் சாம்பிராணி...தத்துவம் தான் தெய்வீகமானது...'' என்ருன் சத்தியலிங்கம்.

''உண்மை. ஐயா சொல்வது பேருண்மை...பொன்ஞல் பொறிக்கவேண்டியது...'' என்ருன் கோபால்.

''அனுபவசாலி போல இருக்குது...முன்னுல் வா...'' என்று சத்தியலிங்கம் அழைத்தான்.

''காதலித்து அனுபவமுண்டா யோக்கர்...''

''உண்டு...''

''ஒருதலைக் காதலா?...''

''இல்லை...இருதலைக் காதல்...''

''மூன்று தலையாக மாறவில்லையா?... இப்போது நீ தான் காதலன்... சிகாமணி தான் காதலி...எங்கை ஒரு லவ் சீன் செய் பார்ப்போம்...''

''சிகாமணி ஆபிரிக்கப் பெண் போல நிக்கிருனே...'' என்று இழுத்தான் கோபால்.

''அதுதான்ரா பரிநிர்வாண நிலை... அப்படியே காதலி...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி...அன்பே...என் அஞ்சுகமே...என் காதல் பெட்டகமே...'' என்றான் கோபால்.

''நாதா...என் அத்தான்...'' என்றபடி சிகாமணி ஓடி வந்தான்.

''கண்றாவி... கட்டடா யோக்கர் சாறத்தை...'' என்றான் சுந்தரம். ''இப்போது உங்களுக்கு சில பாடல்கள் சொல்லித் தரப் போகின்றோம்... நீங்கள் எல்லாரும் சேர்ந்து பாடவேண்டும்.''

பல்கலைக் கழகத்தில் பரம்பரை பரம்பரையாகப் பாடப்பட்டு வரும் பாடல்கள் அவை. வாசகர்கள் மன்னிக்க. அப்பாடல்கள் ஏட்டில் எழுதமுடியாத கவிதைகள். வாய் மொழியாக வழங்கிவரவேண்டியவை.

அப்பாடல்கள் நீண்ட நேரம் ஒலித்தன. இறுதியில் சுந்தரம் கூறினான்:

''நீங்கள் எல்லாரும் பரம்பரை பரம்பரையாக இப் பாடல்கள் பல்கலைக்கழகத்தில் நிலைபெற்றுவரச் செய்தல் வேண்டும்...மறவாமல் ஒவ்வொரு ஆண்டும் புதிய மாணவர்களுக்குச் சொல்லிவரல் வேண்டும்...நமது யூனிவேசிற்றிச் சல் மன்னன்...சான் மன்னன்...லெகாஜைச் சக்கிரவர்த்தி, ஆர். எஸ். கிங் கலை மாமுனி பாடிய பாடல்கள் இவை...அவரால் இயற்றப்பட்டு இசையமைக்கப்பட்டுப் பாடப்படுபவை...''

''சல் என்றால் என்ன?...'' என்று கேட்டான் சிகாமணி.

''சபாஷ் மகனே...சபாஷ்...யூனிவேசிற்றில் வழங்கும் அவ்வார்த்தைகளின் பொருளை இப்போது உங்களுக்குக் கூறுகிறேன்...''

''சல் என்பது ஒருவகை மா...'' என்றான் கோபால்.

''மடையா...சல்லின் பெருமை அறியாத மூடா...'' என்று சுந்தரம் ஏசினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கன்னிப் பெண்களோடு கால நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பதைத்தான் சல் அடித்தல் என்பர்...சில பெண்கள் பேசத் தொடங்கினுல் லெக்சருக்கும் போகாமல் பேசுவார்கள்...மாணவர்கள் மட்டுந்தான் சல் அடிப்பார்கள் என்றில்லை... லெக்சரர் சிலரும் சல் அடிப்பார்கள்... 'சல் அடிப்பான் கிளாஸ் அடியான்' என்ருெரு பழமொழி... பல்கலைக்கழகப் பழமொழி. புரிகிறதா'...'' என்று கேட்டான் சிறீஸ்.

''புரிந்தது...'' என்றனர்.

'' 'சான்' என்பது கூறி விளங்கக்கூடியதல்ல... அனுபவத்தில் உணர்வது... 'லெகாஞ' என்றுல் காலொடு கால் ஸ்பரிசித்தல் எனப் பொருள்படும்...யூனிவேசிற்றி லைப்ரரியில் இருந்து படிப்பதற்குரிய நீண்ட மேசைகள் உள்ளன. இந்த மேசைகள் மத்தியில் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும்...ஒருபுறத்தில் இருப்பவருக்கு மறுபுறத்தில் இருப்பவர் யார் எனத் தெரியாது...ஆனுல், மேசையின் கீழ்ப்புறத்தில் பிரிப்பு இல்லை...ஒருபுறமுள்ளவர் மறுபுறமுள்ளவரைக் காலால் சுரண்டலாம்... ஸ்பரிசிக்கலாம்... முகம் பாராத காதலிது...லெகாஞ போட்டு அடி வாங்குவாரும் உண்டு...சுகம் வேண்டுவாரும் உண்டு...''

''அப்படியே...?எங்களை எப்ப லைப்ரரிக்குப் போகவிடுவினம்?...'' என்று கேட்டான் கோபால்.

''அவ்வளவு அவசரமாக இருக்குது...'' என்று கத்தினுன் சுந்தரம்.

'' 'ஆர். எஸ்.' என்பது...?''

''பச்சைப் பொய்களை 'ஆர்.எஸ்.' என்பர்... ரேுங் ஸ்ரேற்மென்ற் என்பது...''

''இனி எல்லாரும் போகலாம்...'' என்றுன் சத்தியலிங்கம்.

பல்கலைக்கழகத்தின் ருகிங் பிரச்சினையை எழுதுவதென்றுல் அதுவே பெருங் காவியமாக அமையும். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரம் அவர்கள் ருகிங் செய்யப்பட்டனர். ஆரம்பத்தில் அவர்களுக்குப் பயத்தையும் ஆத்திரத்தையும் தந்தது. காலகதியில் அந்த உணர்வுகள் அவர்களிடம் இல்லாது போயின. எல்லாச் சீனிய மாணவர்களும் அவர்களை ருகிங் செய்தார்கள் என்று கூறமுடியாது. அவர்களுடன் அன்பாகப் பழகிய மாணவர்கள் பலர் இருந்தனர்.

அதிகாலையில் அவர்களைப் பழைய மாணவர்கள் துயில் எழுப்புவார்கள். கதவைத் தட்டியதும் எழுந்திராவிடில் யன்னல் ஊடாக அவர்கள்மீது நீரை வாரியிறைப்பார்கள். அவர்களது விடுதியைச் சூழ்ந்து பனிப்புகார் படிந்திருக்கும். அந்தப் பனியில் புதிய மாணவர்கள் வெறும் மேனியுடன் நிறுத்தப்படுவார்கள். அவர்களைத் தேகாப்பியாசம் செய்யும்படி வற்புறுத்துவார்கள். குளிரில் உடல் நடுங்க அவர்கள் தேகாப்பியாசம் செய்வர். அப்பியாசம் முடிந்ததும் அவர்கள் மண்டபத்தில் இருக்கும் அழகிற்காகக் கட்டப்பட்ட நீர்த்தொட்டியில் ஒருவர் கால்களையும் இன்னொருவர் முதுகையும் பற்றித் தூக்கி வீசிவிடுவார்கள்.

ஒவ்வொரு நாள் அதிகாலையும் சிவராசன், சுந்தரத்தின் அறையைக் கூட்டினான். அவன் பாத்ருமிற்குச் செல்லும்போது ஒரு கையில் துவாயையும் மறுகையில் ருத்பேஸ்ரையும் சவர்க்காரத்தையும் தூக்கிக்கொண்டு வேலைக்காரன் போலச் செல்வான்.

பெண்கள் விடுதிகளிலும் ருகிங் நடந்தது. விரிவுரை மண்டபங்களிலும் வீதியோரங்களிலும் நடந்தது.

சுந்தரத்தின் கொடுமையை சிவராசனால் தாங்கவே முடியவில்லை. ஆத்திரம் அவனிதயத்தில் அனலாகக் கொதித்தது. ஒருநாள் இரவு அவர்கள் விடுதி அமைதியில் ஆழ்ந்திருக்கும்போது ஒரு வாளி தண்ணீருடன் மேல் மாடிக்குக் கள்ளன் போல ஏறிச் சென்றான். சிகாமணியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகக் கூட வந்தான்.72ம் அறை யன்னலை அடைந் தனர்.பளார்...வாளி நீர் முழுவதும் சுந்தரத்தின் மேல்.

"ஐயோ... ஆற்ரு..." என்று சுந்தரம் அலறினன். அவர்கள் அறைக்குள் ஓடிவந்து விட்டனர்.

அதன்பின் ருகிங்கில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.சீனிய மாணவர்கள் அடிக்கடி நீரில் குளிக்கத் தொடங்கினர் கள்.

என்ருலும் சுந்தரம்,சிவராசனைத் தொடர்ந்து ருகிங் செய்துவந்தான்.அவன்தான் தண்ணீர் ஊற்றியதாக அவ னுக்கொரு சந்தேகம்.

ஒருநாள் சிவராசன் .தன் சூட்கேசை மேசைமேல் வைத்து அடுக்கிக் கொண்டிருந்தான். அப்போது சிறீஸ் அவன் அறைக்கு வந்தான்.

''என்னடா அடுக்கிருய்?...''

''நான் வீட்டை போகப் போறன்...எனக்குப் படிப்பு வேண்டாம்...என்னுல ருகிங்கைத் தாங்கேலாது...'' என் ருன் சிவராசன். சிறீஸ் திகைத்துப் போனுன். பின்னர் வெளியே சென்ருன். ஐந்து நிமிடங்கள் சென்றிருக்கும். அவனது அறை வாசலில் பத்துப் பன்னிரண்டு சீனிய மாணவர்கள்.அவனுக்குப் பயத்தால் உடம்பு நடுங்கியது.

சுந்தரம் அவனை வியப்போடு பார்த்தான்.

''சிவா...இதென்ன வேலை?...'' சுந்தரத்தால் கனி வாகவும் பேசமுடியும் என்பதை சிவராசன் அன்று கண் டான்.

"சீனியேசுக்கும் யூனியேசுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காகத் தான் ருகிங்...இங்கு எல்லாரும் சமம்... வெட்கம் துக்கம் பயம் அற்றவர்களாக எல்லாரும் இருக்கவேணும்...அதுக் காகத்தான்...நீ போக வேண்டாம்...நீ இவ்வளவு பயந்த னியா?...'' என்றபடி முன்வந்து தன் வலது கரத்தை சிவ ராசன் முன் நீட்டினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது விழிகள் கலங்கின; சிவராசனின் விழிகளும் தான்.

சிவராசன் அவனது கரத்தைப் பற்றிக் குலுக்கினான்.

"பிறம் ருடே... யூ ஆ மை பிறதர்... நீ என் சகோதரன்..."

வேறொரு உலகமும் அங்கிருந்தது.

## 5.

அதிகாலை வேளைகள் மிக இனிமையானவை. போர்வையை விலக்கி விட்டு எழுந்திருக்கவே முடியாதவாறு மென்குளிர் நிலவும். ஏழுமணிக்குச் சரியாக காலைச் சாப்பாட்டிற்குரிய விடுதி மணி கணீரென ஒலிக்கும். மாணவர்கள் விரைந்து சாப்பாட்டு மண்டபத்திற்குச் செல்வார்கள். சபைக்கு முந்திட வேண்டும் என்பதை அனுபவ ரீதியாக சிவராசன் அறிந்திருக்கிறான். சற்றுப் பிந்திச் சென்றால் வெறும் பாண் அல்லது கிரிபத் மட்டும் தான் இருக்கும். முட்டை, பருப்பு என்பன முடிந்துவிட்டிருக்கும்.

விடுதிச் சமையல்காரர்கள் சிங்களவர்களாக இருந்ததால், உணவுகளில் காரம் மிகக் குறைவாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தில் உப்புப் புளிப்புக் காரத்தோடு சாப்பிட்டுப் பழகிப் போன சிவராசனுக்கு ஆரம்பத்தில் இச் சாப்பாடு நாக்கிற்கு ருசியாக இருக்கவில்லை. மாட்டிறைச்சி ஒவ்வொரு நாளும் பெரும்பாலும் இடம்பெற்றது. மாட்டிறைச்சியைச் சாப்பிட ஆரம்பத்தில் சிவராசன் தயாராக இருக்கவில்லை. காலம் செல்லச் செல்ல அதனைவிட்டால் வேறு காரமான கறியில்லை என்ற நிலையில் சாப்பிடப் பழகிக் கொண்டான். சிகாமணிக்கு விடுதிச் சாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு நன்கு பிடித்துக் கொண்டது. அவன் சொல்வான்: "மச்சான்... நாங்கள் இப்படிச் சாப்பாட்டை எங்கை கண்டம்? உண்மையா மச்சான் ஜாமையும் பட்டரையும் நான் இங்கைதான் சாப்பிடுறன். அரை அவியல் முட்டையையும், புல்ஸ்ஐயையும் இங்கைதான் ருசிக்கிறன். சாப்பாட்டிற்குப் பிறகு டெசேற் என்று புருட் செலட்டையும், ஐஸ் கிறிமையும், யானை வாழைப் பழத்தையும் தாறுன்கள்... ஊரிலை சாப்பாட்டிற்குப் பிறகு தண்ணியைத்தான் குடிச்சம். இங்கை...? பின்னேரத் தேத்தண்ணிக்கே ஊரிலை வறக்கொட்டினம்... இங்கை பால் தேத்தண்ணியோடை டிபனும் தாறுன்கள்... நான் நினைக்கிறன் மச்சான் இரண்டொரு மாதத்தில நான் பயில்வாஞ மாறிடுவன்..."

இதனைக் கூறிவிட்டுத் தெய்வசிகாமணி இரண்டு கைகளையும் உயர்த்தி நெஞ்சை நிமிர்த்திஞன். சிகாமணி வரும்போது இருந்ததிலும் இப்போது சற்றுச் செந்தளிப்பாகத்தான் இருக்கிறுன். அவன் கூறியவை சிவராசனுக்கும், அவன் போன்ற பலருக்கும் பொருத்தமானவை தான். யாழ்ப்பாணத்து ஏழைக் கமக்காரர்களின் பிள்ளைகளாகப் பிறந்து விட்டு, ஆறேடு ஏழாக சோற்றையும் கறியையும் அரை வயிறும் கால் வயிறுமாகத் தின்று திரிந்த அவர்களுக்கு பட்டரும் ஜாமும் அரையவியல் முட்டையும் கிடைக்காதவைதான்.

"இதென்ன சாப்பாடு... நாங்கள் கட்டுற காசுக்குப் போதாது... சாய்..." என்று முகம் சுழிக்கின்ற வசதியான மாணவர்களையும் சிவராசன் கண்டிருக்கிறுன்.

வாரத்தில் ஒருநாள் கோழிக்கறி ஆக்குவார்கள். ஒரு இரவு சூப்போடு கூடிய கோலஸ் இருக்கும். இன்ஞெரு இரவு நூடில்ஸ் இருக்கும். இவற்றையெல்லாம் சாப்பிடும் போது அவனுக்கு வீட்டாரின் நினைவு வந்து விடும். மத்தியானம் சாப்பிட்டு எஞ்சிய சோற்றைக் குழைத்துப் பகிர்ந்துண்டுவிட்டு அல்லது ஒருருத்தல்பாணை வாங்கிப் பகிர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுவிட்டுப் படுக்கைக்குப் போகும் அவன் பெற்ரூரையும், சகோதரங்களேயும் எண்ணிக் கொள்வான். தொண்டைக்குள் உணவு இறங்க மறுக்கும்.

''நாங்கள் இங்கை இப்பிடிச் சாப்பிடுறம்... அங்கை... வாழ்க்கையில......''

தெய்வசிகாமணி குறுக்கிடுவான். ''நீ அதை நினேச்சு இங்கை சாப்பிடாமல் விடுவதால அது உன்ரை வீட்டாருக்குக் கிடைக்கவா போகுது...''

''இல்லே சிகா... வாழ்க்கையில பணம் எவ்வளவு பிரதானம் பார்த்தாயா? ஏழையாய்ப் பிறக்கிறதே பாவம். பணமில்லாததால எத்தனே குமருகள் வாழ்வில்லாமல் இருக்குதுகள்? எத்தனே பேர் வயிமுர உணவில்லாமல் இருக்குதுகள்? எல்லாரிடமும் சமனுக இருக்க வேண்டிய தொன்று இந்தப் பணம் தான். ஒரு சிலரிடம் இந்தப் பணம் எப்படிக் குவிந்து போய்க் கிடக்குது. ஒரு சிலரிடம் அடுத்த வேளேக் கஞ்சிக்கே வழியில்லாமல்...... பணம் தான் இண்டைக்கு உலகை ஆளுது. பண விசயத்திலே நாங்கள் நல்லா வஞ்சிக்கப்பட்டு விட்டம். பணக்காரர்...''

''அவர்களேப் பார்த்து நீ பொருமைப்படுகிருயா?'' என்று சிகாமணி கேட்டான்.

''இல்லே... நான் பொருமைப்படவில்லே... ஆத்திரப்படுறன்... அந்தப் பணத்தை நான் எப்படியாவது தேடித் தான் தீருவன்...''

சிகாமணி சிரித்து விட்டுச் சொன்ஞன்: ''டேய்... சிவராசா, நேர்மையான வழியில பணத்தைத் தேடிவிட முடியாதுடா... கறுப்புச் சந்தைக்காரர்... கடத்தல்காரர்... ஏமாற்றுக்காரர்...... சுரண்டல்காரர் இவர்களால் தான் அதைத் தேடி விட முடியும்... நெஞ்சில கசிவிருக்கிறவையால அதனே ஒரு போதும் தேடிவிட முடியாது...... எல்லாருக்கும் எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் கிடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

இறதா இருந்தா நம்மடை எழுத்தாளன் இளஞ்செல்வன் கூறுகிறது போல, சமுதாயத்தின் அடித்தளமே மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்பதான் முடியும்...''

சிவராசன் படுக்கையில் புரண்டு படுத்தான். பொக்ஸ் ஸ்பிரிங்குகள் கிறீச்சிட்டன. வெறும் பாயில் அல்லது வாங்கில் துண்டை விரித்துவிட்டுத் துயின்ற அவனுக்குப் பல்கலைக்கழக விடுதியில் ஸ்பிரிங் பெட் படுக்கை கிடைத்துள்ளது. அவனுக்குப் புதியதொரு உலகத்தையும் அனுபவத்தையும் பல்கலைக்கழகம் தந்தது. இப்போது நினைத்துப் பார்க்கும்போது கூட சில உண்மைகள் மறுக்கமுடியாதவை தான். அவன் முதன் முதல் றெயில் பிரயாணம் செய்தது, பல்கலைக்கழகத்திற்கு வந்தபோது தான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே வந்ததும் அப்போதுதான்.

"டேய்... எழும்படா... சாப்பாட்டு மணி அடிக்கப் போகுது...'' என்றபடி பாத்ரூமிலிருந்து தெய்வசிகாமணி வந்தான், இந்த அதிகாலைப் பனிக்குளிரில் குளித்துவிட்டு விறைத்து வந்திருந்தான். அவன் துவாயை உதறி பல்கனியில் உலரப் போட்டான். அப்போது சாப்பாட்டு மணி கணகணத்தது. வேகமாக லோங்ஸை மாட்டிக்கொண்டு சாப்பாட்டு மண்டபத்திற்குச் சிகாமணி விரைந்தான். சிவராசன் சோம்பல் முறித்தபடி எழுந்தான். சென்ற இரவு ரியூற்ரோரியல் ஒன்றை ஆயத்தப்படுத்தி எழுதி வைத்துவிட்டுப் படுக்கைக்குப் போகும் போது பன்னிரண்டு மணியாகிவிட்டது. இன்று அவனுக்குப் பத்து மணிக்குத்தான் விரிவுரையிருக்கிறது. ஆதலால் ஆறுதலாகப் புறப்படலாம்.

சிவராசன் அறையின் பல்கனிக்கு வந்தான். வெளியே மென்புகார் நீங்காது புகை படிந்தது போலக் காணப்பட்டது. குன்றின் விளிம்பு தெரியாதவிதமாகப் பனிப் புகார் கவிந்திருந்தது. அவன் சற்று நேரம் பனிப் புகாரைப் பார்த்தபடி நின்றிருந்தான். உடலில் மெல்லிய விறைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப் படர்ந்தது. கிழக்கே சூரியனின் கதிர்கள் புகாரைத் துளாவியபடி மேலெழுந்தன.

குன்றின் விளிம்பில் ஒரு உருவம் நிற்பது தெரிந்தது. இந்தப் பனிக்குளிரில் குன்றின் விளிம்பில் நின்று வேடிக்கை பார்ப்பது யாராக இருக்கும்? எவர் என அடையாளம் தெரியவில்லை. ஆனால், அவன் சிகரெட் புகைத்தபடி நிற்பது மட்டும் நிழலாகத் தெரிந்தது.

சிவராசன் துவாயையும், பற்பொடியையும் எடுத்துக் கொண்டு பாத்ரூமிற்குச் சென்றான்.

பல்கலைக் கழக பாத்ரூம்கள் அற்புதமானவை. முதல் நாள் பாத்ரூமிற்குச் சென்ற சிதாமணி அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தான்.

"என்ன...? என்ன?" என்று சிவராசன் கேட்டான். அவன் சற்று நேரம் திகைத்துப் போய் நின்றிருந்தான்.

"கோதாரியிலே போறவன்கள்... பாத்ரூமில ஒரு சீனிய மாணவன் சும்மா நின்று குளிக்கிறானடா. என்னைக் கண்டிட்டு 'காய், யோக்கர்' என்கிறான்... வெட்கம் இல்லாதவன்... இப்பிடியே குளிக்கிறது..."

இதைக்கேட்டு அவனும் திகைத்துத்தான் போனான். பின்னர் இது ஒருசாதாரணவிஷயம் எனப் புரிந்து கொண்டான். பாத்ரூமில் மட்டுமல்ல, பாத்ரூமிலிருந்து தங்கள் அறைவரை ஒருவயது ஆண் பிள்ளை போல, வெட்கமின்றி நடந்து வருகின்ற துணிச்சல்கார மாணவர்களும் இருந்திருக்கிறார்கள்.

அவன் பாத்ரூமிற்குப் போன போது சுந்தரம் சேவ் எடுத்துக்கொண்டு நின்றிருந்தான்.

"குட் மோனிங் சிவராசா..." என்றான் சுந்தரம். அவனும் பதில் வணக்கம் கூறினான்.

கோபால் குளித்துக் கொண்டு நின்றிருந்தான்.

"ஏன் சிவா, இன்றைக்கு லேற்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராத்திரி ரியூற் எழுதினனான்... படுக்க நேரமாச்சுது அதுதான்..."

"இண்டைக்கு எத்தனை மணிக்கு லெக்சர்?... தமிழ் தானே...?"

"பத்து மணிக்குத் தான்... தமிழ் தான்... பதினொரு மணிக்கும் லெக்சர் இருக்குது. எக்கனொமிக்ஸ்..."

"அப்ப இண்டைக்கு வசந்தி வருவா..." என்றான் கோபால். "இண்டைக்குக் கட்டாயம் சல்லடிக்க வேண்டும்..."

"உமக்கு எப்பவும் மிஸ் சுந்தையாவைப் பற்றித்தான் கதை. அவளின்ரை கதையைவிடு. நீ ரியூற் எழுதிட்டியே?" என்றபடி சிவராசன் முகத்தைக் கழுவினான். பைப்பினூடாகக் குளிர்ந்த நீர் பீறிட்டபடி வந்தது.

"இல்லை... ராத்திரி முழுவதும் ரூம் நம்பர் 72 இல ஒரே சோகம். சத்தியலிங்கத்திற்கு சாந்தா பூட்ஸ் கொடுத்திட்டாளாம். லிங்கம் மூக்குக் குப்புறக் கிடக்கிறார். ராத்திரி நல்லா குடிச்சிட்டுக் கிடந்தார். எல்லாரும் அவருக்கு ஆறுதல் சொன்னது தான் வேலை..." என்றான் கோபால்.

சேவ் எடுத்துக்கொண்டிருந்த சுந்தரம் அவர்களைத் திரும்பிப் பார்த்தான்.

"டேய்... என்னடா... சீனியேசைப் பற்றிக் கதை... அதுவும் பாத்ரூமில..." என்றான் சுந்தரம். "சரியான விசரன்... அவள் மாட்டனெண்டாளாம்... உவர் உடனே குப்புறக் கிடக்கிறார், யோக்கர்..."

பாலுணர்வும் படிப்பும் தான் பல்கலைக் கழகத்தின் இரு துடிப்பான இயக்கங்கள்.

சத்தியலிங்கம் சீனிய மாணவன். பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டத்திற்காகக் கற்றுக்கொண்டிருப்பவன். அடுத்த ஆண்டு இறுதியாண்டுப் பரீட்சை எடுக்க வேண்டியவன். லிங்கமும் சாந்தியும் காதலர்கள் என்பது பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக் கழகம் அறிந்த உண்மை. அவர்களிடையே எப்படி பிரிவு ஏற்பட்டது?

சிவராசன் பாத்ரூமிலிருந்து தன் அறைக்குத் திரும்பி வந்தான். சிகாமணி விரிவுரைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் துவாயைக் காயப் போடுவதற்காகப் பல்கனிக்குச் சென்றான்.

பனிப் புகார் நன்கு விலகியிருந்தது. தூரத்தில் அல கல்ல குன்று தெளிவாகத் தெரிந்தது.

அவன் திகைப்போடும் பரிதாபத்தோடும் ஓரிடத்தை நோக்கினான். சிவராசன் பாத்ரூமிற்குச் செல்வதற்கு முன் குன்றின் விளிம்பில் சிகரெட்டுடன் நின்றிருந்த அந்த உருவம் இப்போதும் அப்படியே நின்றிருந்தது — சத்தியலிங்கம்தான்.

சிவராசன் நட்போடு பழகிய சீனிய மாணவர்களில் சத்தியலிங்கமும் ஒருவன். இனிய சுபாவமும், கலகலப்பான பேச்சும் எவரையும் அவனிடம் நட்புக் கொள்ள வைக்கும். லிங்கம் பேசும்போது வார்த்தைகள் அளவோடு பாவிப்பதாகவே அவனுக்குப்படும். லிங்கம் தன்னந்தனியனாக சிகரெட்டை ஊதியபடி காலைப் பனியில் நின்றிருந்தான். அவன் இதயத்தை ஏமாற்றம் மிகஆழமாகத்தாக்கி விட்டது. எந்த ஏமாற்றத்தையும் இலேசில் தாங்கி மறந்துவிட முடியும். ஆனால், காதல் ஏமாற்றத்தை இலேசில் இதயத்தை விட்டுத் தூக்கி எறிந்து விட முடியாது. மாறாத வடு அது.

காதலின் இனிமையையும், சோகத்தையும்; விறுவிறுப்பையும் வேகத்தையும் சிவராசன் பல்கலைக்கழகத்தில் உணர்ந்திருக்கிறான்; கண்டிருக்கிறான்.

லிங்கத்தை அவன் வெகுநேரம் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். லிங்கம் இன்னொரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டான். அவனுக்கு ஆறுதல் சொன்னால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தூர் கிளை நூலகம்

அறைக் கதவைச் சாத்திக் கொண்டு லிங்கத்தை நோக்கிச் சென்றான்.

''என்ன அண்ணை... பலியில நிக்கிறியள்? சாப்பிடப் போகேல்லேயே?''

குன்றின் விளிம்பில் நின்றபடி கீழே பார்த்துக்கொண்டிருந்தான் லிங்கன். குன்றின் அடிவாரத்தில் வளைந்து செல்கின்ற கலகா வீதியில் மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்வது தெரிகின்றது.

இங்கிருந்து பார்க்கும் போது கிஸ்சிங் பெண்ட் முனைத் திருப்பம் நன்கு தெரிந்தது. அவன் விடுதிக்கு மேல் அமைந்த உயர் பகுதியில் தோற்றம் பெறுகின்ற சிற்றாறு ஒன்று உட்குடைந்து சிறு பள்ளத்தாக்கின் ஊடாக கிஸ்சிங் பெண்டின் மதகினூடாக விரைந்து மகாவலி கங்கையுடன் கலக்கிறது. கிஸ்சிங்பெண்ட் முழங்கை வளைவான ஒரு திருப்பம். எதிரெதிரே விரைந்து வரும் வாகனங்கள் ஒன்றினையொன்று அறியாமல் மோதிக்கொள்ளக் கூடிய திருப்பம்.

சத்தியலிங்கம் கிஸ்சிங்பெண்டை நோக்கியவாறு கேட்டான்:

''நீ யாரையாவது காதலிக்கிறாயா?''

சிவராசன் கேட்க வேண்டிய கேள்வியை அவன் கேட்டான். காதலிக்கவா அவர்கள் இங்கு வந்தார்கள்?

''சீச்சி... அப்படியொன்றுமில்லை...'' என்றான். இந்த வார்த்தைகளைக் கூறும் போது சரோசாவின் நினைவு ஏனோ அவனுக்கு எழுந்தது. லிங்கம் அவனை ஆழமாகப் உற்றுப் பார்த்தான்.

''வெரி குட்... ஒருத்தியையும் காதலிக்காதே. யூனிவேசிற்றியில் காதலிப்பதென்பது காசுச் செலவைத்தான் ஏற்படுத்தும். காதல் என்பது இங்கு காசுச்செலவு... தம்பி, நீ ஒரு மத்திய தர அல்லது அதற்கும் கீழான வாழ்க்கைத்தரமுள்ள குடும்பத்தவன்... நீ ஒருத்தியைக் காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கத் தொடங்கினையானல் உடன் உனக்குச் செலவு கள் அதிகரிக்கும். புதுப்புது திறமான லோங்சுகள் வாங்க நேரிடும்... அடிக்கடி அவளைக் கன்ரீனுக்குக் கூட்டிக் கொண்டு போக வேண்டும்... சனிக்கிழமைகளில் கண்டிக் குப் படத்திற்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டும். இவ் வளவுக்கும் காசு வீட்டிலிருந்துதான் வரவேண்டும்...''

சிவராசன் பேசாது கேட்டுக்கொண்டிருந்தான். துயர முற்றவனைப் பேசவிட்டுத் தான் ஆறுதல் கூறவேண்டும்.

''டேய்... சிவா... எங்கட யாழ்ப்பாணத்து யூனிவே சிற்றிப் பெட்டையள் லேசானவையல்ல. எல்லாரும் மச்சுவேட் சேர்ள்ஸ். ஊரிலே ஒன்பதாம் வகுப்பு, பத்தாம் வகுப்புப் படிக்கிற சிறு பெட்டையளை — அந்த வயசில காதல் வலையில் விழுத்திறதில இருக்கிற இலகு யூனிவேசிற்றிப் பெட் டையளை விழுத்திறதில இல்லை... யூனிவேசிற்றிப் பொடிச் சியள் யோசிச்சுத்தான் காதலிப்பாளவை... பணக்காரனே? நல்ல எதிர்காலம் உள்ளவனே... நல்ல சாதிசனமானவ னைத் தான் பார்த்துக் காதலிப்பாளவை, விபரம் தெரியா மல் காதலித்தாலும் விசயம் தெரிஞ்சவுடனே பூட்ஸ் கொடுத்திடுவாளவை. காசையும் செலவழித்து... நேரத் தையும் செலவழித்து... ஆரோக்கியத்தையும் பழுதாக்கி கடைசியில கண்ட மிச்சம்... பிறஸ்ரேசன்தான்... அத லாலே நான் சொல்லுறன்... இங்கே ஒருத்தியையும் காத லிச்சிடாதை...''

சிவராசன் சிரிப்போடு இவற்றைக் கேட்டுக்கொண்டி ருந்தான். அனுபவம் பேசும்போது கிரகித்துக்கொள்வது நல்லதுதான்.

''சாப்பிடப் போவம்... வாருங்கோ...''

''என்ன சாப்பாடு வேண்டிக் கிடக்குது... சிவா அவள் என்னை ஏமாற்றிப் போட்டாள் என்றதுக்காக நான் இப்ப கவலைப்படவில்லை... எவ்வளவு அவதானத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நான் ஏமாந்து போனனே என்று தான் கவலைப் படுறன்...''

சத்தியலிங்கம் அவனோடு சாப்பாட்டு மண்டபத்திற்கு வந்தான். இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்து கொண் டனர்.

''துரை, ஏன் இன்டைக்கு லேற்...'' என்றபடி அவர் களுக்குச் சாப்பாடு பரிமாறும் முதியான்சே வந்தான். ஐம் பது வயது மதிக்கலாம். அரை அவியல் முட்டை இரண் டையும், மிளகு-உப்பு தூளையும் பாண் துண்டுகளையும் அவர்கள் முன் வைத்தான்.

''உங்கட முட்டையளை நான் எடுத்து வைத்திருந் தேன்...'' என்றான் முதியான்சே.

சத்தியலிங்கம் முட்டையை எடுத்துக் கரண்டியால் தட்டி உடைத்துக் கோப்பையில் ஊற்றியபடி கூறினான்: ''சிவா... முட்டையும்- பூனையும் எப்பவும் சிநேகிதமா இருக்க முடியாது... என் நிலையும் அதுதான்... பூனை ஒன் றுடன் சிநேகிதம் வைச்சிட்டன்...''

நிமிர்ந்து அவன் சிவராசனைப் பார்த்தான். அவனு டைய விழிகள் இரண்டும் திடீரெனக் கலங்கின. மறுகணம் பொலபொலவெனக் கண்ணீர் கன்னங்களில் வழிந்தோடி யது.

''சொறி... சிவா...'' என்றபடி சாப்பாட்டு மேசையி லிருந்து எழுந்தான்; ''எக்ஸ்கியுஸ்மி சிவா...''

அவன் போவதையே பார்த்துக்கொண்டு சிவராசன் அமர்ந்திருந்தான்.

அதன் பிறகு அவனாலும் சரியாகச் சாப்பிட முடிய வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.

மலைக்குன்றுகளிலும் மேடுகளிலும் பல்கலைக்கழக கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குன்றுகளினதும் மேடுகளினதும் சாய்வுகள் பசுமை போர்த்தாற் போல புற்போர்வையால் மூடப்பட்டே என்றும் காட்சி தரும். காலத்துக்குக்காலம் கூடுதலாக வளர்ந்து விடுகின்ற புற்களை வெட்டிச் சீர்படுத்துவதற்கென்றே பல்கலைக்கழகத்தில் பல தொழிலாளர்கள் இருக்கின்றனர். உயர்ந்து வளர்ந்திருக்கின்ற மரங்களில் எக்காலத்திலும் பசுமையின் சிரிப்பைக் காணலாமே தவிர வறட்சியின் துயரைக் காண முடியாது. சலசலத்து விரைகின்ற மகாவலி கங்கையின் கிழக்குப்பக்க நதிச் சாய்வில் பேராதனைப் பல்கலைக்கழகம் அமைந்திருந்தது. குறிஞ்சி நிலத்தின் கலகலப்பு அங்கு என்றும் கொலு வீற்றிருந்தது.

விடுதி மண்டபங்கள் குன்றுகளில் அமைக்கப்பட்டிருப்பதனால், பிரதான வீதியான கலகா வீதியையும் விடுதிகளையும் இணைக்கின்ற பாதைகள் முழங்கை வளைவாக வளைந்து வளைந்து செல்வதால், குத்துச் சாய்வுத் தூரத்திலும் பார்க்க அதிக தூரமானவையாக அமைந்திருந்தன. அதனால், ஒவ்வொரு விடுதியையும் பிரதான வீதிகளையும் இணைத்து குறுகிய தூரப்படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிவராசனது விடுதியிலிருந்து விரிவுரை நிகழும் ஆர்ட்ஸ் தியேட்டருக்கோ புவியியல் மண்டபத்திற்கோ வீதியால் செல்வதென்றால் கூடியது இரண்டு மைல்களாவது நடக்க வேண்டும். சாய்வுகளில் அமைக்கப்பட்டிருக்கும் படிகளின் மூலமாகச் செல்வதென்றால் அரை மைல் தூரம்தான்.

மாக்கஸ் பெர்னாண்டோ மண்டபத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்ற படிப்பாதை ப[illegible]லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகப் பிரதான கன்ரீனுக்கு அருகாகச் செல்கின்றது. அவன் படிப்பாதையூடாகக் கன்ரீனை நெருங்கிய வேளை, இருந்தாற்போல மழை பிடித்துக்கொண்டது. மலைநாட்டில் மழை பெய்வதற்கும் விடுவதற்கும்காலநேரமில்லை. அவன் விரைந்து கன்ரீன் சுவரோடு ஒட்டிக்கொண்டான். அவன் நின்ற இடத்திலிருந்து கன்ரீனை நன்கு அவதானிக்க முடிந்தது. கன்ரீன் சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் புவியியல் விரிவுரை ஆரம்பிப்பதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்களே இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தது. எப்படி விரிவுரை மண்டபத்திற்குச் செல்வது?

குடை ஒன்று அல்லது றெயின் கோட் ஒன்று நிச்சயமாக வாங்கத்தான் வேண்டும். இங்கு இதிலொன்றில்லாமல் சமாளிக்க முடியாது. ஆனால், நினைத்தவுடன் வாங்குவதற்கு வசதிபடைத்த குடும்பத்திலா அவன் பிறந்திருக்கிறான்? ஐயா கஷ்டப்பட்டு அனுப்புகின்ற பிச்சைக்காசில் இருபது ரூபாய்களை ஒதுக்குவதற்கு அவனால் எப்படி முடியும்?

மழை மெதுவாகப் பலக்கத் தொடங்கியது. சோவென்ற இரைச்சலோடு தூறல்கள் விழுந்தன. சிவராசன் தூறல் தன்னை நனைக்காமலிருப்பதற்காகக் கன்ரீன் படிகளில் ஏறி நின்று கொண்டான். கன்ரீனுக்குள் பல சிந்கள மாணவர்கள் அமர்ந்திருந்து தேநீர் அருந்திக் கொண்டும், சிகரெட் ஊதிக்கொண்டும், இரைந்து பேசிக் கொண்டும் இருந்தனர். ஒரு மூலையில் இருந்த மேசைமுன் ஒரு இளம் ஜோடி அமர்ந்திருந்தது. நெருக்கமாகக் கதிரைகளைப் போட்டு அமர்ந்தபடி அவர்கள் இருந்தனர். அவன் ஏதுவோ சொல்ல அவள் தலையைச் சாய்த்து அவனைப் பார்த்துவிட்டுப் புன்னகைத்தாள். கவர்ச்சியும் அழகும் நிறைந்த புன்னகை அது. அவன் மீண்டும் ஏதோ கூறிவிட்டு மெதுவாக மேசையின் விளிம்பில் பற்றியிருந்த அவளின் வலக்கரத்தைப் பற்றி வருடினான். அவள் அவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையை ஏற்றுக்கொண்டவள் போலக் காணப்பட்டாள். தங்களைச் சுற்றிப் பலர் இருக்கின்றனர் என்ற எண்ணமே அவர்களுக்கு இல்லை. அவள் நாணிக் குனிந்து சிரிப்பதை சிவராசன் கண்டான்.

சற்று நேரம் அவன் கவனம் அந்த மாணவ ஜோடியில் நிலைத்து நின்று விட்டது. அவள் தலையைச் சாய்த்து அவனைப் பார்த்துப் புன்னகைத்த அந்தக் கவர்ச்சி நிலை நீண்ட நேரம் அவன் மனதை விட்டு நீங்கவில்லை. அவனது பலவீனம் அதுவோ?

இப்போது எப்படி விரிவுரைக்குப் போவது? பாழாய்ப் போன மழை சற்று நேரம் தாமதித்துப் பெய்திருக்கக் கூடாதா? புவியியல் விரிவுரையாளர் கண்டிப்பான பேர் வழி. சற்றுத் தாமதித்துப் போனாலும் விரிவுரை மண்டபத்திற்கு வெளியே நிற்கும்படி கூறிவிடுவார். இப்போது விரிவுரை தொடங்கியிருக்கும். என்ன செய்வது? எல்லாம் இந்தச் சத்தியலிங்கத்தால் வந்த வினை. அவனோடு மினக்கெட்டதால் தான் இந்தத் தாமதம்.

சிவராசன் தவியாய்த் தவித்தான். கன்ரீனில் அவனுக்குத் தெரிந்த எவரையும் காணவில்லை. யாராவது தெரிந்தவர்கள் இருந்தால் குடையாவது வாங்கிச் செல்லலாம். நனைந்து போவோமா? மண்டபத்திற்குப் போவதற்குள் தெப்பமாகத் தோய்ந்து விடுவான்.

தூரத்தில் கன்ரீனை நோக்கிச் சில மாணவிகள் வருவது தெரிந்தது. ஒன்பது மணி, விரிவுரை முடிந்து வந்து கொண்டிருக்கின்றார்கள். இரண்டு குடைகளுள் நான்கு மாணவிகள் வந்துகொண்டிருந்தார்கள். மழைத் தூறல் முகங்களில் படாதிருப்பதற்காகக் குடைகளை முன்பக்கமாகச் சற்றுத் தாழ்த்திப் பிடித்துக் கொண்டு வந்தனர். அதில் ஒருத்தி மஞ்சள் வர்ணச் சேலை அணிந்திருந்தாள். ஏனையோர் அரைப் பாவாடை அணிந்திருந்தனர். தமிழ் மாணவிகளாகத் தான் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கன்ரீனை நெருங்கிவிட்டார்கள். அவர்களை அவனுக்குத் தெரியும். அவன் பட்ச்மேற்ஸ்தான். ஒருத்தி வசந்தி.

வசந்தி நிலத்தில் விழுந்து தெறிக்கும் மழைத் துளிகள் சேலையை நனைத்துவிடாமல் இருப்பதற்காக வலக் கரத்தால் தன் கால் பக்கச் சேலையைச் சற்றுத் தூக்கிப் பிடித்திருந்தாள். மஞ்சள் சற்றின் பாவாடை சேலையின் புதியதோர் போடராக மின்னியது. அதற்குக் கீழ் சேற்றுத் துளிகள் படிந்த தாமரைகளாக அவள் கால்கள் அசைந்தன. சேலை அணிந்து விலகியதால் தெரிந்த அந்தக் கால்களில் தெரிந்த கவர்ச்சியும் அழகும் முழங்கால்களுக்கு மேல் அரைப்பாவாடை கட்டிய ஏனைய மாணவிகளின் வளவளப்பான கால்களில் தெரியவில்லை. எப்போதும் தெரிந்தும் தெரியாத மறைபொருட்கள் கவர்ச்சியானவைதான்.

வசந்தியும் ஏனையோரும் கன்ரீன் படிகளில் ஏறினர். மழைக்கு ஒதுங்கித் தவிப்போடு அவன் நிற்பதைக் குடைகளை யடிக்கும்போது கண்டனர். மூன்று மாணவிகளும் வேகமாகப் படிகளில் ஏறிச் சென்றுவிட்டனர். மெதுவாக ஏறி வந்த வசந்தியை அவன் பரிதாபத்தோடு பார்த்தான். அவள் அவனைப் பார்த்துத் தெரிந்தவர்களுக்குச் சிந்தும் அறிமுகப் புன்னகையைச் சிந்தினாள். சிவந்த அவள் உதடுகள் மாதுளை மொக்குகளாகப் பிளந்து சேர்ந்தன. புத்தகங்களையும் குடையையும் ஒரு கையில் பற்றிய வாறு அவன் அருகில் அவள் சற்றுத் தயங்கி நின்றாள்.

"மிஸ்ரர் சிவராசா... உங்களுக்கு லெக்சர் இல்லையா?"

"இருக்கு மிஸ் கந்தையா... மழை..."

"அப்ப இந்தாங்கோ குடை.... லெக்சர் முடிஞ்சோனை கொண்டுவந்து தாங்கோ..." அவள் கரம் அவன் முன் [illegible]யை நீட்டியது. அந்தக் கரத்தின் பொன்நிறப் பூவை

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமங்களில் மழைத் துளிகள் பனித் துகள்களாகக் காட்சி தந்தன. அவன் நன்றியுடன் குடையை வாங்கிக் கொண்டான்.

''தாங்ஸ்... எப்படித் தாறது...?''

மேஸ்படியில் நின்றவாறு அவள் திரும்பிக் கூறினாள்: ''எனக்கினி லெக்சரில்லை... நீங்கள் லெக்சர் முடிஞ்சோனை தாங்கோ... லைப்ரரியில் மகசின் செக்சனில் இருப்பன்...''

'வெட்கம் கெட்ட மனமே, நீ ஏன் இப்படி நடந்து கொள்கிறாய்? அவள் மேல்படியில் நின்றவாறு திரும்பிப் பார்த்துக் கூறியபோது அவள் பின்னழகின் கிறுக்கத்தில் ஏன் இப்படித் துவண்டு போனாய்? அழகு ரசிப்பதற்குத் தான். ஆனால், அதற்கொருநேர்மையும் தகுதியும்தேவை. அது என்ன தகுதி?' அவனுக்கே அது வெகுகாலம் புரியவில்லை.

குடையை விரித்துப் பிடித்தவாறு வேகமாக மழையில் இறங்கினான்.

ஆர்ட்ஸ் மண்டபத்தைக் கடந்து புவியியல் மண்டபத்தை நோக்கி அவன் கால்கள் விரைந்தன. ஆனால், அவன் மனம் கன்ரீனிலேயே தங்கிவிட்டது. அவன் இங்கு படிக்கத்தான் வந்திருக்கிறான். இதனை அவன் மறக்கக்கூடாது என்று தன் மனதுக்குக் கூறிக் கொண்டான். மனத்திடமற்றவர்கள் இங்கு வீழ்வதைத் தவிர வேறு மீள மார்க்கமேயில்லை.

அவன் படித்த கல்லூரி ஆண்களுக்கானது. கலவன் பாடசாலையல்ல. அவனது கல்லூரி நாட்களில் மனதில் தோன்றாத நினைவுகள் பல்கலைக்கழகச் சூழலில் [illegible]கின. பெண்களோடு பேசுகின்ற சந்தர்ப்பங்கள் இங்கு அதிகம். அவர்களோடு பழகின்ற சந்தர்ப்பங்கள் அதிகம். இளம் உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய சம்பவ[illegible]ம் இங்கு அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி ஏன் தன் குடையை அவனுக்குத் தந்தாள்? மூன்று பெண்கள் கவனியாது போக, இவள் மட்டும்நின்று அன்பாக விசாரித்துத் தன் குடையை ஏன் தந்தாள்?

அவன் இதயக் குளத்தில் சிறு கல்லொன்று எறியப் பட்டுவிட்டது.

புவியியல் மண்டபத்தை நெருங்கியபோது அங்கிருந்து கோபால் வந்தான்.

மழையும் வந்தசுவடு தெரியாமல் போய்விட்டது.

''இண்டைக்கு உங்கட லெக்சர் கான்சலாம்... எல்லாரும் போயிட்டினம்...'' என்றான் கோபால்.

''மெய்யாத்தானே...? நீ ஏன்ரா இங்க வந்தனி...?

கோபால் புவியியல்பாடம் எடுப்பவனல்லன். கோபால் சிவராசனைப் பார்த்துச் சிரித்தான்.

''சும்மா... வந்தன்...'' என்றவனின் கண்கள் சிவராசனின் கையிலிருந்த குடையை வியப்போடு நோக்கின.

''இதாற்றை குடை...? லேடிஸ் குடை வைச்சிருக்கிறாய்...? ஆரையும் பெட்டையை வளைச்சிட்டாய் போலவிருக்குது...? சிவா, இது ஆற்றையடா...?''

''அதெல்லாம் உனக்கு எதுக்கு...''

''பிளீஸ்... சொல்லடா...?'' என்று கோபால் கெஞ்சினான். அவனுக்கு இப்படியான விடயங்களைத் துருவித்துருவிக் கேட்பதில் தனி ஆர்வம். சிவராசன் கோபாலரத்தினத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சிரித்தான்.

''நான் சொன்னால் நீ கவலைப்படுவாய்... உனக்கு பிறஸ் அடிக்கும்...''

அவன் ஆவலை சிவராசன் தூண்டினான். நிச்சயமாக உண்மை தெரியில் அவன் சோர்ந்துதான் போவான். ஆரம்பத்தில் இருந்தே அவனுக்கு வசந்தியில் ஒரு வகை மயக்கம் இருந்தது என்பது சிவராசன் அறியாதவனல்லன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லைச் சொல்லு... சிவா...''

''நான் கன்ரீனில் மழைக்காக ஒதுங்கி நின்றன்...ஒருத்தி வந்தாள்...''

''ஆர் அவள்...?''

''வேறை ஆர்... வசந்தா தான்...''

அவன் முகம் திடீரெனக் கம்பியது. ஏக்கமும் சோக மும் முகத்தில் படிந்ததால் கருமையுற்றது.

''வசந்தான்ர குடையா...'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

''வசந்தான்ர குடையோ இல்லையோ... எனக்குத் தெரியாது... ஆனா, இது அவள் தந்த குடைதான்...''

''நீ கேட்டியா... அவளாத் தந்தாளா...''

''இரண்டுந் தான்...''

''வசந்தா கன்ரீனில இப்ப இருக்கிறாளா...''

''ஏன்... எனக்கு ஏன் குடை கொடுத்தாய் என்று கேட்கப் போறியா...''

''சிச்சி... கேட்டால் அதைக் கேட்க நீ யார் என்றிடு வாள்... அதுக்கில்ல சிவா. கன்ரீனுக்குப் போவமாடா... வாறியா...''

''நான் வரவில்லை...''

''டேய்... டேய்... நான் ரீ வாங்கித்தாறன்ரா... பிளீஸ் உனக்குத்தான் லெக்சர் இல்லையே?... குடையையும் திருப் பிக் கொடுக்கலாமடா... பிளீஸ் சிவா... இண்டைக்கு எப் படியாவது வசந்தியோடை கதைக்க வேண்டுமடா...'' என்று கோபாலரத்தினம் கெஞ்சினான்.

கோபாலின் இதயத்தில் வசந்தி என்ற அருவி தன் தண்மையைப் பாயவிட்டுவிட்டதா?

''கோபால்... படிக்க வந்திட்டு...? இப்படி வசந்தியை எண்ணி...''

''சிவா... நான் என்னடா செய்ய...? அவளை என்னுல் மறக்கவே முடியவில்லை... இப்படி ஒரு அழகடா... வ... மாட்டியா...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் இப்போது கன்ரீனுக்குப் போகக் கூடாது. விரிவுரை இருப்பதாகக் கூறிக் குடையை வாங்கிச் சென்று விட்டு, உடன் திரும்பிப் போனால் அவள் என்ன நினைப்பாள்.

'நான் லைப்ரரிக்குப் போறன் கோபால்... நீ மட்டும் போட்டு வா...''

''அப்ப இந்தக்குடையையாவது தாவன் சிவா... நீதந்த தாக வசந்தாட்டை நான் கொடுக்கிறன்...''

குடையைக் கொடுப்பதா? கோபாலரத்தினம் அவளோடு பேசுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தப் பார்க்கிறான். மகசின் செக்சனில் குடையைக் கொண்டு வந்து தரும்படி அவள் கூறியிருக்கிறாள். அந்த இனிய சந்தர்ப்பத்தை அவன் இழப்பதா?

சந்தர்ப்பங்களே அவனுக்கு வேண்டாம். நினைவுகளை அவனால் கட்டுப்படுத்தமுடியும். ஆனால், அவன் முன் அவை வடிவம் பெற்று நிற்கும்போது அவன் உணர்வுகளை கட்டுப்படுத்தும் திறன் அவனுக்கில்லை. சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள மாட்டான். சந்தர்ப்பம் சதி செய்தால் ஞானிகள் கூட இலட்சியத்தை இழந்து விடுகின்றார்கள்.

கோபாலரத்தினத்திடம் குடையைக் கொடுத்து விட்டதன் பின்தான், தான் பண்பாடாக நடந்து கொள்ளவில்லைப் போல உணர்வு சிவராசனுக்குத் தட்டியது. வசந்தி என்ன நினைப்பாள். நாகரிகமில்லாதவன் என எண்ணுவாளோ?

புவியியல் மண்டப ரியூற்றேரியல் வகுப்பறை ஒன்றினுள் போய் சிவராசன் அமர்ந்து கொண்டான்.

'நான் என்ன மனிதன்? பெண் என்ற விடயத்தில் நான் அவ்வளவு பலவீனனாக இருக்கிறேனா? என்னைப் போலத்தானா எல்லா ஆண்களும்? ஊரில் சரோசாவைக் கண்டதும் சலனப்பட்ட என்உள்ளம் இங்கு வசந்தாவைக் கண்டதும் ஏன் சலனப்படவேண்டும்?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராசன் இருந்த அறையில் இருந்து பார்க்கும் போது நூல் நிலையக் கட்டிடம் நன்கு தெரிகின்றது. அதன் வாயிலின் முன்னுள்ள மண்டபம் கருங்கற் தூண்கள் பலவற்றை நிறுத்தி அமைக்கப்பட்டிருக்கின்றது. அப் பில்லரிங் செக்சனின் தூண்களோடு நின்று ஜோடிகளாக வும், கும்பல் கும்பலாகவும் மாணவ மாணவிகள் அள வளாவிக் கொண்டு நின்றிருப்பது தெரிகின்றது. அப்படி இவர்களுக்குப் பேசுவதற்கு என்ன தான் விடயங்கள் இருக்கின்றனவோ?

கன்ரீனில் அந்தச் சிங்கள மாணவி தன் காதலனைப் பார்த்துத் தலையைச் சாய்த்துப் புன்னகைத்த கவர்ச்சி யும், அவன் அவளின் கரத்தை வருடிய செயலும் சிவரா சனுக்கு நினைவு வந்தன. அவன் நீண்டவேளை அங்கு அமர்ந்திருந்தான்.

அவன் இதயம் குழம்பித் தவித்தது.

அவன் மத்தியானச் சாப்பாட்டிற்காக விடுதிக்கு வந்தபோது அங்கு அவனுக்காக ஒரு கடிதம் காத்திருந் தது.

## 7

மத்தியானம் மீண்டும் பொழியத் தொடங்கிய மழை மாலை ஆகியும் ஓயவில்லை. படுக்கையில் படுத்திருந்த படி, பல்கனிக் கதவினூடாக வெளியே பார்வையைச் செலுத்துகிறபோது, நிலத்தில் விழுகின்ற மழைத் துளிகள் உள்ளத்தைக் குத்துவது போலவும், தூரத்தில் குன்றுகளில் கவிந்துகிடக்கின்ற கருமுகில் திரட்சி இதயத்தில் போர்வை யாக மூடி அழுக்குவது போலவும் இருந்தது. சிவராசனின் இதயம் கனத்துக் கிடந்தது.

தந்தையின் கடிதம் அவன் இதயத்தைக் கனக்க வைக்கவில்லை. கமலம் அக்காவின் கடிதம்தான் அவன் மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது.ஒரே கவரில் இருவரும் இரு கடிதங்கள் வைத்திருந்தார்கள்.இரண்டும் கமலம் அக்கா எழுதியவைதான். தந்தை சொல்ல தந்தைக்காக தமக்கை எழுதியிருந்த கடிதத்தில் குடும்பத்தின் கஷ்ட நிலையையும்,இக்கஷ்டங்கள் அவனால்தான் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்று ஆயிரம் கனவுகளுடன் எழுதியிருந்தார்.

''...படிக்கிறதில தான் உன் புலனெல்லாம் செல்ல வேண்டும்.கவனமாக உடம்பையும் கவனித்துக் கொள். அங்கு சாப்பாடு உனக்குப் பிடிக்குதோ என்று கொம்மா கவலைப்படுகிறு. கண்டபாட்டிற்கு வெளியே திரியாதை. பழக்கமில்லாத ஊர்.சிங்கள தேசம். சர்வகலாசாலை தருகின்ற உபகாரச் சம்பளத்துக்கு எழுதிப் போட்டியா? கிடைச்சால்தான் சமாளிக்கலாம். உன் கைச் செலவிற்கு வாற கிழமை மட்டில் பதினைந்து ரூபா அனுப்பிறன். கமலத்திற்கு நல்லதொரு இடத்தில் இருந்து சம்பந்தம் ஒன்று கைகூடி வந்திருக்குது.சரிவந்தால் பிறகு எழுதிறன்...''

அவன் புலனெல்லாம் படிப்பில் செல்லவேண்டும் என்று தந்தை எழுதியிருக்கிருர்.துறவிகளின் உள்ளங்களையே தடுமாற வைத்துவிடக்கூடிய சூழல் ஐயா இது. சுடச் சுடத்தான் பொன் ஒளிரும்.அவன் தன் குடும்பத்தை மறக்கமாட்டான்.தன் வறுமையை மறக்கமாட்டான்.

வெளியே மழை கொட்டிக்கொண்டிருந்தது. இடையிடையே வானத்தைக் கிழித்தபடி மின்னற் கீலகள் நீண்டன.கமலம் அக்காவின் கடிதம் அவன் நினைவில் நின்றது. தலையணைக்குக் கீழிருந்த அக் கடிதத்தை எடுத்து மீண்டும் ஒருதடவை படித்தான்.கமலம் அக்கா எழுதியிருந்தாள்:

''...தம்பி, எங்கள் குடும்பம் வறுமைப்பட்டது. வாழ்க்கையில் எல்லாரும் அனுபவிக்கின்றவற்றை நாங்கள் அனுபவித்ததில்லை.துன்பமும் பற்றுக்குறையும் தான் நாங்கள் கண்டது.ஐயாவைக் குறை சொல்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினையாதை. ஐயா தன்னால் எங்களுக்குச் செய்யக் கூடியவற்றை எல்லாம் செய்கின்றார். இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் என்று சொல்கின்றார்கள். எனக்கு அதில் முன்பு நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால், என்று நீ பல்கலைக் கழகத்திற்கு எடுபட்டியோ, அன்றிலிருந்து நம்பிக்கை வந்திருக்குது. நமது குடும்பத்தில் ஒரு மாற்றம் நிகழப்போகிறதாக உணர்கின்றேன்...''

'அக்கா, அக்கா நீ எவ்வளவு அழகாக வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறாய். என் குடும்பமே என்னைச் சுற்றித் தங்கள் எதிர்கால நல்வாழ்வைப் படரவிட்டிருப்பதை நான் உணர்கின்றேன். வாழ்க்கையில் எல்லாரும் அனுபவிக்கின்றவற்றை நீங்களும் அனுபவிக்க வைப்பேன்,

கமலம் எழுதியிருந்தாள்... ''தம்பி, இவற்றையெல்லாம் உனக்கு நான் எழுதக்கூடாது தான். ஆனால், உனக்கு எழுதாமல் வேறு யாருக்கு எழுதுவது? ஐயா எனக்கு எங்கோ கலியாணம் பேசுகின்றார். வலிய வந்து கேட்கின்றார்களாம். மாப்பிளைக்கு வேலையில்லை. ஆனால், முதிசம் இருக்குதாம். தம்பி, பணம் மட்டும் வாழ்க்கையல்ல. பணமில்லாமலும் வாழ்க்கையில்லை. நானும் ஒரு பெண். ஐயாவிற்கு நான் ஒரு சுமையாகப்படுகின்றேன் போலவிருக்கிறது. என் மனதிற்குப் பிடித்தமற்ற ஒருவரை மணப்பதாயின் நான் இவ்வளவு காலமும் காத்திருந்தமைக்கு அர்த்தமில்லை. இப்போது நான் அனுபவிப்பது போன்ற ஒரு வாழ்வுதான் கலியாணத்தின் பின்பும் எனக்குக் கிடைக்குமென்றால் வாழ்விற்கு அர்த்தமில்லை...''

கமலம் தன் மனதைக் காட்டிவிட்டாள். அவன்மீது எவ்வளவு பெரும் பொறுப்புச் சுமத்தப்படுகின்றது என்பதை அவன் உணர்ந்தான். அக்கா எழுதியதில் என்ன தவறு? ஐயாவிற்குக் கடிதம் எழுதிவிடவேண்டும். அவன் படிப்பு முடிந்ததும் அக்காவிற்குக் கலியாணம் பேசலாம் என்று.

கமலம் இறுதியாக ஒரு விடயம் எழுதியிருந்தாள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரோசாவிற்கு மாமா எஞ்சினியர் ஒருவரைக் கலியாணம் பேசினாராம். சரோ கலியாணம் செய்யமாட்டன் என்று மறுத்திட்டாளாம்.''

'ஏன் என் இதயம் குமையவேண்டும்?எனக்கும் சரோவிற்கும் என்ன சம்பந்தம்?'

ஒருநாள் தான் அவளோடு மனம் திறந்து...அப்படியல்ல...ஒருவித மனக்கிறுக்கத்தோடு பேசியிருக்கின்றான். அவ்வளவுதான்.அவளிடம் விடைபெற்ற அந்தக் காட்சி...

சரோசா கோப்பியுடன் வருகின்றாள். அளவிற்கு மீறிப் பூரித்திருந்த அவள் அங்கங்கள் மீது அவன் விழிகள் முட்களாகத் தைத்தபோது அவள் சிவந்துபோனாள்.

''என்ன அத்தான்?...''

''ஒன்றுமில்லை...''

''யூனிவேசிற்றிக்குப் போறவை கெட்டுப் போயிடுவினமாம்...அங்கை ஆண்களும் பெண்களும் சகசமாகப் பழகுவினமாம்...''

''அதுக்கென்ன சரோ?...''

''அப்ப நீங்களும் அப்படி...?''

''நான் அப்படிப் போகமாட்டன்...என்னை எச்சூழலும் கெடுத்துவிட முடியாது...''

இவற்றைக் கூறியதும் அவள் எப்படி மலர்ந்து போனாள்.அவன் என்ன மனிதன்?அவனையே அவனுக்குப் புரியவில்லை.சரோ கலியாணத்திற்கு மறுத்துவிட்டாள் என்பது அவனுக்கு ஏன் மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும்?

அவன் அறைக் கதவை யாரோ தட்டினார்கள்.

''சிவா...'' —அழைத்தது கோபால்.

அவன் எழுந்து சென்று அறைக் கதவைத் திறந்தான்.சோர்ந்த முகத்தோடு கோபாலரத்தினம் அறைக்குள் நுழைந்தான்.சற்று நேரம் அவன் எதுவும் பேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. பல்கணியின் சாரக் கைப்பிடிச் சுவரில் அமர்ந்தபடி சங்கமித்தா பெண்கள் விடுதியிருந்த பக்கம் ஏக்கத்தோடு பார்வையை நிலைக்கவிட்டான். அவனுடைய ஏக்கம் சிவராசனுக்குப் புரிந்தது.

''அவளிடம் குடையைக் கொடுத்தியாடா?...''

''கொடுத்தன்...''

''என்ன சொன்னன்? நல்லா சல் அடிச்சிருப்பியே?...''

''இல்லை சிவா...குடையைக் கொண்டு கன்ரீனுக்குப் போனன்...அங்கை வசந்தா இருந்தாள்...வேறு சிலரும் இருந்தினம்... வசந்தாவோடை சபாநாயகம் கதைச்சுக் கொண்டிருந்தான்...''

''ஆர் மெடிக்கோ சபாநாயகமா?... அவன் மட்டுமா?...''

''அவன்தான்... அவனோடை இன்னொருத்தனும் இருந்தான்...சிரிச்சுச் சிரிச்சுக் கதைச்சான்... வசந்தாவும் சிரிச்சாள்...''

''நீ என்ன செய்தாய்?...''

''கொஞ்ச நேரம் ஒதுங்கி நின்று பார்த்தன்...அவளை வெளிக்கிட்டாலும் அவன்கள் விட்டால்தானே?... நானே குடையைக் கொண்டுபோய்க் கொடுத்திட்டு, தாங்ஸ் கூறிட்டு வந்திட்டன்...''

அவர்கள் இருவரிடையேயும் நீண்ட மௌனம் நிலவியது. வானம் பிளப்பது போல இடி இடித்தது. அவன் உள்ளே எழுந்து வந்து கதிரை ஒன்றில் அமர்ந்தான்.

''சிவா...''

''என்ன கோபால்?...''

''என்னால் அவளை மறக்கவே முடியவில்லை சிவா...எப்பவும் அவளின்ர எண்ணந்தான்...என்ன அழகடா அவள்? இந்த யூனிவேசிற்றியிலேயே அவள்தான் அழகி...அவளுக்கு இணையில்லை...சிவா, அவளோடு நாளெல்லாம் பேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் போல இருக்குது...முடியவில்லையே...எப்படியடா அவளோடை பேசுறது?...''

சிவராசன் அவனை இரக்கத்தோடு நோக்கினன். அவள் அழகு அவனை மட்டுமா கிறுங்க அடித்தது?

அவன் தொடர்ந்தான்.

''அவளில்லாமல் என்னால் வாழமுடியாது போலவிருக்குது சிவா. இந்த உலகத்தில் அவளை அடைவதற்காக எவ்வளவு விலையும் கொடுக்கலாம் போல இருக்கடா... அவள் சிரிக்கும்போது அந்த மலர்ச்சி.., சிவா, எனக்கு அவள் கிடைப்பாளா?...''

''கோபால்...நாங்க படிக்கத்தான் வந்திருக்கிறம்...''

அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான்.

''படிப்பு என்னத்துக்காக?... எங்களுக்கு அறிவு வளருறதுக்காடா?...அறிவுக்கா நாங்க படிக்கிறம்?... வயித்துக்குப் படிக்கிறம்...உத்தியோகத்திற்குப் படிக்கிறம்...உழைக்கிறதுக்குப் படிக்கிறம்...வாழ்க்கைக்குப் படிக்கிறம்...நல்ல வாழ்க்கையை அமைக்கப் படிக்கிறம்... படிப்போடை அந்த நல்ல வாழ்க்கையை இங்கை அமைத்தால் என்ன? வாழுறதுக்கு ஒருத்தி தேவை...மனதுக்குப் பிடித்த ஒருத்தியை இங்கை தெரிவு செய்தால் என்னடா?...''

அவனுடைய தத்துவத்தோடு சிவராசன் ஒத்துப் போக மாட்டான். உழைப்பிற்காகத்தான் கல்வி என்ற விதத்தில்தான் நமது கல்வி அமைந்துவிட்டது. கற்றதுக்கும் பார்க்கின்ற உத்தியோகத்திற்கும் அல்லது தொழிலுக்கும் எதுவித சம்பந்தமும் இருக்காது.

அவனுக்கு சிவராசனால் என்ன சொல்ல முடியும்?

''சத்தியலிங்கமும் இப்படித்தான்...''

அவன் குறுக்கிட்டான்.

''சத்தியலிங்கத்துக்குக் காதலிக்கத் தெரிந்த அளவிற்கு. அதனைப் பாதுகாக்கத் தெரியவில்லை...''

''உனக்குக் கனக்கத் தெரியும்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது வெளியே இருந்தாற்போல கலகலப்பு எழுந்தது.

''ஹாய்...யோக்கர்...''

''ஹாய்,சிகாமணி ...''

சிகாமணி வருகின்றான் என்பதற்கு இவை அத்தாட்சிகள். கதவைத் திறந்துகொண்டு சிகாமணி உள்ளே வந்தான்.

''ஹாய்...கோபால்...'' என்றான் சிகாமணி. ''என்ன உன்னை இன்டைக்கு லைப்ரரிப் பக்கம் காணவில்லை...ஓ... இண்டைக்கு வசந்தி லைப்ரரிக்கு வரவில்லை...'' என்று சிரித்தான்.

கோபால் எதுவும் பேசாமல் இருந்தான்.சிகாமணி கட்டிலில் வந்து அமர்ந்தான்.

''நீ எதையும் சீரியசாக எடுக்கிறாய்...நினைக்கிறாய்... வாழ்க்கையை அதனதன் போக்கில அனுபவிக்கவேணும்... சேம் பட்ச்சில காதலிக்க வெளிக்கிடுகுறியே?...சும்மா ஒரு தேவைக்கு என்றால் பரவாயில்லை...அவளுக்கும் உனக்கும் ஒரே வயதிருக்கும்...அல்லது உன்னிலும் கூடுதலாக இருக்கும்...அடுத்த வரியம் யூனிவேசிற்றிக்கு வாறதுகளில் ஒண்டைப் பார்த்துப் பிடி...''

கோபால், சிகாமணியைக் கோபத்தோடுபார்த்தான்.

''உன்ர விசர்க் கதையை விடு...''

வெளியே வானம் சற்று வெளிக்கத் தொடங்கியிருந்தது.

''வோக் போவமா... வாறியளா?...'' என்று கேட்டான் சிகாமணி.

''இப்பதான் லைப்ரரி எல்லாம் மேய்ஞ்சிட்டு வாறாய்... இன்னும் அடங்கவில்லையே?...'' என்றான் சிவராசன்.

''அழகை ரசிப்பது அடங்கக்கூடியது தானா?...'' என்றான் சிகாமணி.

வெளியே சென்று வருவது மனதுக்கு இதமாகவும் நிம்மதியாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர், கிளை நூலகம்

8.

மாலை வேளைகள் பல்கலைக்கழகத்தில் மிகவும் இனிமையானவை. மாலை வேளைகளைப் பல்கலைக்கழகத்தில் அனுபவிக்கின்ற மாணவ மாணவிகள் ஐந்து வகையினர். நூல் நிலையத்துக்குச் சென்று படிப்போர்; விளையாட்டுத் திடலுக்குச் சென்று விளையாடுவோர்; குடித்துவிட்டுக் கும்மாளம் இடுவோர்; காதலர்களாக ஒதுக்கிடங்களை நாடுவோர்; கலகா வீதியில் உலா வருவோர். இனக் கவர்ச்சியும் ஆவலும் தாம் எங்கும் அதிகமாக ஆட்சிசெலுத்தும்.

மாலையில் பல்கலைக்கழகத்தின் மூலை முடுக்கெல்லாம் இயற்கை அழகையும் ஆசையையும் கொட்டி வைத்திருக்கும். மலையின் மாருதமும், மகாவலி கங்கையின் தன்மையும், அழகுப் பெண்களின் மணமும் சேர்ந்து பூலோக சொர்க்கத்தை அங்கு சிருஷ்டித்திருக்கும்.

கலகா வீதியில் இராமநாதன் விடுதியிலிருந்து விஜயவர்த்தன விடுதிவரை மெதுவாக நடந்து வருவது சுவையான அனுபவம். ருகிங் முடிந்து மூன்றாவது வாரம் முதன் முதல் உலா வந்தது சிவராசனுக்கு நினைவு வருகின்றது. சிவகுரு என்ற சிறிய மாணவனுடன் சிகாமணி, கோபால், இவன் ஆகியோர் கலகா வீதியில் நடை பயின்றனர்.

கலகா வீதி அழகு பெற்று விளங்கியது. ஆண்களும் பெண்களும் போவதும் வருவதுமாக வீதியெங்கும் காட்சி தந்தனர். தோளோடு தோள் இணைய மெதுவாக அளவளாவியபடி கை கோர்த்துச் செல்லும் இளம் காதல் ஜோடிகள் பலவற்றை அவர்கள் கண்டனர். சிங்கள மாணவர்களே அவ்வகையில் அதிகம்.

"இவர்கள் யாவரும் திருமணம் செய்து கொள்வார்களா?..." என்று சிவகுருவைக் கேட்டான் சிவராசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆர் சொன்னது...நூற்றுக்கு ஒன்றுரெண்டு இணைவதுண்டு...ஏனையன பல்கலைக் கழக வாழ்வு வரைதான்... பொழுதுபோக்குக் காதல்... உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகத்தான்...'' என்று சிவகுரு சிரித்தான்.

''தமிழ்ப் பெண்கள் இவ்வகையில் காதலிப்பது குறைவு...காரணம் பயம்...யாழ்ப்பாணத்திலிருந்து அதிகம் தமிழ் மாணவர்கள் யூனிவேசிற்றிக்கு வருவதால், ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்குத் தெரிந்தவர்களாக உள்ளனர்...அதனுல் எங்கை தமது காதல் விவகாரம் வீட்டாருக்குத் தெரிந்துவிடுமோவென்று பயத்தில் பப்ளிக்காகக் காதல் விவகாரத்தில் ஈடுபடுவது கிடையாது... இரகசியமாகப் பேசுவதோடு சரி...மாறுபாடும் உண்டு. யாழ்ப்பாணத்து வேலிகளுள் அடங்கி ஒடுங்கிப் பெற்ருேருக்குப் பயந்து வாழ்ந்த மாணவ மாணவிகள் இங்கை வந்ததும் கட்டுகளில் இருந்து விடுபட்டது போல ஒரு சுதந்திர உணர்வு... சகலதையும் சுதந்திரமாக அனுபவிக்கத் தொடங்குகின்றுர்கள்...''

கும்பல் கும்பலாக இளையோர் கூட்டம் அசைந்தது. எங்கும் ஆவல், எவர் கண்களிலும் ஆசையின் பாவங்கள். விழிகளில் ஒருவரையொருவர் சிறைப்படுத்த முயலும் அவசரம்.

''உண்மையான காதல் இங்கு இல்லையா?...'' என்று கோபால் கேட்டான்.

''ஏன் இல்லை...சென்ற வருடம் நடந்தது... ருேபேட் என்ற மாணவன் இருந்தாற்போல இறந்துவிட்டான்... அவனுடைய காதலி உடனேயே மகாவலியில் விழுந்து தற்கொலை செய்துகொண்டாள்... காதலில் ஏமாந்த எத்தனையோ மாணவர்கள் இங்கு குடிச்சுத் திரியினம்...'' என்ருன் சிவகுரு.

''இங்கு படிப்பதற்கு வந்துவிட்டு...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''படிப்பில் கெட்டிக்காரர் பலருள்ளனர்...அறிவாளி கள் பலருள்ளனர்...ஆனால்,காதல் இங்கு உடல் தேவை... பேசுவதற்குத் துணை தேவை...ஸ்பரிசிப்பதற்குத் துணை தேவை...முத்தமிடுவதற்குத் துணை தேவை...குறிஞ்சி நிலம்...காதலுக்குக் குறைவா...?'' என்ற சிவகுரு சிரித் தான்.

''தவறுகள் நிகழ்வதில்லையா?...''

''ஏனில்லை...கர்ப்பவதியான பெண்கள் பலருள்ளனர். சென்ற மாதம் கூட ஒரு பெண் விடுதியில் ஒருத்தி மீள் ளாத்தாச்சியாகிவிட்டாள்...உடனே வார்டன் அப் பெண் ணுடைய பெற்றோரையும் பொடியனின் பெற்றோரையும் கூப்பிட்டு இருவருக்கும் கலியாணம் செய்துவைத்துள் ளார்...பொதுவா கர்ப்பவதியாவது வலு குறைவு...''

''ஏன்...?''

''பொதுவா காதலர்களுக்குக் கர்ப்பத்தடைச் சாத னங்களில் பயிற்சியுண்டு...''

''சீச்சி...'' என்றான் கோபால்.

அவர்கள் 'கிஸ்ஸிங் பெண்டை' நெருங்கிக்கொண்டி ருந்தனர். இக் கிஸ்ஸிங் பெண்டின் வளைவின் கீழ் ஒரு சிறு தோட்டம் அமைந்திருக்கின்றது. அதற்கு 'லவ்வேர்ஸ் பார்க்' என்று பெயர்.

''இதற்குள் ஒருக்காப் போவமா?...'' என்று சிகா மணி கேட்டான்.

''போகலாம்...ஆனால்,பொதுவா தனி மாணவர்கள் போவதில்லை...''

''ஏன்...?''

''இதற்குள் பல ஜோடிகள் இருப்பார்கள்... கதை பேசிக்கொண்டிருப்பார்கள்...செடிகளின் கீழ் ரெயின் கோட்டை விரித்துவிட்டுப் படுத்திருந்து பேசிக்கொண்டி ருப்பார்கள்...சற்றுப் போனால் மகாவலி கங்கை...மூங்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் அடிமரத்தில் சாய்ந்து ஸ்பரிச சுகம் காணும் ஜோடிகள்...இது லவ்வேர்ஸ் பாக்...இதற்குள் போவதற்கு அதுக்குரிய தகுதி வேணும்...''

''அதென்ன தகுதி?...''

சிவகுரு சிரித்தான். அவர்களுக்கு இவை வியப்பான செய்திகளாகவே இருந்தன. உடல்களில் என்றுமில்லாத விறுவிறுப்பு ஏறுவதை உணர்ந்தனர்.

எவ்வளவு ஆசைக் கனவுகளோடு பெற்றோர் தமது பிள்ளைகளைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புகிறார்கள். தங்களது பிள்ளைகள் பட்டதாரிகளாக, எஞ்சினியர்களாக, டொக்டர்களாக வெளிவர வேண்டும் என்று ஆவலோடு காத்திருக்கின்றார்கள்.

''என் மகன் இப்போது கவனமாகப் படித்துக்கொண்டிருப்பான்...'' என்று நினைக்கிறான் ஒரு தந்தை.

''என் மகள் இப்போது படிப்பாள்...'' என்று மகிழ்கிறாள் ஒரு தாய். ஆனால், அந்த இருவரும்...அவன் அணைப்பில் மெய்மறந்து அவள் கிடப்பாள். பலவீனங்கள் தவறுகளாகின்றன.

எவரில் பிழை? இவை தவறுகள்தாமா?

அவர்கள் நடந்து வந்துகொண்டிருந்தனர்.

விம்மிப் பூரித்த மார்பகங்களை எழிலோடு தூக்கிக் காட்டும் ஆடைகள் அவர்களது இளநெஞ்சுகளைத் தூண்டில்களாக இழுத்தன. செவ்விளநீர்க் காயின் மதமதப்போடு பூரித்து, உலகின் இன்பமெல்லாம் இவைதாம் என்பதுபோல, மறைந்தும் மறையாமலும் விளங்கும் கவர்ச்சியில் எல்லாவற்றையும் மறந்து வசம் இழக்காமல் இருக்க எந்த இளைஞனால் தான் முடியும்? உடலோடு இறுக்கமாகக் கவ்விப் பிடிக்கும் தற்கால உடைகள், பெண்மையின் மேடு பள்ளங்களை கவர்ச்சியின் முனைப்புகளாக்கி, இளைஞரின் இதயத்தைக் கவ்வி இழுக்காது இருக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிந்து கட்டி இறுக்கிப் பிடித்த ஆடையின் தழுவலில், இரு புறமும் தாளலயத்தோடு அசையும் மென்னிடையின் கீழ், உடுக்காகத் திரண்டு அசையும் பின்னழகில் மனம் இழக்காத இளைஞர்கள் உண்டா?

பருவத்திற்கே உரிய பளபளப்பின் பின்னணியில், விழிகளில் ஆயிரமாயிரம் ஜாலங்களைக் காட்டி, உதடுகளில் ஈரப் பசுமையைக் காட்டி, கொடியாகத் துவளும் இக்கன்னிகளின் முன் எந்த ஆடவன் தன் ஆண்மையை இழக்காது இருக்கமுடியும்?

அவர்கள் முற்றும் துறந்த சந்நியாசிகளல்லர்.

இவற்றையெல்லாம் கலகா வீதியில் அவர்கள் கண்டனர். அவர்களை ஒத்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கண்டனர்.

தெளிந்து தேங்கி நின்ற நீர்ப்பரப்பில் ஒரு சிறு தளிர் விழுந்தது. சிவராசனின் உள்ளத்திலும் ஒருவகைப் பரபரப்பும் இனந் தெரியாத இன்பமும் பிறந்தன.

செனட் கட்டிடத்திற்கு முன் கலகா வீதியில் நடந்து வந்துகொண்டிருந்தனர். மீண்டும் மழை பெய்யப் போவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கின.

''திரும்பிப் போவமா?...'' என்று கேட்டான் சிவராசன்.

''பொறடா சிவா...அதோ பார்...அவள் வாருளடா...'' என்றான் கோபால். அவனுடைய குரலில் பதட்டமும் பரபரப்பும் காணப்பட்டன. சிவராசனும் அவன் காட்டிய பக்கமாகப் பார்வையைச் செலுத்தினான்.

—வசந்தி.

ஐந்து மாணவிகள் ஆர்ட்ஸ் தியேட்டர் பக்கமிருந்து வந்து கொண்டிருந்தார்கள். அப் பெண்கள் கூட்டத்திடையே அவள் வருவது தனித்துவமாகத் தெரிந்தது. மல்லிகை மலர்களிடையே தாமரைப் பூவொன்றாக அவள் தெரிந்தாள். மாலைப் பொழுதின் மங்கல் ஒளியில் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்திருந்த நீல நைலெக்ஸ் சாறி அவளது தோற்றத்தை மிக எடுப்பாகக் காட்டியது.

அழகு என்பதற்கு விளக்கம் சொல்வது கடினம். பார்ப்பவர் மனதையும் கண்களையும் பொறுத்தே ஒன்றின் அழகு அமைகின்றது. ஒருவனுக்கு அழகாகத் தெரிவது இன்னொருவனுக்கு அழகாகத் தெரிவதில்லை. ஆனால், எல்லாரது மனங்களையும் கண்களையும் கவரக்கூடிய அழகுக் கோலங்கள் வசந்தியிடம் இருந்தன.

அவள் சாதாரண அழகியல்லள்.

கோபால் நிலை கொள்ளாமல் தவித்தான். அவளைக் கண்டதும் ஏற்பட்ட படபடப்பு இன்னமும் அடங்கவில்லை.

இவர்களும் அவர்களும் எதிரெதிராக நெருங்கிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எதற்கோ கலகலவென்னச் சிரித்தார்கள். வசந்தியுடன் வந்த அந்தப் பெண்கள் யாவரும் அவர்களது சக மாணவிகள் தாம்.

அவர்களைக் கண்டதும் சிகாமணி, "ஹாய்..." என்றான். "வோக் போறீங்களா?"

"வேறை என்னவென்று நினைச்சியள்?..." என்றாள் புஷ்பா.

"லைப்ரரியால வாறியளாக்கும் என்று நினைச்சன்..." என்றான் சிகாமணி.

இவர்களும் அவர்களும் கலகா வீதியின் ஓரருகில் சற்று நிலைத்து நின்றனர்.

"எப்படி யூனிவேசிற்றி லைஃப்...?" என்று கேட்டான் சிகாமணி.

"எங்களைக் கேக்கிறியள்?...நீங்கள் ஏதோ கன காலம் இங்கை இருந்தவை போல. உங்களுக்கு எப்படியோ அப்படித்தான் எங்களுக்கும்..." என்றாள் சாவித்திரி.

"எங்களுக்கு யூனிவேசிற்றி லைஃப் போரடிக்குது..." என்றான் கோபால் வசந்தியைப் பார்த்தபடி. வசந்தி எதுவும் கூறாமல் புன்னகைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1377CC

"மழை வரும் போல இருக்குது...போவம் வசந்தி..." என்றாள் புஸ்பா.

குன்றுகளின் குவி முனையில் கருமேகங்கள் திரண்டன.

"மிஸ்டர் சிவராசா..." என்று அவனை வசந்தி விளித்தாள். "போன கிழமை ரியூற்றோறியல் கிளாசில நீங்க வாசித்த தமிழ் ரியூற்றை ஒருக்காத் தாறிங்களா? கொப்பி பண்ணிட்டு உடனே பக்குவமாகத் தாறன்..."

வசந்தி சிவராசனிடம் கேட்கிறாள். கோபால் அவளை ஏமாற்றத்தோடு பார்த்தான்.

அவனது மனநிலையை சிவராசனால் புரிந்துகொள்ள முடிந்தது.

"எந்த ரியூற் மிஸ் கந்தையா?..." என்று கேட்டான் சிவராசா.

"சங்க கால இலக்கியப் பண்பையும் சங்கம் மருவிய கால இலக்கியப் பண்பையும் ஒப்புநோக்கி எழுதிய ரியூற்"—வசந்தி பேசுவதும் இனிமைதான்.

"நாளைக்குக் கொண்டு வாறன்..."

"தாங்ஸ்..." என்றாள் வசந்தி. அவர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

அவர்களை முன்னால் நடக்க விட்டுவிட்டு இளைஞர்கள் பின்னால் தொடர்ந்தனர், விடுதிக்குத் திரும்பும் நோக்கோடு. கோபால் வெகுநேரம் பேசாமல் வந்தான்.

"ரியூற் கேட்கிற அளவிற்கு வந்தாச்சு..." என்றான் சிகாமணி. "சிவா...டேய்...நண்பனுக்குத் துரோகம் செய்திடாதையடா..."

"சும்மா விசர்க் கதை கதையாதை..." என்று சிவராசன் ஏசினான்.

முன்னால் அவர்கள் நடந்து செல்கின்றார்கள். வசந்தி ஒடிந்து விழுமாப்போல நடக்கின்றாள்.

சிவராசனுக்கு ஏனோ புருவின் முன் வளைந்த கழுத்துப் புறமாக வசந்தியின் பின்னழகு பட்டது.

சிகாமணி விடுதி நெருங்கியபோது கேட்டான்:

"புஸ்பாவைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.

மாலை வேளை. அப்பகந்தானைக்குச் செல்கின்ற மலைப்பாதையில் அவர்கள் மூவர் நடந்துகொண்டிருந்தனர். கலகா வீதியில் வழமையாகச் செல்வதிலும் பார்க்கச் சற்று வேறுபட்ட சூழலில் உலாவி வர சிவராசன் விரும்பினான். கோபாலும் சிகர்மணியும் அவனுடன் கூடவர ஒப்புக் கொண்டார்கள்.

அப்பகந்தானைப் பாதை ஒடுக்கமானது. முழங்கை வளைவுகளோடு கூடிய அப் பாதை மார்க்கஸ் பெர்னண்டோ மண்டபம் அருகாக மேலேறுகின்றது. இரு திருப்பம் திரும்பினால் போதும் அழகான ஒரு நதிப் பள்ளத்தாக்கு குறுக்கிடும். நதியின் ஒருபுறமாக விரையும் வீதி, முழங்கைத் திருப்பத்துடன் ஒரு பாலத்தின் மீதாக நதியின் மறுகரைப் பக்கமாகக் கீழிறங்குகின்றது. இரு வீதிகளின் கீழே ஒடுங்கிய பள்ளத்தாக்கில் நதி சலசலத்தபடி விரைகின்றது.

அவர்கள் அமைதியாக நடந்துவந்து கொண்டிருந்தனர். சிவராசனின் எண்ணத்தில் ஒரு பெண்ணின் எழில் வதனம் நிறைந்து நின்றது. வறுமை, கடமை, இலட்சியம் என்ற கட்டுகளில் இருந்து விடுவித்தவாறு அவள் நினைவு எழுந்தது.

அவர்கள் விரிவுரை மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். தமிழ் விரிவுரைப் பேராசிரியர் நகைச்சுவையோடு அகப்பொருளை விளக்கிக் கொண்டிருந்தார். எல்லாரது செவிகளும் விரிவுரையைக் கேட்டபடியிருக்கக் கைகள் குறிப்புகள் எடுத்துக்கொண்டிருந்தன. ஏன் அவன் மனம் இப்படி சலனப்படுகின்றது? அவன் காதுகளில் பேராசிரியரின் விரிவுரை விழுகின்றது. ஆனால், மனதில் பதியாமல்... ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் வரிசையில் வசந்தி அமர்ந்திருந்தாள். அவளோடு பல மாணவிகள் அமர்ந்திருந்தனர்.

அவளுடைய ஒரு பக்கக் கன்னம் செம்பாப்பாக அவனுக்குத் தெரிகின்றது. அச் செம்பரப்பில் தலைக் கூந்தலின் பிடிப்பிலிருந்து விடுபட்ட மயிரிழைகள் அசைந்தன.

'வெட்கம் கெட்ட கண்களே ஏன் என்னை இப்படி மோசம் செய்கின்றீர்கள்?

விரிவுரை முடிவடைந்தது. மாணவர்கள் எல்லாரும் மண்டபத்திற்கு வெளியே விரைந்தனர்.

அவன் மனம் குழம்பித் தவித்தது. அவன் படிக்கத்தான் இங்கு வந்தான்...கற்கத்தான் இங்கு வந்தான்... என்று அடிக்கடி தனக்குத் தானே கூறிக்கொண்டான். இன்றைய விரிவுரை விளங்கிவிட்டது. வசந்திக்காக அவன் கொண்டுவந்திருந்த ரியூற்ரோரியல் பிணக்கணமாகக் கனத்தது.

அவன் விலகி நடக்கவேண்டும். ரியூற் கொடுப்பதினால் அவளுக்கும் அவனுக்கும் நட்பு ஏற்பட்டுவிடுமோ?

அவன் அவளிடமிருந்து விலகிவிட விரும்பினான். அவள் கண்ணில் படாமல் எங்காவது மறைந்துவிட விரும்பினான். அவளுக்கு ரியூற் கொடுக்கக் கூடாது. நூல் நிலையத்தை நாடி அவன் கால்கள் விரைந்தன. பில்லரிங் செக்சனைக் கடக்கும்போது ஒரு குரல் அவனை அழைத்தது.

"மிஸ்டர் சிவா..." —வசந்தி.

அவன் தரித்து நின்றான். அவள் அவன் முன் வந்தாள். முகத்தில் புன்முறுவல் படர்ந்தது. மின்னற் கீற்றுகப் பற்கள் ஒருகணம் பிரிந்து மறைந்தன. புத்தகங்களை மார்போடு அணைத்தபடி கேட்டாள்:

"ரியூற் கொண்டு வந்தீர்களா?"

"ஓ...யெஸ்..." அவன் கொப்பியைப் பிரித்து ரியூற்ரோரியலை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"தாங்ஸ்..." அவள் வாங்கிக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இண்டைக்கு புறபசரின் லெக்சர் நல்லா இருந்துது''

விரிவுரையையா அவன் கேட்டான்?

''நல்லா இருந்துது...'' என்று அவன் சிரிக்க முயன்றான்.

''ஏன் மிஸ்டர் சிவா...உங்களுக்குச் சுகமில்லையா? ஒரு மாதிரி இருக்கிறியள்?...''

''அப்படியொன்றுமில்லை...சாதுவா தலையிடி...''

வசந்தி அவனைக் கவலையோடு பார்த்தாள்.

''அப்ப ஹோலுக்குப் போய் கொஞ்சம் றெஸ்ட் எடுங்கள்...ராத்திரி நித்திரை விழிச்சுப் படிச்சியளாக்கும்... இப்ப என்னும் பெஸ்ற் ரேம் முடியவில்லை...அதுக்கிடையில சோதனைக்குப் படியாதீர்கள்...'' என்று சிரித்தாள்.

அவன் விடைபெற்றான். அவளுடன் இன்னும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்திருக்கலாம் என்ற எண்ணம் எழுந்தது.

மேற்கு வானில் சூரியன் விழுந்துகொண்டிருந்தான்.

''என்ன கடும் யோசனை?...'' என்றான் சிகாமணி.

''நான் தான் புஸ்பாவை யோசித்துக்கொண்டு வாறன்...கோபால் வசந்தாவை...நீ யாரையடா?''

சிவராசன் வீதியின் ஓரத்தில் கிடந்த பெரிய கல் ஒன்றில் அமர்ந்துகொண்டான். கோபால் அவன் அருகில் அமர்ந்துகொண்டான். சிகாமணி பள்ளத்தாக்கில் சலசலத்துப் பாயும் நதியைப் பார்ப்பதற்காக வீதியின் ஓரத்திற்குச் சென்று அடர்த்தியாக வளர்ந்திருந்த புற்களை விலத்திக் கீழே பார்த்தான்.

''டேய்...டேய் இஞ்சை பாருங்கடா...'' என்று வியப்போடு தெய்வசிகாமணி அவர்களை அழைத்தான். அவன் குரலில் அளவிலா வியப்புத் தொனித்தது. சிவராசனும் கோபாலும் விரைந்து சென்று அவன் காட்டிய இடத்தைப் பார்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
நல்லூர் கிளை நூலகம்

மிக ஆழத்தில் நதி ஓடியது. நதி மட்டுமா?
புதிய அனுபவம்; காட்சி...

நதியில் இறங்கிக் குளிப்பதற்காக மறு கரை வீதியிலிருந்து சில படிகள் கீழே இறங்கின. அடிப் படியில் இருவர் காணப்பட்டனர். பல்கலைக்கழகக் காதல் ஜோடி ஒன்று, சுற்றுடலை மறந்து ஏகாந்தமாக அமர்ந்திருந்தது.

மேல் படியோடு அவளை அணைத்து அவன் முத்தமிட்டான். அவள் அவனை வெறியோடு தழுவியிருந்தாள். மூன்று இளைஞர்கள் தங்களை அவதானிப்பதை உணராமல் அவர்கள் இருந்தனர். மிகவுயரத்தில் அவர்கள் இருந்ததால் அவர்கள் காணவும் முடியாது; காணும் நிலையிலும் அவர்கள் இல்லை.

''கொடுத்து வைத்தவன்...''

முத்தங்கள் அளவின்றித் தொடர்ந்தன. கருமுகில் ஒன்று மலைக் குன்றில் படிந்தது. முகில் தழுவலில் குன்று மறைந்தது. வாழைத் தண்டுகள் மீது ஒளி படர்ந்து தெறித்தது.

சில்லென்ற காற்று வீசத் தொடங்கியது.

அவர்கள் திகைப்பின் வசமாயினர். இது தான் வாழ்க்கையா?

தூரத்தில் கார் ஒன்று விரைந்து வரும் சத்தம். மூவரும் விரைந்து வீதிக்கு வந்தனர்.

கார் அவர்களைத் தாண்டி விரைந்தது.

அவர்கள் மெதுவாக வீதியில் நடந்தனர்.

இங்கு நின்று பார்க்கும்போது பல்கலைக்கழகம் முழுவதும் பூரணமாகத் தெரிகின்றது. கலகா வீதியின் உலாவி வரும் உருவங்களும் விரையும் கார்களும் தெரிந்தன.

''மச்சான்... யூனிவேசிற்றி லைஃபை அனுபவிப்பதற்கு ஒரு துணை தேவை...'' என்றான் கோபாலரத்தினம்.

''உண்மை...'' என்றான் சிகாமணி.

(49307)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இனிப் போவோம்...'' என்றான் சிவராசன். அவர் களுடைய வார்த்தைகளை மறுக்கும் திராணி அவனுக்கு இல்லை. மலைக் குகைகள் முகிலின் படிதலால் மறைந்தன. நதிப் பள்ளத்தாக்கில் அந்த ஜோடியின் இறுக்கமான தழுவல்.

அப்பகந்தானை வீதியிலிருந்து படிப் பாதையொன்று ஆட்ஸ் தியேட்டரை நோக்கி இறங்குகின்றது. அடிப் பாதை நெருங்கியபோது சிகாமணி கூறினான்:

''இதாலை போய்...கலகா வீதியால ஹோலுக்கு வரு வம்...'

அவர்கள் மனநிலையில் அவன் கூறியது ஏற்றதாகப் பட்டதால் கலகா வீதியில் இறங்கினர்.

வீதி விளக்குகள் பளிச்சிடத் தொடங்கின. வீதியில் மாணவர்களும் மாணவிகளும் காணப்பட்டனர். அவர்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. ஹில்டா ஒபயசேகரா விடுதி நெருங்கியது.

விடுதி முகப்பில் பலர் நின்றிருந்தனர். விடுதியில் தங் கள் சிநேகிதிகளைச் சந்திப்பதற்காக வந்திருந்த மாணவர் கள் விடைபெற்றுக்கொண்டிருந்தனர்.

''சிவா...'' என்றான் கோபால்.

''அதில நிக்கிறது வசந்தியெல்லே?...''

அவன் மண்டப வாயிலை நோக்கினான்.

''வசந்தி போலக் கிடக்குது...''

''வசந்திதான்...'' என்றான் சிகாமணி.

அப்பெண்கள் விடுதியின் முன் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் யாவும் அவன் தலைமீது சரிந்து விழுந்தனவா? ஆழமான பள்ளத்தாக்கில் தலைகுப்புற விழுந்துகொண்டி ருந்தானா?

வசந்திதான் விடுதி வாசலில் நின்றிருந்தாள். அவள் முன் ஒருவன் பேசியபடி நின்றிருந்தான். அவர்கள் நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை...நெருக்கம்...யாவும் உண்மையை அப்படியே படம் பிடித்தன.

"மெடிக்கோ சபாநாயகம்... வசந்தி சரி..." என்றான் சிகாமணி.

சிவராசன் எச்சிலைக் கஷ்டப்பட்டு மென்று விழுங்கினான். கசாயம் போலத் தொண்டைக்குள் இறங்கியது.

கோபாலரத்தினத்தைப் பார்க்கவே முடியவில்லை.

என்ன ஏமாற்றம்? யார் யாரை ஏமாற்றியது?

அன்றிரவு முழுவதும் சிவராசன் தூக்கம் இன்றித் தவித்தான். அவன் மட்டுமல்ல...கோபாலரத்தினம் நிச்சயமாகத் தூங்கியிருக்கமாட்டான். அவன் தன் ஏமாற்றத்தை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டான்.

"நான் ஏமாந்து போனன்...அவள் ஏமாத்திப்போட்டாள்..."

"ஏன்ரா...உனக்கு அவள் ஓமெண்டாளா? அவள் ஏமாத்தினது என்கிறாய்?"

அவன் ஏக்கத்தோடும் ஏமாற்றத்தோடும் காணப்பட்டான்.

நினைத்துப் பார்க்கும்போது இதயத்தில் பேரிருள் சூழ்வது போலப் பட்டது.

'வசந்தி...வசந்தி...'

இரவு கழிந்துகொண்டிருந்தது.

அரைகுறைக் கனவுகள் வேறு...

சலசலத்துப் பாய்கின்ற கங்கைக்கரை ஓரத்தில் வசந்தி நடந்து செல்கின்றாள்...அவள் பின்னால் ஒருவன் தொடர்ந்து செல்கின்றான்...அவன் செனட் புளொக்கில் நின்றவாறு பார்த்துக் கொண்டிருக்கின்றான்...... இதோ அவன் அவளை நெருங்கிவிட்டான்...

—சபாநாயகம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைக் கண்டுவிட்டு வசந்தி ஓடுகின்றாள். அவன் விடவில்லை...விரைந்து ஓடி அவளைப் பற்றிப் பிடித்து...அவள் துடிக்கின்றாள். உதவி கேட்டுப் பதறுகின்றாள்... சிவராசன் ஓடி உதவ விரும்புகிறான்...முடியவில்லை.

—விழிப்பு வந்துவிடுகின்றது.

குன்றுகளுக்கு அப்பால் மாலைக் கதிரவன் சாய்ந்து கொண்டிருக்கின்றான்.

—வாழைத் தண்டுகளின் பளபளப்பும்...

அதிகாலை வெகு நேரம் அயர்ந்து போனான்.

சாப்பாட்டிற்குரிய விடுதி மணி ஒலித்த பின்பே சிவராசன் படுக்கையை விட்டு எழுந்தான்.

''என்ன சிவா, ராராவா உழட்டிக்கொண்டு கிடந்தாய்...?'' என்று கேட்டான் சிகாமணி.

## 10.

இரவு உணவருந்திவிட்டு, மேசை முன் படிப்பதற்காக அமர்ந்த போது சிகாமணி கேட்டான்: ''படத்துக்குப் போவமாடா... சத்தியத்ரித்தேயின் படம் ஒன்று இண்டைக்கு ஆர்ட்ஸ் தியேட்டரில காட்டுறான்களாம்...''

வாரத்தில் ஒரு நாள் ஆர்ட்ஸ் தியேட்டரில் சினிமாப் படம் ஒன்று காட்டுவார்கள். பெரும்பாலும் சிறப்பான படங்கள் இங்கு காண்பிக்கப்படும். அந்நாட்களில் பொதுவாக தியேட்டர் நிறைந்து வழியும்.

''படிக்க வேண்டுமடா, சிகா...'' என்றான் சிவராசன். அவன் விடுவதாகவில்லை.

''காசில்லாட்டி நான் இண்டைக்கு ரிக்கற் எடுத்துத் தாரன்ரா... பிளீஸ், வா சிவா.... புஸ்பா படத்துக்கு வாறாளாம்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்

"உதுக்காகத்தான் நீ படத்துக்கு உருக்கமாகக் கூப்பிட்டனி..."

சிவராசன் உடையை மாற்றிக் கொண்டு புறப்பட்டான். கோபாலரத்தினமும் அவர்களுடன் வந்தான். அவர்கள் வரச் சற்றுப் பிந்தியதால் மண்டபத்தில் ஒருங்கே அமர இருக்கைகள் கிடைக்கவில்லை. திக்குக்கு ஒருவராகக் காலியாகக் கிடந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

மண்டபத்துள் இருள் சூழப் படம் ஆரம்பமானது. சிவராசன் அருகில் ஒருமாணவி அமர்ந்திருந்தாள். அவளை அதற்கு முன் கண்ட நினைவு அவனுக்கில்லை. படம் திரையில் ஓடியது. வறுமை நிறைந்த ஒரு குடும்பத்தைத் தத்ரூபமாகப் படம் சித்திரித்தது. அக் குடும்பத்தில் தோன்றி ஒரு இளைஞன் முற்போக்கு எண்ணங்களோடு எப்படித் தன் குடும்பத்தையும், கிராமத்தையும் சுரண்டல் கார நிலச்சுவாந்தர்களிடமிருந்து காப்பாற்றி உய்விக்கின்றான் என்பதைச் சித்திரித்தது. விறுவிறுப்பும், சுவாரஸ்யமும் இல்லையாயினும், உள்ளத்தில் புத்துணர்ச்சியையும், கண்ணீரையும் அப் படம் வரவழைத்தது.

மங்கிய ஒளியில் மண்டபத்தில் அமர்ந்திருந்த மாணவர்கள் நிழலாகத் தெரிந்தனர். ஒருவர் தோளில் ஒருவர் சாய்ந்து அமர்ந்திருக்கும் காதல் ஜோடிகள் சிவராசனின் கண்களைக் குத்தின. அவன் முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒருவன், அருகில் அமர்ந்திருந்த தனது துணையின் காதோரத்தில் சாய்ந்து முத்தமிட்டான். அவனது விரல்கள் குறும்புகள் செய்ததைக் கண்டான். பாம்பாக அவளில் ஊரும் கரங்களிலேயே கண்கள் நிலைத்தன. இவர்களைப் போல இந்த மண்டபத்தில் எத்தனை பேரோ?

இடைவேளைக்காக விளக்குகள் ஒளிர்ந்தன. குறும்புகள் செய்தவர்கள் நல்ல பிள்ளைகளாக விலகி அமர்ந்து கொண்டார்கள். இளைஞனுக்கே உரிய ஆற்றாமை சிவராசனைக் கவ்வியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வரிசைகளுக்கு முன்னால் ஒரே வரிசையில் பல தமிழ் மாணவிகள் அமர்ந்திருப்பது தெரிந்தது. யார் அவர்கள்...?

—. வசந்தியும் அவர்களில் ஒருத்தி. இதயத்தில் பரபரப்பு. நீல வர்ணச் சேலை அணிந்திருந்தாள். தலையைத் திருப்பி அருகில் இருந்த தோழியுடன் எதையோ பேசிச் சிரித்தாள். வசந்தி திரும்பிய போது கன்னத்தின் பளபளப்பும், சிலிம்பி நின்ற காதோர மயிர்க்கற்றைகளும் அவனை ஒரு கணம் மெய்மறக்கச் செய்தன.

வசந்தி... வசந்தி... தலையை ஒருபுறம் திருப்பிச் சிரித்த போது தெரிந்த அழகு நிலை மனதில் திடமாகப் பதிந்து போனது. எவ்வளவு கூர்மையானமூக்கு? உதடுகள்பிரிந்து கொடுத்த போது ஓடு பிளந்த மாதுளம் பழப் பருக்கைகளாக ஒளி வீசிய பற்கள்?

விளக்குகள் மீண்டும் அணைந்தன. படம் திரையில்ஓடியது. அவன் மனம் படத்தில் படிய மறுத்து அடம்பிடித்தது.

படம் முடிந்து எல்லாரும் வெளியே வந்தார்கள்.

"நீ இங்கேயா நிக்கிறாய்? படம் பிடிச்சுதா?" என்றபடி சிகாமணி வந்தான். "புல்பா படத்துக்குவரவில்லை."

கோபால் சோர்ந்து காணப்பட்டான். மூவரும் விடுதியை நோக்கி நடந்தனர்.

"உங்களுக்கு ஒரு விசயம் சொல்லுவன். ஒருவருக்கும் சொல்லக்கூடாது..." என்றான் தெய்வ சிகாமணி. சிவராசனுக்குத் திக்கென்றது.

"என்னடா ஏதாவது வாய்ச்சுதா?" என்று வினவினான் கோபாலரத்தினம்.

"அதையேன் கேக்கிறாய்...... எனக்குப் பக்கத்தில ஒருத்தி... சோக்கான குட்டி... சும்மா கை போட்டன்... குண்டூசியால பக்கென்று குத்திப் போட்டாள்..." என்றான் தெய்வசிகாமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ..." என்று பெரிதாகச் சிரித்தான் கோபால்.

சிவராசன் எதுவுமே பேசவில்லை. அவன் தேகம் அனல் பிழம்பு. அந்தக் கணங்கள்...?

ஃ ஃ ஃ

பலவகையான காதல் செய்திகள் பல்கலைக்கழகத்தில் அடிபட்டன.

"வசந்தியும் சபாநாயகமும் இன்டைக்குப் பாக்கில திரிந்தினமாம்... முடிஞ்சிருக்கும்..."

"தங்கமணி, லெக்சரர் ஒராலை வளைக்கிறுவாம்..."

"ஆர்ட்ஸ் பெட்டையள் எல்லாம் இப்பசயன்ஸ் மாணவர்களைப் பிடிக்கப் பாக்கிறுளவை..."

"டொக்டர், எஞ்சினியமாரென்ருல் நல்லதென்று நினைக்கிறுளவை..."

"நீங்கள் இப்ப இங்க பெட்டையளுக்குப் பின்னுல சுத்தித் திரியிறியள்... நல்லாப் பிடிச்சுக் கிளாஸ் அடிச்சியள் எண்டால், நல்ல உத்தியோகமும் கிடைச்சிட்டுது என்ருல், அவளவை பின்னுல வருவாளவை... எல்லாம் பணமும் செல்வாக்கும் தான்..."

"சோமாவும் ருபேட்டும் லவ்வேசாம்..."

"பண்டா அண்டைக்கு லதாவை..."

"கோபால் 'பிறஸ்றேசனி'லை திரியிருன்..."

"சிகாமணி கெதியில புஸ்பாவைப் பிடிப்பான்... கடுமையாச் சல் அடிக்கினம்... அவவும் வளையிறு. இன்டைக்குக் கன்ரீனில ஒண்டா இருந்து ரீ குடிச்சினம்...... 'பில்லறி செக்சனில' தூணேடு மறைஞ்சு நின்று கதைச்சினம்..."

"சிங்காரம் லைப்ரரியிலை சிவனேசுக்கு 'லெகாஞ' போட்டாரும்..."

"தம்பிராசா மனேவை லவ் பண்ணுருரும்... ஒரே ரீயூற் குறுப்பாம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வசிகாமணி - புஸ்பா காதல் உண்மையானது. இரண்டு உள்ளங்களும் ஒன்றிடம் ஒன்று அன்பு கொண்டன. சிகாமணி புது மனிதனாக மாறிவிட்டான். அவன் அளவளாவுவதோடு மட்டும் திருப்தியடைந்தவனாகக் காணப்படவில்லை. அடிக்கடி சிவராசனிடம் குறைப்பட்டான்.

''தமிழ்ப் பெண்களைக் காதலிக்கக் கூடாதடா... ஒண்டுக்கும் விடாளவை... சிங்களப் பெண்கள் எப்படி ஜாலியாக இருக்கிறாளவை... லவ்லேஸ் பாக்கிற்குப் போவம் என்டால் மாட்டாளாம்... தொடக் கூடாது... இருக்கட்டும்...''

''தமிழ்ப் பெண் அப்படித்தான் இருக்க வேண்டும்... உன்னை நம்பி தனிமையில் வர...''

''போடாபோ...'' என்றான் சிகாமணி,

''போகப் போக எல்லாம் சரியா வரும்'' என்றான் கோபால்.

மறுநாள் சிகாமணி மகிழ்வோடு வந்தான்.

''மச்சான் அவளை இன்று தொட்டனடா...''

அவன் விழிகள் மகிழ்வில் ஒளிர்ந்தன. உலகத்தையே வென்ற பெருமிதம் அவனிடம் காணப்பட்டது. முகத்தில் என்றுமே காணாத பொலிவு நிலவியது.

''எப்படி இருந்துது... எங்கையடா...?''

''பில்லரிங் செக்சனில தான்... ஏழு மணி போல...... அவளுடல் நெருப்புத் தணலாகக் கொதிச்சுது...'' என்றான் சிகாமணி.

''உலகு இன்பமானது''

''சிகா ...இது சரியில்ல... உன்னை நம்பி ஊரில தங்கச்சிமார் இருக்கினம்... நீ புஸ்பாவைக் கலியாணம் செய்தால், உன்ரை தங்கச்சிமாற்றை நிலை...? கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா...? பாவமடா'' என்றான் சிவராசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலவென்று சிகாமணி சிரித்தான்.

"போடா, போ... ஆராவது கலியாணம் செய்யவா போகிறம்... இங்கை இருக்கு மட்டும் மகிழ்ச்சியாக இருப்போம்... ஒரு துணை இங்கை தேவை... அவ்வளவுதான்... அவளுக்கும் இது தெரியும்... டேய் சிவா, நீ துணிச்சல் இல்லாதவன்... சிவா, நடைமுறையில் இதைச் சிந்தித்துப் பார்ப்பம்... படிப்பு முடிஞ்சு வீட்டுக்குப் போறம்...உடனே வேலை கிடைக்குதா? இல்லை... எத்தனை பட்டதாரிகள் இண்டைக்குப் பல வருடங்களாக வேலையில்லாமல் இருக்கினம்...? வேலை இல்லாத பட்டதாரிக்கு... வீட்டில அடுக்கடுக்காக கலியாணத்துக்கு ஆயத்தமாக தங்கச்சிமாரை இருத்தி வைத்திருக்கிற பட்டதாரிச் சகோதரனுக்கு...... தக்க வயதில கலியாணமா நடக்கப் போகுது? வாழ்க்கையின் போராட்டங்களில் சிக்கித் தத்தளித்து மீளும்போது அவனது வாழ்கிற காலம் கடந்து விட்டிருக்கும். அப்ப ஒரு பெண் உறவு எதுக்கு? அது அப்ப?... அதனால தான் சொல்லுறன்... இப்ப இங்கை அனுபவிக்க வேண்டும். பூரணமாக இல்லாவிட்டாலும் ஓரளவாவது... காலம் நில்லாதடா... இளமையின் இனிய உந்தல்கள் என்றும் இருக்காது சிவா... வாழுற இளமையை, அனுபவிக்கிற இளமையை வீணே இழக்க நான் தயாராகவில்லை... கிடைக்கும் வரை அனுபவிப்பம்..."

அவனை சிவராசன் வியப்போடு பார்த்தான்: "துரோகம்......"

அவன் பெரிதாகச் சிரித்தான்.

அக்கா...... தங்கைமார்...... தம்பிமார்... இவ்வளவு பேரும் சிவராசனை நம்பியிருக்கின்றார்கள். அவன் பிழைவிட மாட்டான்.

அவன் கட்டிலில் விழுந்தான்.

'மனமே, என்னை மோசம் செய்யாதே. நான் படிக்கத்தான் வந்தேன். படித்து முன்னேறி எங்களை வஞ்சித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பணத்தைத் தேடத்தான் வந்தேன். என்னை நம்பி ஆயிரமாயிரம் கனவுகள் காணும் என் சகோதரங்களை வாழ்விக்கப் படிக்கத்தான் வந்தேன்.'

இதயத்தில் ஏதேதோ நினைவுகள். வசந்தியின் எழிலுறும் வதனமும், ஈரப்பசுமை நிறைந்த இதழ்களும் நினைவில் வந்தன.

பூரித்துத் திரண்ட கூர்க் கலசங்கள் நினைவில் வந்தன. இடை சிறுத்து அகன்ற...

புறுக்கழுத்து... 'உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்...? என்னை இப்படி ஏன் வருத்துகின்றாய்?'

மாலை இள வெயிலில் பளபளத்த செவ்விளநீர்க் குரும்பைகளும், அவற்றை மூடிய பனிப்புகார்க்கரங்களும் நினைவில் வந்தன.

முதலாம் தவணை முடிவதற்கு இன்னும் ஒரு வாரம் தான் இருந்தது. அந்த ஒரு வாரம் வரை அமைதியின்றித் தவித்தான்.

விடுதலைக்கு வீடு வந்த போது அவன் சூதுவாது தெரியாத பள்ளி மாணவன் அல்லன். உலகம் தெரிந்த கள்ள உள்ளம் கொண்ட இளைஞனாக வீட்டில் காலடி வைத்தான்.

# 11.

மூன்று மாதங்களின் பின் சிவராசன் ஊருக்கு வந்தான். வீட்டில் எவ்வித மாற்றமும் அவனுக்குத் தெரியவில்லை. பெரிய மனிதர் ஒருவரை வரவேற்பது போல அவனை வீட்டார் வரவேற்றனர். அவன் தம்பி, தங்கைமார் சற்று விலகி நின்று அவனைப் பார்த்துச் சிரித்தனர்.

"தம்பி, நீ நல்லாச் சிவந்து சற்றுப் பருத்தும் விட்டாய்..." என்று சிரித்தாள் கமலம் அக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிள்ளையை நீ கண்போடாதையடி...'' என்ருள் அம்மா. ''அங்கத்தையச் சாப்பாட்டைத் தின்று அரை வாசியா வந்திருக்கிருன். நீ என்னன்டா கொழுத்திட்டான் என்கிருய்...''

''கவனமாகப் படிக்கிறியா...?'' என்று மட்டும் கனகசபை கேட்டார்.

''ஓம்... நல்லாப் படிக்கிறன்... அதைத் தவிர வேறு என்ன வேலை... ஐயா...'' என்ருன் சிவராசன். படிப்புடன் மட்டுமா பல்கலைக் கழகப் பொழுதுகள் கழிந்தன. மாலை உலாக்கள்... விகற்ப சிந்தனைகள்... உணர்ச்சிச் சுழிவுகள்... இவையும் படிப்புடன் இருந்தன என்று அவரிடம் கூறிவிட முடியுமா? பல்கலைக்கழகம் படிப்பை மட்டும் சொல்லித்தரவில்லை. பாலுணர்வின் பல்வேறு சுவைகளையும் சொல்லித் தருகின்றது என்பதை எப்படிச் சொல்லிவிட முடியும். மலைநாட்டின் இயற்கை அழகையும், பெண்களின் எழிலையும் இரசித்துச் சுவைத்தோம் என்று எப்படிக் கூற முடியும்? ஊருக்கு வந்ததன் பின்தான் வீட்டின் நிலைமை பூரணமாகப் புலப்படுகின்றது. அவன் படிப்பின் உயர்ச்சியில் நம்பிக்கை வைத்து தங்கள் எதிர்கால நல்வாழ்வை அமைத்துக்கொள்ளக் காத்திருக்கின்ற சகோதரங்களைக் கண்டான். பல்கலைக் கழகத்தில் எவ்வளவு சுயநலமாக அவன் வாழ்ந்து விட்டான்.

''சுப்பிரமணியத்தாற்றை பொடியனுக்கு சர்வகலாசாலை முழு உபகாரச் சம்பளம் வழங்கியிருக்காமே? அவங்கள் எவ்வளவு பணக்காரர்... அவங்களுக்கு ஏன் உபகாரச் சம்பளம்? உனக்கு ஆக அரை உபகாரச் சம்பளம்தானே கிடைச்சுது?'' என்று கேட்டார் கனகசபை.

''அதுக்கு நான் என்ன செய்ய ஐயா... நான் உண்மையான வீட்டு நிலைமைகளை எழுதி பேசரிக்கு விண்ணப்பித்தேன்... அவங்கள் பொய்யான தகவல்களைக் கொடுத்து விண்ணப்பித்தான்கள். அதிகாரிகளும் அதை நம்பியுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசரி கொடுத்திருக்கினம்... எல்லாம் இன்புளுவன்ஸ் தான்...''

''எல்லாத்துக்கும் செல்வாக்குத் தேவை... இதாவது கிடைச்சுதே...''

சாப்பிடும் போது கமலம் அக்கா மூன்று மாதப் புதினங்களைக் கதை கதையாகக் கூறினாள். தனக்கு ஐயா பேசிய கமக்கார மாப்பிள்ளையைப் பற்றியும்- தான் மறுத்ததையும் கூறினாள். ஐயாவும் அம்மாவும் ஒவ்வொரு நாளும் அவனைப் பற்றித்தான் பேசுவார்கள் என்றும், அவர்கள் கட்டுகின்ற ஆசைக் கனவுகளையும் கூறினாள். ஐயா இப்போது குடிப்பதை மிகவும் குறைத்துவிட்டதாகவும் கூறினாள்.

''சரோசாவுக்கு ஒரு எஞ்சினியரைப் பேசி வந்தது... மாட்டென்டிட்டாள்...'' என்றாள் கமலம் அக்கா.

''ஏன் மாட்டென்டவள்...?''

''ஆருக்குத் தெரியும்... படிக்கப் போறாளாம்... அட்வான்ஸ் லெவல் எடுக்கப் போறாளாம். யூனிவசிற்றிக்கு எடுபட்டு வந்து பி. ஏ. ஆகப் போறாளாம்...''

சிவராசன் அக்காவை வியப்போடு பார்த்தான். அவள் தொடர்ந்தாள்: ''சரோசாவுக்கு ஏன் படிப்பு... உனக்கு இணையாப் படிக்க விரும்புகிறாளாக்கும்...''

அவன் எதுவும் பேசவில்லை. சாப்பிட்டுவிட்டு வெளியே புறப்பட்டான்.

வழியில் இராமலிங்கத்தாரின் மகன் கனகராசனைக் கண்டான். அவன் முகத்தில் தான் பல்கலைக்கழகத்திற்கு எடுபடவில்லை என்ற கவலை தெரிந்தது.

''எப்படி சிவா?'' என்றான்.

''பரவாயில்லை...''

''நான் இந்த முறை கவனமாகப் படிக்கிறன்...இந்த முறை எப்படியாவது எடுபட்டிடுவன்... கட்டாயம் எடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டும்... உன்ர பெஸ் இயர் ரிசூற்றுகளைத் தாறியா? அதிலை அட்வான்ஸ் லெவலுக்குக் கேள்வியள் போடுவினம் என்கினம்...'' என்று கேட்டான் அவன்.
''என்ன சிவா, உன்ர மச்சாள் சரோசா மீண்டும் பள்ளிக்கு வரத் தொடங்கியிருக்கிறு... பெட்டையள் பாஸ் பண்ணிடுவாளவை... வீட்டில இருந்துபடிக்கிறதுதானே.''

சரோசாவின் புதிய போக்கு அவனுக்கு வியப்பைத் தந்தது. அவள் ஜி. சி. ஈ. சித்தியடைந்து விட்டு தொடர்ந்து படிக்காமல் ஓராண்டு வீட்டில் இருந்தாள். பின் மீண்டும் படிக்கத் தொடக்கியிருக்கின்முள். என்ன எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டிருக்கிறுளோ?

அன்று அவன் இன்னெருரு விடயமும் கேள்விப்பட்டான். வாசிகசாலையில் அவன் நண்பன் பாலா சொன்ஞன்: ''என்னடா சிவா... கனகராசன் உன்ர மச்சாளை வளைக்கிருனும்...''

இதைச் சிவராசன் கேட்ட போது அவனிதயத்தில் பெரும் கல்லொன்று அழுத்தியது போல உணர்ந்தான். ஏன் அவன் இதற்காகக் கவலைப்படவேண்டும்? இதயமே, நீ இவ்வளவு கேவலமானனியா?

* * *

மாலை மெதுவாகப் படர்ந்து கொண்டிருந்தது. இரவு மெல்லிய மழை பெய்ய இருக்கிறது என்பதைக் கீழை அடிவானில் கருக்கூட்டிய கருமேகத் திரள்கள் காட்டின. வாசிகசாலையில் சிலர் அன்றைய பேப்பர்களைப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

சிவராசன் மாமாவின் வீட்டுப்படலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். வீட்டு முற்றத்தில் எவரையும் காணவில்லை, மாமா வெளியில் தோட்டத்திற்குப் போயிருப்பார். மாமி பக்கத்துவீடுகளுக்கு ஊர்வம்பளக்கப் போயிருப்பாள். சரோசா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவாசலினுள் அவன் நுழைந்தான். மாமா என்றழைக்க அவன் வாய் திறந்தான். அழைக்கவில்லை. வீட்டு ஹோலின் ரேடியோ மேசை முன் சரோசா அமர்ந்து ஏதோ சுவாரஸ்யமாகப் படித்துக்கொண்டிருந்தாள். சரோசா எப்பவும் 'நீற்று'னவள் தான். முகத்தை நன்கு கழுவி, பவுடர் தடவி, பொட்டிட்டிருந்தாள். அவள் கருங்கூந்தற் பின்னல் முன் பக்கத்தில் விழுந்து கிடந்தது. அவன் அவளைச் சற்றுநேரம் கண்ணிமைக்காது பார்த்தான். பல்கலைக்கழகத்தில் அவன் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கின்றான். அந்தப் பல்கலைக் கழகப் பெண்களின் அழகில் ஒருவகை அவசரம்... ஒருவகை வேகம்...தெரிந்தது. இந்த அழகில் அமைதியும் சாந்தமும் தெரிந்தன. முன்னையது காட்டாற்று வெள்ளம்; பின்னையது மென் நடை பயிலும் கங்கை.

எதற்கோ தலை நிமிர்ந்த சரோசா, தலைவாசலில் ஓர் ஆடவன் தன்னைப் பார்த்தபடி நிற்பதைக் கண்டு எழுந்தாள். அவள் முகத்தில் புன்னகை அரும்பியது. முகம் மலரச் சிரித்தாள்.

''அத்தான்... இப்பதான் வந்தீங்களா...'' என்றபடி தலைவாசலுக்கு வந்தாள்.

சிவராசன் எச்சிலை மென்று விழுங்கினான். அவன் கண்ணிமைக்காது அவளைப் பார்த்ததை அவள் கவனித்திருப்பாளோ?

''இப்பதான் வந்தன்... மாமா, மாமி ஒருத்தரையும் காணவில்லையே?''

''எங்கோ போட்டினம்... இருங்களேன், அத்தான்''

அவன் தலைவாசலில் போட்டிருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து கொண்டான். சரோசா தலைவாசல் கப்பைப் பிடித்தபடி நின்றிருந்தாள். முற்றத்து மல்லிகைக்கொடி கொழுகொம்பில் படர்ந்திருக்கின்ற காட்சி அவனுக்கு நினைவு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தான்...... யூனிவேசிற்றி எப்படி......? நல்லாக் கொழுத்திட்டியள்..." என்று அவள் சிரித்தாள்.

"நான் மெலிஞ்சிட்டன் என்று அம்மா சொல்லுறு"

அவள் சிரித்தாள், பற்கள்தாம் எவ்வளவு வெண்மை?

"கொஞ்சம் கொழுத்திட்டியள்... முந்தி நல்ல ஒல்லியா இருந்தியள்..."

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"சரோ..." என்றான். "இப்ப என்ன கடுமையாய்ப் படிச்சுக்கொண்டிருந்தாய்?"

"இலக்கிய வரலாறு அத்தான்... நான் அடுத்த வரியம் சோதனை எடுக்கப் போறன்..."

"ஏன் படிப்பில திரும்பவும் கரிசனை?"

"சும்மா வீட்டில இருக்கக் கூடாது, அத்தான்...... சும்மா இருந்தால் ஐயா......" சரோசா தயங்கினாள்.

"என்ன சரோ...?"

அவள் தலையைக் குனிந்து கொண்டு கூறினாள்: "கலியாணம் பேசுறார்..."

"ஏன் செய்யிறது தானே?"

அவள் வேகமாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளது விழிகள் ஆழத்துள் எதையோ தேடின. அவள் கண்களில் மெல்லிய திரையாக நீர் படர்ந்தது.

"சரோ..." என்றான், அவன்.

"நான் இப்ப கலியாணம் செய்யமாட்டன்..." என்றாள். அவள் குரலில் ஒருவித பிடிவாதமும் ஏக்கமும் காணப்பட்டன.

அவர்களிடையே நீண்ட மௌனம் நிலவியது. மௌனத்தை சரோசா கலைத்தாள்.

"அத்தான் நீங்க படிச்ச நோட்ஸ் எல்லாத்தையும் போறத்துக்கு இடையில எனக்குத் தந்திட்டுப்போங்கோ".

"சரி..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோசா தேநீர் ஊற்றி வந்தாள். தேநீரை வாங் கும் போது அவளது விரல்கள் அவன் கரத்தில் பட்டன.

எவ்வளவு மென்மையான விரல்கள். தாமரை இதழ் களுக்குக் கூட இவ்வளவு மென்மை இருக்குமா?

''எஞ்சினியர் ஒருத்தரைப் பேசினதாமே?''

''அதைப்பற்றி ஒன்றும் கதைக்க வேண்டாம்...... கதைச்சியள் எண்டால் உங்களோடும் கதையாமல் விட் டிடுவன்... ஐயாவுக்கு விசர்...'' என்றாள் அவள் கோபத் தோடு.

இருந்தாற் போல சரோசா கேட்டாள்: ''அத்தான் ஒன்று கேட்பன். கோபிக்க மாட்டியளே...?''

அவன் அவளை வியப்புடன் பார்த்தான்.

''யூனிவேசிற்றியிலை இப்ப ஆரையாவது பார்த்து வைச்சிருக்கிறியளா?''

''சீச்சி... என்ர முகரக்கட்டைக்கு ஆர்தான் பார்ப் பாளவை?''

''ஏன் உங்களுக்கு என்ன குறை?'' என்றவள் உதட் டைக் கடித்துக் கொண்டாள்.

''சரோ...'' என்றான். ''நான் படிக்கத்தான் அங்கை போனனான்... வாழ்வு தேடவல்ல...''

''படிப்பே வாழ்விற்குத்தான் அத்தான்... நான் படிக் கிறதே அதற்காகத்தான்...''

''ஏன் உனக்கு என்ன குறை...? மாமாட்டை பண மிருக்கு... ஒரே பெண்... நீ உழைத்தா குடும்பம் நடக்க வேண்டும்...?''

''என்னதான் இருந்தென்ன? ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு குறை...''

''உனக்கென்ன குறை!'' என்று கேட்டான் சிவராசன்.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உண்மையாகவே அத்தான், என் குறை உங்களுக்குத் தெரியவில்லையா?'' அவள் விழிகள் எதையோ அவனிடம் யாசித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரோ...''

அவள் தொடர்ந்தாள்: ''அத்தான் எனக்கு அழகாகப் பேசத் தெரியாது.... ஆனால்,என் னிதயத்தைத் திறந்து உங்களிடம் சொல்லாமல் விடவும் என்னால் முடியவில்லை. நீங்கள் யூனிவேசிற்றிக்குப் போன நாளிலிருந்து நான் உங்களை இழந்து விடுவேனோ என்று பயப்பிடுறன்...''

''சரோ...'' அவனால் எதுவும் பேசமுடியவில்லை.

''என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா? உங்களுக்கு தகுதியானவளாக என்னை நான் மாற்றிக் கொள்வேன், அத்தான்...''

அப்போது படலையைத் திறந்து கொண்டு தம்பிராசா வந்தார். சரோசா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ராசனே?... எப்ப வந்தனி... அத்தானுக்குக் கோப்பி கொடுத்தியே?''

''இப்பதான் வந்தன் மாமா... தேத்தண்ணி குடிச்சிட்டன்.''

''எப்படி படிப்பு? சரோவுக்கும் ஒரு கலியாணத்தை முடிப்பம் என்று பார்த்தன்... அவள் படிக்கிறது எண்டு ஒன்றைக்காலில நிக்கிருள்... முந்தநாள் கூட அச்சுவேலியில இருந்து ஒரு நல்ல சம்பந்தம் பேசி வந்தது... பழைய சியாமன்ர மகனும்... சபாநாயகம் பொடியனுக்குப் பெயர். உனக்கும் தெரிந்திருக்கும்... டொக்டருக்கு படிக்கிறுனும்... பொடியனுக்குப் படிக்கிறதுக்குக் காசு தேவைப்படுது. அதுதான் கலியாணம் பேசி எழுதிவிட்டு, சீதனக் காசில படிக்கிறதுக்கு...'' தம்பிராசா கூறிக் கொண்டு போனுர். சிவராசன் சரோசாவை நிமிர்ந்து பார்த்தான்.

அவள் கோபத்தோடு உள்ளே விரைந்தாள். அவர் சிரித்தார்.

''உவளுக்குக் கோபம் வந்திட்டுது...''

அவனிதயத்தில் பூகம்பமே நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாம் பகுதி

## 12.

விடுதி அறையின் பலகணியிலிருந்து பார்த்த போது, கங்கைக்கரைப் புறமாக அமைந்திருக்கும் சாய்வுத் தளங்களில் அமைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகக் கட்டிடங்கள் நிலவின் ஒளியில் வெண் திடர்களாகக் குளிப்பது தெரிந்தன. நேரம் இரவு பத்து மணிக்கு மேலிருக்கும். சில விடுதிக் கட்டிடங்களின் மேல்மாடிகளில் சில அறைகளில் மின் விளக்கு ஒளிர்வது கண்ணாடி யன்னல்களூடாகத் தெரிந்தது. நாளை இந்நேரம் பெரும்பாலும் எல்லா விடுதி அறைகளின் யன்னல்களூடாக மின் விளக்குகளின் ஒளிக் கற்றைகள் தெரியும்.

நாளை பல்கலைக்கழகத்திற்குப் புதிய மாணவர்கள் வரப்போகின்றார்கள்.

சிவராசன் பலகணியின் கைப்பிடிச்சுவரில் அமர்ந்திருந்தான். நினைத்துப் பார்க்கும்போது அவனுக்கே வியப்பாக இருந்தது. அவன் பல்கலைக்கழகத்திற்கு வந்து ஓராண்டு கழிந்துவிட்டது.

காலம் தான் எவ்வளவு விரைவாக ஓடுகின்றது. நேற்றுத்தான் பல்கலைக்கழகத்திற்கு வந்ததுபோல இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. மகாவலிகங்கையும் இரு தடவை பள்ளத்தாக்கு முட்டிவழிய நீர்ப்பெருக்கெடுத்து ஓடி அடங்கியது.

இன்றுகாலை தான் சிவராசனும் ஏனைய சீனிய மாணவர்கள் பலரும் விடுதிக்கு வந்திருந்தனர்.

அவன் சீனிய மாணவன்; ஆதலால் இவ்வாண்டு விடுதியின் மாடி அறை ஒன்று கிடைத்திருந்தது. சிகாமணி தான் இவ்வாண்டும் அவன் அறை நண்பனாக வந்திருந்தான்.

அவன் பல்கலைக்கழகத்திற்குக் காலடி எடுத்துவைத்த போது எதுவும் தெரியாத ஒரு கிராமத்துப் பையனாகவே இருந்தான். ஆனால், இந்த ஓராண்டுக் காலம் அவனுக்கு எத்தனையோ புதிய விடயங்களை அறிய வைத்துள்ளது. கள்ளம் புகுந்த உள்ளம்.

இளமையின் துடிப்பும், புதியவற்றை அறியவேண்டும் என்ற வேட்கையும், அழகு இரசனையும் அவனிடம் இன்று மேலோங்கியுள்ளன. மனித வாழ்வின் இயக்கமே இணை சேர்வதின் நெருக்கமோ என்று கூட அவன் எண்ணமிட்டிருக்கின்றான். படிப்பும் உடல் உந்தலும் ஆதிக்கம் செலுத்துகின்ற பல்கலைக்கழகச் சூழலில் இத்தகைய எண்ணத்தைத் தவிர வேறு சிந்தனைகளுக்கு முதலிடம் அளிப்பது கடினமே.

குளிர் காற்றுப் பலமாக வீசியது.

''டேய், சிவா... லையிற்றை அணைச்சிட்டுப் படடா...'' என்று கட்டிலில் கிடந்தபடி குரல் கொடுத்தான் தெய்வசிகாமணி. சிவராசன் பலகணிக் கதவைச் சாத்திப் பூட்டி விட்டுக் கட்டிலில் வந்து அமர்ந்தான்.

''என்ன மச்சான்... நித்திரை வரவில்லையா...?'' என்றபடி எழுந்து வந்தான் சிகாமணி. மேசை மீதிருந்த சிகரெட்டொன்றை எடுத்துக் கொளுத்திக்கொண்டான்.

தெய்வசிகாமணி சிகரெட் புகைக்கப் பழகிக் கொண்டான். பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தவேளையில் நித்

32908

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை வராதிருக்கச் சிகரெட் புகைத்தால் நல்லது என எவனோ ஒருவன் சிகாமணிக்கு ஆலோசனை வழங்கிவிட்டான். அன்று தொட்டது... தொடர்கின்றது.

''நீ என்னடா செய்யப் போகிறாய்...? இரண்டு ''பீ'' ஒரு ''சீ'' எடுத்திட்டிருக்கிறாய்... என்னத்தில ஒனஸ் செய்யப் போறாய்? இக்கோணமிக்சிலா...? எனக்கொன்றும் ஒரு பிரச்சினையுமில்லை. எல்லாம் ''சீ''...'' என்றான் தெய்வ சிகாமணி.

சிவராசன் சிகாமணியை ஏறிட்டுப் பார்த்தான்.

''நீயும் கவனமாகப் படித்திருந்தால் நல்ல மாக்ஸ் எடுத்திருக்கலாம். படிக்கிற நேரத்தில புஸ்பாவோடை திரிஞ்சாய்... அவளையும் கெடுத்து நீயும் கெட்டு... இந்த மட்டிலாவது பாஸ்பண்ணினாயே...?''

''ஓமடா... சிவா... எனக்கும் இப்பத்தான் அறிவு வருகுது... கவனமாகப் படிச்சிருக்கலாம்... என்னாலதான் தானும் படிக்க முடியவில்லை என்று அவளும் பேசுறாள்... இனி நினைச்சுப் பார்த்து என்ன புண்ணியம்... அது சரி நீ என்னத்தில ''ஒனஸ்'' செய்யப் போறாய்?''

''பொருளாதாரத்தில தான்... ஆனா யோசித்துப் பார்த்தால் வீணா ஏன் இன்னொரு வரியத்தைக் கூடச் செலவழிக்கவேணும் என்றிருக்குது... இந்த ஒரு வரியம் படிச்சதிலேயே என்ர குடும்பம் மிகவும் களைச்சிட்டுது. சிகா... நான் நினைக்கிறன்... மூன்று வரியம் இன்னமும் படிக்கிறதென்றால் எங்கட தோட்டக்காணி சரி... கெதியாப் பட்டம் பெற்றிட்டு ஏதாவது வேலையில நுழைஞ்சிட்டால் நல்லதென்று படுகுது... அக்காவுக்கும் வயதாகிறது. தங்கச்சிமார்... தம்பி...''

சிவராசனின் கண்கள் கலங்கிவிடுமாப் போலத் தவித்தன. அறையின் மூலையை வெறிக்கப் பார்த்தான்.

''உதுக்குக் கவலைப்பட்டு என்னடா செய்யிறது... ஒனஸ் செய்தால்... ஒரு கிளாஸ் அடிச்சியென்டால் யூனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசிற்றியிலேயே ஒரு லெக்சரராக வந்திடலாம்... பிறகென்ன...''

சிவராசன் சிரித்தான்.

''சிகா... ஒனஸ் செய்யிற ஒவ்வொருவரும் லெக்சரராக வரலாம் என்ற நப்பாசையிலதான் செய்யிருன்கள்... ஒனஸ் செய்யிற எல்லாரும் லெக்சரராக வந்திட முடியுமா? கிளாஸ் அடிச்சிட்டே இன்று எத்தனை பேர் வெளியில வேலையில்லாமல் இருக்கினம் உனக்குத் தெரியுமா? யூனிவேசிற்றியில கிளாஸ் அடிக்கிறதுக்குத் திறமை மட்டும் காணுதடா? வேறும் சில திறமைகள் தேவை...'' என்றபடி சிவராசன் சிரித்தான்.

''பெட்டையள் ஒனஸ் செய்தால் கிளாஸ் அடிச்சிடுவாளவை...''—சிகாமணி.

''எங்கையும் அப்படித்தான்... பலவீனம்...''

இருந்தாற்போல வானத்தின் மேல் மூலையில் மின்னல் ஒன்று வெட்டிப் பாய்வது கண்ணாடி யன்னலூடாகத் தெரிந்தது. சிவராசனின் விழிகள் ஒருகணம் யன்னல் பக்கம் திரும்பிவிட்டுச் சிகாமணியைப் பார்த்தன.

''தற்செயலாகப் புஸ்பாவிற்கு ''பீ'' கிடைச்சு ஒனஸ் செய்யப்போனுல் நீ என்னடா செய்வாய்? அவளைச் செய்ய விடுவாயா...!''

''விடமாட்டன்...'' என்ருன் சிகாமணி. ''பொழுது போக்காகத்தான் அவளைக் காதலித்தன் சிவா... இங்க இருக்குமட்டும் முசுப்பாத்தி பண்ணிட்டு போகேக்கை விட்டிட்டுப் போகலாம் என்று தான் முதலில எண்ணினன்... ஆனு இப்ப... அவளை இழக்க என்னுல் முடியும் என்று தெரியவில்லை... அவளை நான் உண்மையாக் காதலிக்கிறனடா? அவளைத்தான் கலியாணம் செய்யவும்போறன்...''

சிவராசன் அவனை வியப்போடு பார்த்தான். காதல் உணர்வுகள் எப்படி எப்படியெல்லாம் ஒருவனை மாற்றி விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புஷ்பா கெட்டிக்காரி...'' என்முன் சிவராசன். ''உன்ரை வீட்டார் விடுவினம் என்று நான் நினைக்க வில்லை...''

தெய்வசிகாமணி சற்றுநேரம் தலை குனிந்து மௌனமாக அமர்ந்திருந்தான். நெற்றியில் சுருக்கங்கள் தோன்றின.

''என்ர வீட்டார் ஒத்துக்கொள்ளுறது கஷ்டம் தான்ரா... அம்மா ஒத்துக்கொண்டாலும் அப்பு ஒத்துக் கொள்ளார்... இரவு பகல் பாராது... பனி குளிர் மழை பாராது கடலில் தங்கி உழைத்து என்னைப் படிப்பிக்கிறூர்...என்ர சமூகத்தில நான் படிச்சு முன்னுக்கு வந்து ஒரு முன்னேடியாக இருக்க வேண்டும் என்று அவர்விரும்புகிறூர் என்று நான் யூனிவேசிற்றிக்கு எடுப்பட்டனே அன்றிலிருந்து என்னை வலையைத் தொடக்கூட அவர் விடுகிறதில்லை....''

சிவராசன் எதுவும் கூருது அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். பொறுப்பாகவும் சிந்திக்கச் சிகாமணியால் முடிகின்றது. இளமை உந்தல்களின் ஒரு சிலதேவைகள் பூர்த்தியாஞல் பொறுப்பாகச் சிந்திக்கவும் முடியுமோ? இளமையின் தேவைகள் பூரணமாக நிறைவேறிஞல்...?

கட்டுப்பாடுகள் மனித குலத்துக்கு மட்டும்தான். கட்டுப்பாடுகளை மீறித் தாவிவிட விருப்பம் இருந்தும் தாய் தகப்பன், சகோதரங்கள், அன்பு, பாசம் என்ற உறவுச் சிக்கல்கள் தடைவிதிக்கின்றனவே?

இருந்தாற்போல தெய்வசிகாமணி சிரித்துக்கொண்டான்.

''என்னடா...''

''வசந்தியை எண்ணிக்கொண்டன்... பாவம் கோபாலரத்தினம்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வசந்தியின்ர சபாநாயகத்திற்குக் கலியாணம் பேசப்படுகுதாம்...'' இதனைக் கூறும்போது சிவராசனின் இதயத்தில் நெருக்கென்று ஒரு முள் தைத்தது.

''பாவம் வசந்தி...''

''வசந்திக்குப் படிக்கிற காலத்திலேயே இன்னொரு லவ் இருந்ததாம்... யூனிவேசிற்றிக்கு வந்ததும் அந்த லவ்வுக்கு பூட்ஸ் கொடுத்திட்டாளாம்...''

''நானும் கேள்விப்பட்டனான்... இந்தப் பயங்கர அழகை... பார்த்தோரைப் பித்து கொள்ளவைக்கும் அழகை ஆராவது விட்டு வைத்திருப்பான்களே? அவளுடைய அழகு குடும்பத்திற்குரிய அழகில்லையடா...'' என்றான் சிகாமணி.

சிவராசனின் இதயம் மெதுவாக வலித்தது. இப்போது யோசித்துப் பார்க்கும்போது, வசந்தியின் அழகு பயங்கர அழகென்றே அவனுக்குப் படுகின்றது.

வெளியே மெதுவாக மழை தூற ஆரம்பித்திருந்தது.

''லையிற்றை நூத்திட்டுப் படுப்பம்...'' என்றான் சிகாமணி.

''நாளைக்குப் புதிய மாணவர்கள் யூனிவேசிற்றிக்கு வருகினம்''

''ஓமோம்... நாளைக்கு ஒருக்கா றெயில்வே ஸ்ரேசனுக்குப் போக வேண்டும்... புது ஆக்களை ஒருக்கா வரவேற்க வேண்டும்...'' என்றான் சிகாமணி.

''என் றுக் பண்ணப் போறியா? பாவங்களடா...?''

''பழிக்குப் பழி வாங்காமல் விடுகிறதே?''

''ஏன் இப்ப வாற புதுப் பெடியளா உன்னை றுக் பண்ணினவங்கள்...''

உண்மையில் இது ஒரு புதுவகையான பழிக்குப்பழி தான். பரம்பரையாக இந்தப் பழிவாங்கல் பட்டங்களைச் சுழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில் இருந்து கொண்டே வருகின்றது. புதிய மாணவர்கள் பழைய மாணவர்களிடம் பட்ட ருகிங் அவஸ்தையை பின்னால் வரும் புதிய மாணவர்கள் இவர்களிடம் படுகின்றனர்.

''நீ ருக் பண்ண மாட்டியா...?'' என்று சிகாமணி கேட்டான்.

''இல்லை... அவர்களுடன் அன்பாகப் பழகுவன்...'' என்றான் சிவராசன்.

''உனக்கு யூனிவேசிற்றி லைஃபை என்யோய்பண்ணத் தெரியவில்லை...''

விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையில் படுத்தான் சிவராசன். உள்ளம் உறங்க மறுத்தது.

அவனுக்கு வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியவில்லை என்று சிகாமணி கூறிவிட்டான்.

உண்மை அதுதானா? அவனுக்கா வாழ்க்கையை அனுபவிக்கத் தெரியவில்லை...? வாழ்க்கையை அதன் போக்கில் அனுபவிக்க அவனால் முடியாது. முடியவில்லை. கடமைகள் தடைசெய்யும் போது கட்டுப்பாடற்ற போக்கில் கிடைக்கும் சுகம் ஒழுங்கானதாக இருக்காது.

கிடைக்காத சுகத்திற்காக அவன் ஒருகாலும் ஏங்கியதில்லையா?

அவன் இதயம் குழம்பித் தவித்தது. விடை காண அவனால் முடியவில்லை.

* * *

காலைச் சாப்பாட்டிற்குரிய மணி அடித்ததன் பின்பே சிவராசன் கண் விழித்தான். சிகாமணி நேரத்தோடேயே நித்திரை விட்டு எழுந்து சென்று விட்டது தெரிந்தது. முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு மாடியிலிருந்து சாப்பாட்டு மண்டபத்திற்கு இறங்கி வந்தான்.

கீழே என்றுமில்லாத கலகலப்பு நிறைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் ருகிங் செய்கின்ற பேரொலி அது.

அவனுடைய உதடுகளில் மெல்லிய ஒரு புன்னகை படர்ந்த அதே வேளையில் பரிதாப உணர்வும் தலை தூக்கியது. படிகளில் இறங்கிக் கீழே வந்தான்.

புதிய மாணவர்கள் பலர் வரிசையாக நின்றிருந்தனர். பலிக்கு நிற்கின்ற ஆடுகள்.

சிகாமணி உட்பட ஐந்தாறு பழைய மாணவர்கள் அவர்கள் முன் அட்டகாசமாக நின்றிருந்தனர்.

"ப்ளடி... பிறஸ்சேர்ஸ்..." என்று சிகாமணி உறுமினான்.

சிவராசன் அவர்களைக் கவனித்தபடியே சாப்பாட்டு மண்டபம் நோக்கி நடந்தான்.

வரிசையாக நின்றிருந்த மாணவர்களில் ஒருவன்...

—கனகராசன். அவனோடு கூடவே படித்து பெயிலாகி இம்முறை பல்கலைக்கழகத்திற்கு எடுபட்டிருப்பவன். ஓவிசியர் இராமலிங்கத்தாரின் மகன். அவன் பல்கலைக் கழகத்திற்கு எடுபட்டிருப்பது சிவராசனுக்குத் தெரிந்தே இருந்தது. ஆனால், அவனை, அதே மாக்கஸ் பெர்னண்டோ மண்டபத்தில், இந்நிலையில் சந்திப்பான் என்று அவன் நினைத்திருக்கவில்லை.

அவனுடைய கால்கள் சற்றுத் தரித்து நின்றன. கனகராசனின் விழிகள் அவனிடம் எதையோ யாசித்தன. என்னை இந்தப் புலிகளிடம் இருந்து காப்பாற்று என்கின்றனவோ?

அவனிடம் எதையோ சொல்ல சிவராசன் முயன்றான். அதற்குள் சிகாமணி, கனகராசனைச் சுட்டிக் காட்டி "டேய் கிழங்கா... இப்படி முன்னாலவா..." என்று கர்ச்சித்தான்.

சிவராசன் அவ்விடத்தைவிட்டு மெதுவாக அகன்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13.

மென் புகார் பூரணமாக நீங்காத காலைப் பொழுதில், பாதைப் படிகளில் கால்களைப் பதித்துக் கீழிறங்கும்போது, கலகா வீதியில் மாணவிகள் பலர் கும்பலாக அசைந்து நடப்பது தெரிகின்றது. இன்று பல்கலைக் கழகத்தில் பழைய மாணவர்களின் ஆரவார ஒலியும்புதிய மாணவர்களின் பயம் நிறைந்த ஏக்க நிலையும் ஆட்சி செலுத்தும். சிவராசன் இன்று தனித்துத் தான் விரிவுரை மண்டபம் நோக்கிச் செல்கின்ருன். தெய்வசிகாமணி வெகு நேரத்தோடு புதிய மாணவர்களை ''வரவேற்பதற்காக''ச் சென்று விட்டான்.

மாக்கஸ் பெர்ணண்டோ விடுதியிலிருந்து ஜேம்ஸ் பீரிஸ் விடுதி அருகாகக் கீழிறங்குகின்ற பாதைப் படிகள் கிஸ்லிங் பெண்ட் அருகில் வந்து மிதக்கின்றன. சிவராசன் கலகா வீதியில் கால் பதித்தபோது கிஸ்லிங் பெண்ட் முனையில் புதிய மாணவிகள் சிலர் சீனிய மாணவர்கள் சிலரிடம் அகப்பட்டு நிற்பதைக் கண்டான். கிஸ்லிங் பெண்டின் மதகுக்குக் கீழால் மகாவலி கங்கையை நோக்கி விரைகின்ற சிற்ருறு மெதுவாக அழுதவாறு ஓடிக்கொண்டிருந்தது.

நான்கு மாணவர்கள் சுற்றிநிற்க ஆறு மாணவிகள் பயத்தபடி நின்றிருந்தார்கள்.

சிவராசன் அவர்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டு நடந்தான்.

''சிவா...வா...இந்தப் பெட்டையளைப் பார்...'' என்று சிவராசனை ஒரு மாணவன் அழைத்தான். சிவராசன் சற்றுத் தயங்கி அவ்விடத்தில் நின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு எட்டுக்கு லெக்சர் இருக்குது... நீங்க ருக் பண்ணுங்கோ..." என்றபடி சிவராசன் அம் மாணவிகளை ஒரு நோட்டம் விட்டான். எல்லா மாணவிகளும் சாரீ அணிந்திருந்தார்கள். பல்கலைக்கழக நாகரிகத்துக்கு இவர் கள் உடை அணிய இன்னமும் காலம் இருக்கிறது. வேக மாகச் சுழன்ற சிவராசனின் கண்கள் ஒரு முகத்தில் வந்த தும் நிலைத்து நின்றன. அந்த முகத்தை அவன் எங்கோ கண்டிருக்கின்றான். மெல்லிய உயர்ந்த உருவம்; சிவந்த முகம்; சற்று ஏறுண்ட நெற்றி.

எங்கே?...நினைவில் உடன் வர மறுத்தது. அவளும் இவ னைப் பயத்தோடு பார்த்தாள். அப் பார்வையில் இவனை அடையாளம் கண்டுகொண்டமைக்கான மலர்ச்சி தெரிந் தது. உதடுகள் பயத்தோடு பிரிய முயன்றன. யார் இவள்?

"உங்கள் பெயர் என்ன மிஸ்?" என்று அவளை மென் மையாகக் கேட்டான். அவன் கேட்ட விதம் அம் மாணவி களைச் சற்றுத் தெம்படைய வைத்திருக்கவேண்டும். அவர் கள் எல்லாரும் அவனைப் பார்த்தார்கள்.

"அவையள் கதைக்கட்டும்.........நீங்கள் எங்களைப் பாருங்கோ..." என்று மற்றைய மாணவர்கள் உறுமினார் கள்.

சிவராசன் மனதிற்குள் கவலைப்பட்டான். ஏன்தான் இப்படி ருகிங் செய்கிறார்களோ?

அவள் அவனைப் பரிதாபத்தோடு பார்த்தாள். அவன் அளவிற்கும் அதிகமாகப் பயந்தவள் போலக் காணப்பட் டாள்.

"கங்கா..." என்றாள் அவள்.

"உங்களை எனக்குத் தெரியும்...முந்தி நாங்கள் உங் கடை வீட்டிற்குப் பக்கத்திலதான் குடியிருந்தனாங்கள்..."

சிவராசனுக்கு அவளை நினைவு வந்துவிட்டது.

"நீங்கள்...கந்தசாமி மாஸ்ரரின் மகள், என்ன?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓம்...இப்ப கரவெட்டியில இருக்கிறம்...'' என்றாள் அனிதா.

ஃ ஃ ஃ

அன்றிரவு படுக்கையில் படுத்தபோது அவனுக்குச் சிறு வயது நினைவுகள் சில மனத் திரையில் ஓடின. மிக இளமையான நினைவுகள் என ஒன்றிரண்டு சம்பவங்கள் நிழலாடின.

மகாலிங்கம் என்ற நண்பனுடன் சேர்ந்து வேலிக் கதியால்களைச் சிறிய வில்லுக் கத்தி ஒன்றினால் சீவித் திரிந்தமை...அப்போது வயது ஆறிருக்கும்.

அம்மா கால் ருத்தல் சீனி வாங்கி வரும்படி காசு கொடுத்துக் கடைக்கு அனுப்புவாள். அவன் வருகிற வழியில் சரையை விரித்து ஒரு வாய் சீனியை வாயில் போட்டுக் கொள்வதும் நினைவு வருகின்றது. அப்போது அவனுக்கு வயது எட்டிருக்கலாம்.

வயல் வெளிக்குப் பாலன் என்பவனுடன் பட்டம் விடப்போய், வயலுக்கு அருகில் இருந்த தென்னந்தோட்டத்தில் இளநீர் களவாகப் பிடுங்கி, அடிவாங்கியதும் நினைவு வருகின்றது.

கோயில் சப்பறத் திருவிழாவன்று, பின் வீதியில் சோமு என்பவன் இவனை பீடி ஒன்றைப் புகைத்துக்கொள்ள வற்புறுத்தியதும், தான் ஓடிவந்ததும் நினைவு வருகின்றது.

இளம் நினைவுகள் இனிமையானவை. நினைவுகளே இனிமையானவைதான்.

கங்கா...ஓ...அவளை அவன் அறிவான்.

ஐந்து ஆண்டுகள் இருக்கலாம். ஒருநாள் அதிகாலை அவன் படலையைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது, முன் வீட்டில் என்றுமில்லாத கலகலப்புக் குடிகொண்டிருந்ததைக் கண்டான். லொறி ஒன்றில் கொண்டு வரப்பட்ட வீட்டுத் தளபாடச் சாமான்கள் பல மாதங்களாகப் பூட்டிக் கிடந்த அந்த வீட்டில் இறக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ புதிதாகக் குடிவந்திருக்கின்றார்கள். அவன் அந்த வீட்டையே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர்; அவர் மனைவி போன்ற ஒருத்தி; நான்கு சிறுவர்கள் அந்த வீட்டில் குடியேறியிருந்தார்கள்.

அடுத்த நாள் அவன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றபோது, தன் முன் வீட்டில் குடியேறியிருப்பவர் தனது பாடசாலைக்கு மாற்றலாகி வந்திருக்கும் ஆசிரியர் என்பதைக் கண்டான். அவருடைய பிள்ளைகளும் அப் பாடசாலைக்கே படிக்க வந்தார்கள். கங்காவும் வந்தாள்.

இரண்டு மூன்று மாதங்களில் அயல் வீடுகள் நட்பாகி விட்டன. சிவராசனின் அம்மா மாஸ்ரர் வீட்டிற்கும், மாஸ்ரரின் மனைவி அவன் வீட்டிற்கும் வந்து பேசிப் போவதும், சிறுவர்கள் ஒன்று சேர்ந்து விளையாடுவதும் வழக்கமாகி விட்டன.

அவன் கங்காவுடன் பேசியிருக்கிறான். ஓடிப்பிடித்து விளையாடி இருக்கின்றான். ஒல்லியாய், தொள தொள சட்டையுடன் திரிந்த கங்காவா அவள்? எப்படி உருமாறி விட்டாள்?

கங்கா மிகவும் அமைதியானவள் என்பதை அவன் உணர்ந்திருக்கின்றான். எவருடனும் சண்டைக்குப் போகாமல் எல்லாரையும் அணைத்துப் பழகுபவள் என்பதை அவன் பல தடவைகள் கண்டிருக்கின்றான்.

இரண்டு ஆண்டுகள் கங்காவின் குடும்பத்தினர் அந்த ஊரில் இருந்தனர். கந்தசாமி மாஸ்ரருக்கு கரவெட்டிக்கு வேலை மாற்றலாகியதும் சென்றுவிட்டனர். பண்பும் நட்பும் நிறைந்த ஒரு குடும்பத்தை இழந்தது போன்ற நவிப்பு அவன் குடும்பத்தில் பல நாட்கள் நீடித்தது.

''இப்படி ஒரு சனம் இனி வருமே?'' என்றாள் அம்மா.

''என்ன பண்பான சனம்...'' என்றார் ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போட்டு வாறம்...'' என்று கங்கா அவர்களிடம் விடைபெற்றபோது, நல்லதொரு நட்பை இழப்பது போன்ற உணர்வில் அவன் தவித்தான்.

அந்த கங்கா இன்று பல்கலைக்கழகத்திற்கு வந்திருக்கின்றாள்.

கங்காவுடன் அவன் நன்கு பேசியிருக்கலாம். தெரிந்த ஒரு பெண்ணுடன் ஒருசில வார்த்தைகளோடு நிறுத்தியிருக்கக் கூடாதுதான். உண்மையில் அவள் எப்படி வளர்ந்து விட்டாள். அந்த முகமும் விழிகளும்தான் இன்னமும் மாறாதிருக்கின்றன.

அவனை சினிய மாணவர்கள் றாகிங் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணமிட்டவாறே சிவராசன் தூங்கிப்போனான்.

ஃ ஃ ஃ

விரிவுரை முடிந்ததும் சிவராசன் நூல்நிலையத்திற்கு வந்தான். அவன் நூல் நிலையத்திற்குள் நுழைவதற்கும், வசந்தியும் சபாநாயகமும் ஒன்றாக வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. வசந்தி சிரித்தபடி வந்தாள். அவர்களைக் கண்டதும் சிவராசனின் இதயம் ஒருகணம் துவண்டது. அவர்கள் சென்றுவிட்டனர். என்றாலும் அவர்களது வரவு ஏற்படுத்திய சலனம் நீங்க வெகுநேரம் சென்றது.

மகசின் செக்சனுக்குள் நுழைந்தான். மாணவர்கள் பலர் அமர்ந்திருந்து பத்திரிகைகள் படித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் தங்கள் சிநேகிதர்களுடன் சத்தம் எழாது பேசிக்கொண்டிருந்தனர். சிவராசன் சுவர் ஓரமாக இணைக்கப்பட்டிருந்த மகசின் தாங்கிகளில் இருந்து பல்வேறு துறைகள் சார்ந்த பத்திரிகைகளைத் தட்டிப் பார்த்துக் கொண்டு வந்தான். தமிழ்ப் பத்திரிகைப் பகுதிக்கு வந்ததும் அவனது கால்கள் தாமதித்து நின்றன. இந்தியப் பத்திரிகைகளும் இலங்கைப் பத்திரிகைகளும் அங்கு காணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. கலைச்செல்வியை எடுத்துக்கொண்டு, கதிரை ஒன்றில் இருப்பதற்காகத் திரும்பினன்.

அவளை அவன் அங்கு எதிர்பார்க்கவில்லை. கங்கா பத்திரிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தாள். அவன் பின்னல்நிற்பதை அவள் கவனித்ததாகத் தெரியவில்லை. அவளுக்குப் பக்கத்தில் காலியாகக் கிடந்த கதிரையில் சிவராசன் மெதுவாக அமர்ந்துகொண்டான்.

''மிஸ் கங்கா...'' என்று அழைத்தான் சிவராசன்.

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அறிமுகமான புன்னகை ஒன்று உதடுகளில் படர்ந்தது. தன் கதிரையில் ஒரு மூலையில் ஒடுங்கி அமர்ந்துகொண்டாள். அறிமுகமில்லாத ஆடவர்கள் பக்கத்தில் அமர்ந்து படிப்பது பல்கலைக்கழகத்தில் புதியதன்று. அறிமுகமான ஆடவன் ஒருவன் பக்கத்தில் அமர்ந்ததும் அவள் சற்றுக் கூச்சப்படுவது சிவராசனுக்குத் தெரிந்தது. அவன் சிரித்துக்கொண்டான்.

அவன் சிரித்துக் கொள்வதற்குரிய காரணத்தை கங்கா புரிந்துகொண்டாள்.

''கந்தசாமி மாஸ்ரர் எப்படி இருக்கின்றார்? வீட்டில் எல்லாரும் சுகமா?'' என்று வினவினன் சிவராசன்.

''ஓம்... அப்பா இப்ப கெட் மாஸ்ரராக இருக்கிறார்... வவுனியாவில்...'' கங்கா மிக மென்மையாகப் பேசினள். பல்கலைக்கழக லைப்ரரியிலுள்ள மேசைகள் நடுவில், எதிரெதிரே இருப்பவர்கள் தெரியாதமாதிரி தடுக்கப்பட்டிருக்கும். அதனல் இவர்கள் இருவரும் பேசிக்கொள்வதை எவரும் அவதானிக்கவில்லை. அவதானித்தாலும் அதிசயமாகப் பார்க்கமாட்டார்கள்.

''செல்லம்மக்கா... கமலம்அக்கா எல்லாரும் எப்படி?'' என்று கேட்டாள் கங்கா.

நீண்ட அவள் விழிகள் ஒடுக்கமானவை. பேசும்போது அவை சுருங்கிச் சிரித்தன.

மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா...அக்கா எல்லாரும் நல்லாயிருக்கினம்...''

''நீங்கள் எக்கோனமிக்ஸ் ஸ்பெசலா செய்யிறியள்?''

''ஓம்...நீங்கள் என்ன பாடங்கள் மிஸ் கங்கா?''

''தமிழ்...கிஸ்ரறி...ஜியோகிறபி...''

திறந்து கிடந்த யன்னல்கள் ஊடாகக் குளிர் காற்று வீசியது. அவள் சாரித் தலைப்பை எடுத்து வலது பக்கத் தோளை மூடிப்போர்த்தி பிளவ்சில் செருகிக்கொண்டாள். நீல வர்ணச் சேலை கங்காவிற்குக் கவர்ச்சியைக் கொடுத்தது. ஆழ்ந்த அமைதி அவள் அழகில் தேங்கிக் கிடந்தது.

''மிஸ் கங்கா, நீங்கள் சரியா வளர்ந்திட்டியள்... முந்தி...''

அவள் வெட்கத்தோடு சிரித்தாள். அவன் தொடர்ந்தான்: ''பெண்களை அடையாளம் காணுறது மிகச் சிரமம். கிசுகிசுவென்று வளர்ந்திடுவினம்... நீங்கள் ஸ்கேட்டுடன் எங்கடை வீட்டில ஓடிவிளையாடினது எனக்கு இன்னமும் நினைவிருக்குது...இப்ப...''

அதற்கும் கங்கா புன்னகைத்தாள். தன் கரத்தில் இருந்த தங்க வளையலைப் பற்றிச் சுழற்றியவாறு சிரித்தாள்.

''எந்த ஹோஸ்டலில இருக்கிறியள்?''

''சங்கமித்தா ஹோல்...''

''ஆர் ரூம்மேற்?''

''கனகாம்பிகை என்றொரு பிள்ளை...''

''மிஸ் கங்கா...யூனிவேசிற்றி பிடிச்சுக்கொண்டுதா?'' என்று கேட்டான் சிவராசா.

''பிடிக்குதோ பிடிக்கவில்லையோ...வந்திட்டம், படிச்சிட்டுத்தானே போகவேணும்...'' என்றாள் கங்கா.

''அப்ப பிடிக்கவில்லை...''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஊரில அப்பா, அம்மா, சகோதரங்களுடன் இருப்பது போல வருமா?''

''ஓம்...பொம்பிளையள் படிச்சும் என்ன செய்யிறது?''

''ஏன் பொம்பிளையள் படிக்கக் கூடாதா?'' அவளின் கேள்வி சற்று வேகமாக எழுந்தது.

''அப்படியில்லை... சும்மா சொன்னன்...'' என்று சமாளித்தான் சிவராசன்.

''உங்களுக்கு லெக்சர் இல்லையா?''

''இனி இல்லை...உங்களுக்குப் பத்து மணிக்குத் தமிழ் இருக்கிது என்ன?''

விரிவுரை முடிந்து அடுத்த விரிவுரை ஆரம்பமாவதற்குரிய மணி ஒலித்தது. அப்போது அவர்கள் மேசை அருகில் ஒரு மாணவன் வந்து நிற்பது தெரிந்தது. சிவராசன் நிமிர்ந்து பார்த்தான்.

—சிகாமணி.

''எக்ஸ்கியூஸ் மீ...உங்களை டிஸ்ரேப் பண்ணுறதுக்கு மன்னிக்கவும்'' என்று கங்காவை நோக்கிச் சொன்னவன், சிவராசனிடம், ''எத்தனை மணிக்குச் சிவா ஹோலுக்குப் போறாய்?'' என்று கேட்டான்.

''பதினொன்றிற்கு...'' என்றான் சிவராசன்.

தெய்வசிகாமணி இருவரையும் பார்த்துக் குறும்பாகச் சிரித்துவிட்டு அகன்றான்.

''வித்தியாசமாக நினைக்காதீர்கள் மிஸ் கங்கா...... இவன் இப்படித்தான்...ஜோக்கர்...''

கங்கா எதுவும் கூறாமல் தலைகுனிந்துகொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14.

பல்கலைக்கழக உயர் மரங்களெல்லாம் பூத்துச் சொரிந்திருந்தன. இளம் காலை வேளைகளில் அவற்றினைப் பார்க்கும்போது ஒருவகை புத்துணர்ச்சி. பில்தரிங் செக்சனில் நின்றவாறு பூத்துச் சிரிக்கும் அம்மரங்களைப் பார்த்தவாறு சிவராசன் நின்றிருந்தான். இலைகளே இல்லையென்குமாப் போல மஞ்சள் மலர்கள் நிறைந்திருந்தன. பனி நீங்காக் காலையில் அம்மலர்கள் சிறுசிறு இதழ்களாக உதிர்ந்து கொண்டிருந்தன.

அவனுக்குப் பத்து மணிக்குத்தான் விரிவுரை இருக்கிறது.

தூரத்தில் சில மாணவிகள் வருவது தெரிகின்றது. தமிழ் மாணவிகள் தாம்.

அவர்கள் நெருங்கியபோது கங்காவும் அவர்களில் ஒருத்தி என்பது தெரிந்தது. கங்கா அவனைப் பார்த்து அறிமுகப் புன்னகை புரிந்தாள். சாதாரண வொயில் சாறி, மஞ்சள் வர்ணத்தில் செந்நிறப் பொட்டுக்கள். அவள் கரம் மார்போடு புத்தகங்களைத் தழுவியிருந்தது.

''குட் மோனிங்...''

''குட் மோனிங் மிஸ் கங்கா...'' என்றான் அவன். அவள் குரலில் தான் எவ்வளவு மென்மை. மஞ்சள் மலரிதழ்கள் உதிர்வது போல வார்த்தைகள் உதிர்ந்தன. அவள் மகசின் செக்சனிற்குள் நுழைந்தாள். ஏனையோர் மேல் மாடிக்கு ஏறிச் செல்வது தெரிந்தது.

அவன் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான். மகசின் செக்சனுக்குள் நுழையும்போது கங்கா அவனைத் திரும்பிப்

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துவிட்டுச் சென்றுள். புஸ்பாவும் சிகாமணியும் வந்து கொண்டிருந்தார்கள்.

சிவராசன் மகசின் செக்சனுள் புகுந்தான். அவன் கண்கள் ஆவலோடு கங்கா அமர்ந்திருக்கும் கதிரையைத் தேடின. கங்கா மாதப் பத்திரிகை ஒன்றினைப் பிரித்துப் படித்தவாறு அமர்ந்திருந்தாள், அவளது சிறிய பின்னல் கதிரைக்குப் பின்புறம் கிடந்தது.

மனமே ஏன் இப்படிச் சலனப்பட்டு என்னை மோசம் செய்கிறுய்? மலருக்கு மலர் தாவும் வண்டுபோல ஓரிடத்தில் நிலைக்காது தாவித்திரிகின்றுயே?

தலை நிமிர்ந்த கங்கா அவன் தன்னைப் பார்த்தபடி நிற்பதைக் கண்டுகொண்டாள். உடலில் மெல்லிய நெளிவு. உதடுகள் பிரிந்து சேர்ந்தன.

''உந்தக் கதிரையில் அமரலாமா மிஸ் கங்கா...'' என்று அவன் அவளுக்குப் பக்கத்தில் காலியாக இருந்த கதிரையைச் சுட்டிக்காட்டிக் கேட்டான்.

''தாராளமாக...'' என்றுள் அவள் சிரித்தபடி. சிவராசன் கையில் ஒரு பத்திரிகையை எடுத்தபடி அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டான். இருவரும் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டினர். பின்னர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டனர்.

''படிப்புகள் எப்படி?...'' என்று அவன் கேட்டான் மெதுவாக.

''நாங்கள் பெரிதாக எதிர்பார்த்தது போல இல்லை... எங்கள் கல்லூரிக்கும் யூனிவேசிற்றிக்கும் அவ்வளவு வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை...'' என்றுள் கங்கா. அவளை அவன் வியப்புடன் பார்த்தான்.

''ஏன் மிஸ் கங்கா அப்புடிச் சொல்கிறீயள்?''

''பாடசாலைகளில் நடப்பது போல இங்கும் லெக்சரர்கள் நோட்ஸ் தருகினம்... ஆய்வு ரீதியான விரிவுரையாக இல்லை... ஏதாவது ஒரு ஆங்கிலப் புத்தகத்தினை அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்த்து நோட்ஸ் தருகினம்...அவ்வளவுதான்... அதுக்காகவா இவ்வளவு செலவழித்து இங்கு வந்தும் என்றிருக்குது...''

கங்கா சர்வ சாதாரணமாகச் சொன்ஞள். புத்திசாலியான ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கிற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.சர்வ ஜாக்கிரதையாகப் பேசவேண்டும் என அவன் புரிந்துகொண்டான்.

''நோட்ஸ் எழுதுவதென்பது எனக்குப் பிடிப்பதில்லை''

''கவனம்...லெக்சரர்மார் தருகிற நோட்சை ஞாபகமாகத் திருப்பி எழுதாமல் ரெபறென்ஸ் என்று உங்கள் ஆராய்ச்சியை எழுதிஞல் கிளாஸ் கிடைக்காமல் போகலாம்...'' என்ற கங்கா புன்னகைத்தாள்.

''வந்து ஓராண்டு முடியவில்லை...அதுக்குள் யூனிவேசிற்றியை நல்லாப் புரிந்திருக்கிறியள்...''

''பெண்களே அப்படித்தான்...''

''எல்லாத்தையும் உடன் புரிந்து கொள்வார்களா?''

கங்கா அழகாகத் தலையை ஆட்டிஞள்.

''எல்லாரையும் புரிந்து கொள்வார்களா?'' என்று சிவராசன் கேட்டபடி அவளை ஆழமாகப் பார்த்தான். அவள் அவனை ஒருகணம் வியப்புடன் பார்த்துவிட்டு மௌனமாகத் தலைகுனிந்து கொண்டாள்.

அவள் வலது கரம் இடது கரத்திலிருந்த தங்க வளையல்களைப் புரட்டி விளையாடியது.அவள் கரத்தின் நிறம் தங்கமா?அல்லது அவள் கர வளையல்கள் தங்கமா? இரண்டும் பொன் நிறம் தாம்.

அவள் முன்ஞல் அவளது கைப்பை கிடந்தது. வெண்நிற கான்ட் பாக் அது.

சிவராசன் தன் வலது கரத்தால் அந்த கான்ட் பாக்கினை எடுத்தான்.உடன் வேகமாக கங்காவின் கரம் அந்த கான்ட் பாக்கினைப் பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1577 cc



"சொறி..." என்றான் அவன்.

"வேறு ஆக்களின் பொருட்களைப் பரிசீலிப்பது பண்பல்ல..."

"ஏதாவது அதிசயமான பொருட்களை வைத்திருக்கிறீர்களா?"

"அப்படியொன்றும் அதிசயமான பொருட்களில்லை... சரி பாருங்களேன்" என்றவாறு தன் காண்ட்பாக்கினை அவன்முன் தள்ளினாள்.

"வேண்டாம் மிஸ் கங்கா...வேறு ஒருவருடைய பொருட்களைப் பார்ப்பது சரியல்ல..."

அவள் உதடுகளில் புன்னகையின் கீறல்கள்.

"பரவாயில்லை பாருங்கள்...ஏன் உங்களுக்குச் சந்தேகம்..."

அவன் கைப்பையினைத் திறந்தான். திறக்கும்போது சொன்னான்: "நிச்சயமாக லிப்ஸ்ரிக்...கியூடெக்ஸ் என்பன இருக்காது..."

"அது எப்படித் தெரியும்?..."

"எனக்குத் தெரியும்..."

கைப்பையினுள் ஒரு பேனை,பென்சில்,லேஞ்சி என்பனவும் சில்லறைக் காசுகளும் இருந்தன.ஒரு மூலையில் ஏதோ ஒன்று பளபளத்தது.கையை விட்டு எடுத்தான்.

—கன்டோஸ் ஒன்று.

"வேண்டுமானால் சாப்பிடுங்கள்..." என்றாள் கங்கா. அவன் அதனை வெகுநேரம் கரத்தில் வைத்திருந்தான். பின்னர் உறையை உரித்து கன்டோசை வாயினுள் இட்டான்.கிழித்த உறையைக் கீழே வீச முயன்றபோது, "கீழே போடாதீர்கள்...ஏசுவார்கள்...காண்ட் பாக்கினுள் போடுங்கள்..." என்றாள் கங்கா.

"இது குப்பைக் கூடையா?..." என்று சிரித்தான் சிவராசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மனமே குப்பைக் கூடைதான்...''

அவன் அவளை வியப்புடன் பார்த்தான்.

''தத்துவங்கள் பேசுகிறீர்கள் மிஸ் கங்கா...''

விரிவுரை முடிந்ததுக்குரிய மணி ஒலித்தது. அடுத்த விரிவுரை ஆரம்பமாகப் போகின்றது.

''எனக்கு இப்ப தமிழ் லெக்சர்...எதை விட்டாலும் வித்தியின்ர லெக்சரை விட்டுவிடக் கூடாது...விரிவுரையாக இருக்கும்...''

''மிஸ் கங்கா...''

என்ன என்குமாப் போல அவள் தயங்கி நின்றாள்.

''இனி எப்ப பிறி?...''

அவள் ஒருகணம் அவனை வியப்புடன் பார்த்தாள்.

''நாளைக்குப் பத்து மணிக்கு லெக்சரில்லை...''

அவள் போய்விட்டாள். வெகு நேரம் அவளுடன் பேசியவை அவனைச் சுற்றிச் சஞ்சரித்துக் கொண்டிருந்தன. கங்கா...கங்கா...

* * * * * * * * *

பத்து மணி. விரிவுரை முடிந்து மாணவர்கள் கலகலப்பாக மண்டபத்தை விட்டு வெளியேறினர். சிவராசன் மிகுந்த ஆவலோடு மகசின் செக்சனை நோக்கி விரைந்து வந்தான். அவனால் இன்று எந்த விரிவுரையையும் நன்கு அவதானிக்க முடியவில்லை. கங்காவின் நினைவே மனதில் எழுந்துகொண்டிருந்தது. அவளின் உதடுகள் புன்னகைக்க விரிகின்ற கவர்ச்சி...கை வளையல்களை உருட்டி விளையாடும் தங்கக் கரம்...

மகசின் செக்சனில் கங்கா இருந்தாள். இன்று அவள் சாதாரண வொயில் சேலை அணிந்திருக்கவில்லை. நீல வர்ண நைலெக்ஸ் சாறி. அதே நிறத்தில் பிளவுஸ் நேற்றுப் பார்த்ததிலும் பார்க்க இன்று கூடிய கவனம் எடுத்து அலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம் செய்துகொண்டவளாகக் காணப்பட்டாள். கருந் திலகத்திற்கு மேல் ஒரு விரல் தடிப்பில் மெல்லிதாகத் திருநீறு தரித்திருந்தாள்.

கங்காவிற்கு அருகில் இருந்த கதிரைக்கு முன் ஒரு கொப்பி விரித்து வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் ஒரு பேனை. எவரோ அதில் சற்று முன் இருந்துவிட்டு எழுந்து வெளியே சென்றிருக்க வேண்டும். அந்த இடத்தில் அவர் திரும்பவும் அமர வரலாம்.

சிவராசாவுக்கு ஏமாற்றமாக இருந்தது.

''மிஸ் கங்கா...''

அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். உதடுகள் புன்னகைத்தன.

''இதில் எவராவது இருக்கிறார்களா?''

''ஓம்...மிஸ் தம்பிமுத்து இருந்தவ...வர நேரமாகும்... நீங்கள் இருங்கோன்...''

அவன் மகிழ்ச்சியோடு அமர்ந்தான். இருவரிடையேயும் நீண்ட மௌனம் நிலவியது. மௌனத்தை அவனே அழித்தான்.

''எப்ப வந்தியள்...?''

''இப்பத்தான்...'' அவள் அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டுக் கேட்டாள்: ''சரோசா எப்படியிருக்கிறாள்?...''

''யார்?...''

''உங்கள் மச்சாள் சரோசா...''

இனிய நாதத்தில் அபஸ்வரம் தொனித்தது போலப் பட்டது. அவனின் முகம் சற்று இருண்டு மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

''சரோவை உங்களுக்கு எப்படித் தெரியும்?...''

''இதென்ன கேள்வி...அவளும் நானும் ஒன்ருக ஒன்பதாம் வகுப்பு வரை படித்திருக்கிறம்... நாங்க ரெண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரும் அப்ப வவு சிநேகிதமாக இருந்தனுங்கள்..." கங்கா சாதாரணமாகத்தான் பேசினுள். அவனுல் தான் அவற்றைச் சீரணிக்க முடியவில்லை.

''யூனிவேசிற்றி என்ரன்ஸ் எடுப்பதற்குப்படிக்கிருள்''

அவன் குரல் அசுவாரஸ்யமாக ஒலித்தது. கங்கா கனுக் கென்று சிரித்தாள்.

''மிஸ் கங்கா...இதில் சிரிப்பதற்கு...''

''ஒன்றுமில்லை...உங்களுக்குத் தகுதியாகப் படிக்கிருள் போலிருக்கிறது...''

அவன் நெற்றி வியர்த்தது.

''அப்படியிருக்காது... அவளுக்கும் எனக்கும் நீங்கள் நினைப்பது போல...சீச்சி...''

அவன் தன்னைச் சுற்றி ஒரு மௌனச் சுவரை எழுப் பிக் கொண்டவன் போல இருந்தான். அவன் மனநிலையை கங்கா புரிந்து கொண்டாள்.

''சும்மா ஒரு கதைக்குக் கேட்டன்... நீங்கள்...'' என்று அவள் புன்னகைத்தாள்.

''இன்று என் கான்ட்பாக்கை ஆராயவில்லையா?...''

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவன் கரம் அவளின் கைப்பையை எடுத்துத் திறந்தது. பேனை...பென் சில்...லேஞ்சி...புத்தம் புதிய கன்டோஸ் ஒன்று அவனைப் பார்த்துச் சிரித்தது. அவன் அதனை எடுக்காமல் கங்கா வைப் பார்த்தான்.

''உங்களுக்குத் தான்...'' என்றபடி அவள் தலை குனிந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15.

விடுதி அறையின் பல்கனியிலிருந்து பார்க்கும் போது தொலைவில் பனி விலகிய காலைப் பொழுதில் சிவனொளிபாத மலையின் புற உச்சி வடிவம் நிழல் வடிவாகத் தெரிந்தது. சிவராசா பல்கனிச் சுவரில் அமர்ந்திருந்தான். கோபால் இன்னமும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. விடுதியைச் சுற்றி வளர்ந்திருந்த புற்களை வெட்டுவதில் விடுதித் தோட்டக்காரன் ஈடுபட்டிருந்தான்.

கீழை வானில் மலைக் குவைகளுக்கு அப்பால் எழுந்து கொண்டிருந்த கதிரவனின் சாய் கதிர்கள் பல்கனியில் படிந்தன.

'கங்கா என்னைக் காதலிக்கின்ருளா?'— என்று சிவராசா தன்னைக் கேட்டுக்கொண்டான். அவனுடைய உள்ளம் அவளை விரும்புகிறது என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. ஆனல், அவள் அவனை விரும்புகிருளா? கங்காவின் செய்கைகள் எல்லாம் அவனை அவள் நேசிக்கின்ருள் என்பதற்கு ஆதாரங்களாக இருக்கின்றன. ஆனல், சரிவரப் பூரணமாகத் தெரிந்துகொள்ள அவனுக்கு இன்னமும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

காதலின் சக்தியை அவன் உணர்ந்தான். எல்லாவற்றையும் மறக்கடித்து ஒன்றையே நினைக்கவைக்கும் அதன் சக்தி. இரவும் பகலும் நினைவிலும் கனவிலும் நீங்காமல் கலந்திருக்கும் உணர்வுகள்.

'கங்கா...கங்கா... நீ எவ்வளவு இனிமையானவள்! எவ்வளவு சாந்தமானவள்! எவ்வளவு மென்மையானவள்! நினைவுகள் இனிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகசின் செக்சனில் கங்கா அமர்ந்திருந்தாள். அருகில் அவன்.

''மிஸ் கங்கா...ஒன்று கேட்பேன் கோபிக்கமாட்டீர்களே?...''

அவன் விழிகளை அவள் விழிகள் சந்தித்தன.

''என்னென்று முதலில் சொல்லுங்கள்... அப்புறம் கோபிக்கிறதா இல்லையா என்பதைச் சொல்கின்றேன்...''

''அப்படியென்றால் சொல்லவில்லை...''

''சரி கோபிக்கவில்லை சொல்லுங்கள்......கோபிக்கக் கூடியதாகச் சொல்லமாட்டீர்கள் என்று நினைக்கிறன்...'' அவள் கண்களில் ஆர்வம் பளிச்சிடுவதாகப் பட்டது.

அவன் மென்று விழுங்கினான்.

''சொல்லுங்கள்...'' —கங்கா.

''கன்ரீனுக்குப் போவமா?தேத்தண்ணீர்...''

அவள் கலுக்கென்று சிரித்தாள். மலரிதழ்கள் உதிர்ந்தன. அவன் வியப்புடன் பார்த்தான்.

''இதுக்காகத்தானா இவ்வளவு பீடிகை?'' அவள் குரலில் தொனித்தது ஏக்கமோ?அவள் எதிர்பார்த்தது வேறு எதையாவதோ?

''அவ்வளவுதான்...''

''அதுக்கேன் இப்படி உங்களுக்கு வியர்க்கிறது?ஏதோ தவறு செய்தவர்கள் போலப் பதறுகிறீர்களே?''

அவன் நெற்றியைத் துடைத்துக் கொண்டான்.

''அப்படியில்லை...மிஸ் கங்கா...நீங்கள் விரும்பமாட்டீர்களோ என்று நினைத்தன்...''

''எதை?...''

''கன்ரீனுக்கு என்னுடன் வருவதை...''

''ஓ...கன்ரீனுக்குக் கூட்டிச் சென்று ஏதாவது நான் கோபப்படத்தக்கதாகச் சொல்லப் போகின்றீர்களா?...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கா மீண்டும் சிரித்தாள். அச் சிரிப்பினூடே ஏதோ ஒரு மறைபொருள் தொக்கி நின்றதோ?

அவன் உள்ளம் துடித்தது. அவளிடமா அவனுக்குக் கூற விடயங்கள் இல்லை?

"இல்லை..."

கங்கா எழுந்தாள்.

"அதோ என்னும் மேற்கலா இருக்கிறு... அவளையும் கூட்டிச் செல்வோமா?..."

அதனை மறுக்கிற துணிவு அவனுக்கில்லை.

"சரி..." என்றுன்.

கன்ரீனில் மூவரும் தேநீர் அருந்தினர். கங்கா பலதையும் பேசிச் சிரித்தாள்.

* * * * * * * * *

சிவராசாவின் கண்கள் சங்கமித்தாஹோஸில் பதிந்தன. அங்குதான் கங்கா இருப்பாள். இப்போது நித்திரைவிட்டு எழுந்திருப்பாளோ? படித்துக்கொண்டிருப்பாளோ?

"என்னடா க்டும் யோசனை..." என்று கேட்டபடி கோபாலரத்தினம் எழுந்து வந்தான்.

"ஒன்றுமில்லை..."

"எனக்கெல்லாம் தெரியுமடா...கங்காவை எண்ணிக் கொண்டிருப்பாய்..."

"அப்படியில்லை..."

கோபால் வெறிக்கப் பார்த்தபடி கேட்டான்:

"ஒரு விசயம் கேள்விப்பட்டியா?"

"என்ன?..."

"வசந்தா ஏமாந்து போனுள்... பூட்ஸ் கிடைச்சிட்டுது..."

"ஏன்?...மெடிக்கோ சபாநாயகம்...?"

PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவனுக்கு நாளைக்கு கலியாண எழுத்தாம்.ஊருக்குப் போட்டான்...தொடர்ந்து அவன் படிக்கிறதுக்குக் காசு தேவையாம்...அதுக்கு ஊரில கலியாண எழுத்து...'

சிவராசாவிற்குத் திக்கென்றது.யார் பெண்? ஒருவேளை சரோசாவாக இருப்பாளோ?

அவனை அறியாமல் ஒரு ஏக்கம் அவனுள் படர்ந்தது. ஏன் இப்படி ஒரு உணர்வு?

''என்னடா எதுவும் பேசாமல் இருக்கிறாய்?'' என்று கோபால் வினவினான்.

''உனக்கு வலு சந்தோசமாக இருக்குது... வசந்தி ஏமாந்ததில் உனக்குச் சந்தோசம்.பாவம் வசந்தி...''

''அவள் ஆளைத் தெரியாமல் காலை விட்டிட்டாள்...... மெடிக்கோ என்ற மயக்கத்தில் என்னை அலட்சியம் செய்திட்டாள். அனுபவிக்கத்தானே வேண்டும்...'' என்றான் கோபால்.

''சிவா,இப்போது கூட என்னால் வசந்தியை மறக்க முடியவில்லை...வசந்தியை இப்போதுகூட ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறன்...''

பல்கனியிலிருந்து கீழே குதித்தான் சிவராசா.

''உனக்கென்ன விசராடா? மெடிக்கோ அனுபவிக்காமல் விட்டவனா?...''

''எனக்கு விசர்தான்...ஆனால்,என்னால் அவளை மறக்க முடியவில்லையே.இந்தக் காலத்தில் எந்தப் பெண்ணாவது மனதளவிலாவது தூய்மை கெடாமல் இருக்கிறார்களா?''

''விசரன் போலக் கதைக்காதை கோபால்...''

கோபால் பிறசையும் பேஸ்ரையும் எடுத்துக்கொண்டு பாத்ரூமுக்குச் சென்றான். கோபாலை எண்ண சிவராசாவிற்கு வியப்பாக இருந்தது.பல்கலைக்கழகத்தில்தான் எத்தனை வகையான காதலர்கள்.

சிகாமணி...? கோபால்...? சபாநாயகம்...? ஏன் சிவராசா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பா...?வசந்தி...?கங்கா?

பில்லரிங் செக்சனில் கங்காவை சிவராசா சந்தித்தான். தற்செயலான சந்திப்புத்தான். பல்கலைக்கழகப் பதிவாளரைச் சந்தித்துவிட்டு வரும்போது விரிவுரை முடிந்து கங்கா திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

''எங்கே போயிட்டு வாறியள்?...'' என்று கங்கா கேட்டாள்.

''மிஸ் கங்கா...உங்களுடன் ஒரு விசயம் பேசவேண்டும்...'' உண்மையில் பேசுவதற்கு அப்படி ஒரு விடயமில்லை.

''சொல்லுங்கள்...''

''இப்ப முடியாது...விரிவாகப் பேசவேண்டும்...''

''அப்ப பின்னேரம் ஹோலுக்கு வாருங்களேன்...''

''ஹோலுக்கா...?''

''ஏன் வரக்கூடாதா? ஒருக்காலும் போய்ப் பழக்கமில்லையா?''

''வாறன்...'' என்றான் சிவராசா. கங்கா துணிச்சல்காரிதான்.

*** *** ***

அன்று பின்னேரம் சிவராசா கங்காவின் விடுதிக்குச் சென்றான். அன்று வருவோரை வரவேற்பதற்குப் பொறுப்பாக இருந்த சிங்கள மாணவி குரல் கொடுத்தாள்.

''மிஸ் கங்கா...விசிற்றர் போர் யூ...''

முதல் அழைப்பு ஒலித்து ஓயுமுன்னரே கங்கா விடுதியின் விருந்தினர் மண்டபத்திற்கு வருவது தெரிந்தது. கங்கா சிறு துள்ளலுடன் வந்தாள் வேகமாக. இளம் மஞ்சள் சேலையில் அவள் கவர்ச்சியாகக் காணப்பட்டாள்.

''வாருங்கள்...''

சிவராசா புன்னகைத்தான். மண்டபத்தில் இக்கிற்கு ஒருவராக மாணவிகளும் மாணவர்களும் ஜோடி ஜோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக அமர்ந்து பேசிச் சிரித்துக்கொண்டிருந்தனர். சிவ ராசாவும் கங்காவும் ஒரு ஒதுக்காகக் காணப்பட்ட கதிரை களில் அமர்ந்தனர். கங்கா வலது கரத்தால் கதிரையின் கைப்பிடியில் தாளமிட்டாள். கைவளையல்கள் கலகலத் தன. அவளையே சற்று நேரம் பார்த்தான் சிவராசா.

''என்ன கனக்கக் கதைக்க வந்திட்டுப் பேசாமல் இருக்கிறியள்?...'' என்று கேட்டுப் புன்னகைத்தாள் கங்கா. அளவாக மையிடப்பட்ட கண்கள் சிரித்தன.

''மிஸ் கங்கா, உங்கள் அறை எங்கிருக்கிறது?...''

''மாணவிகளின் அறைக்குள் வர அனுமதிக்கமாட் டார்கள்...'' என்றபடி கலகலவெனச் சிரித்தாள் கங்கா.

''சிச்சி அதுக்கல்ல கேட்டன்...ஒரு கதைக்குக் கேட் டன்...எங்கிருக்கிறது...?''

''கடைசி விங்கில் இருக்கிறது. ஏன்...?''

''நான் வருவேன் என்பதற்காகக் காத்திருந்தீர் களா?...''

''இல்லையே!...அந்தச் சிங்கள மாணவி விஜித்ரா வந் திருப்பதாகக் கூப்பிட்டதும் தான் வந்தன்...''

''கடைசி விங்கிலிருந்து அவ்வளவு கெதியாக வர முடிந்ததா?...''

கங்கா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். கன்னங்கள் சிவந்து சிரித்தன. தலை கவிழ்ந்துகொண்டது. பெண்கள் வெட்கப்படுவதும் அழகுதான்.

''ஏன் வரமுடியாதா? நம்பினால் நம்புங்கள்...அறை யிலிருந்துதான் வந்தன்... காத்திருக்கவில்லை...'' என்று சிரித்தாள்.

''நம்புறன்...'' என்று சிவராசா சிரித்தான். கங்கா வின் நெற்றியில் திலகத்திற்கு மேல் திருநீற்றுக் குறி தெரிந்தது.

''நீங்கள் கடவுளில் வலு பக்தி போலிருக்கிறது...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை நான் நம்பாவிட்டாலும் கடவுளை நம்பு றன்..." என்முள் கங்கா.

"தன்னம்பிக்கையில்லையா?..."

"அப்படியில்லை... சுயநலத்திற்காக நாங்கள் எங்கள் கடமைகளை மறந்துபோகாமல் இருக்க கடவுள் நம்பிக்கை அவசியம்..."

சிவராசாவின் இதயத்தில் சுரீரென முள் ஒன்று தைத் தது. சுயநலத்திற்காகக் கடமைகளை மறப்பதா? ஐயா...... அம்மா... அக்கா... தங்கைகள்... ஈடு... நான்?

சிவராசாவின் முகம் ஓடிக் கறுத்தது. தலை குனிந்து அமர்ந்து கொண்டான்.

"நான் ஏதாவது தவருகக் கூறிவிட்டேனு?..."

"இல்லை... என்னை நானே நினைத்துக்கொண்டேன்...... சிலர் தங்களுக்காக வாழமுடியாதவர்கள்..."

அவள் தலையைக் குனிந்துகொண்டாள். கண்களில் கண்ணீர் முத்துக்கள் பனித்தன. அப்படியே தன்னிரு கைகளில் முகத்தைப் பதித்துக்கொண்டாள். அந்த உச்சி வகிடு... அதற்கும் அப்பால் முதுகுப் பீலி...

"மிஸ் கங்கா..."

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு தலை நிமிர்ந் தாள்.

அவள் விழிகள் எங்கோ வெறிக்கப் பார்த்தன.

"எங்கள் சுயநலத்திற்காக எங்கள் முன்னிருக்குங் கட மைகளை மறந்துவிட முடியுமா? உங்களை நான் புரியாம லில்லை... ஆனல், நிறைவேறக் கூடியதுதானு? நீங்கள்... உங் களை நம்பி ஒரு பெரிய குடும்பமே இருக்குது... நீங்கள்தான் அக்குடும்பத்தின் ஒரேயொரு பற்றுக்கோல்... அதனை நான் பறித்துக்கொள்ள முடியுமா?..."

"கங்கா..."

"உங்கள் குடும்பத்தை நன்னிலைப்படுத்தக்கூடியஎ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்கு விலை தந்து வாங்க எங்களிடம் சக்தியில்லை... சிவா, நாங்கள் ஏழைகள்...என் தந்தை தமிழ் ஆசிரியர்...நான் உழைத்துத்தான் எனக்குச் சீதனம் தேடிக்கொள்ளவேண்டும்...வெட்கம் கெட்ட சமூகம்...''

சிவராசாவால் எதுவும் பேச முடியவில்லை. பேசுவதற்கு என்ன இருக்கிறது?

கங்காவின் முகத்தில் மீண்டும் மலர்ச்சி பரவியது.

''அதைப் பற்றி யோசியாதீர்கள்...ஏதோ சொல்ல வேண்டும் என்றீர்களே?'' எல்லாவற்றையும் ஆழக் குழி தோண்டிப் புதைத்துவிட்டவள் போல அவள் பேசினுள். அவள் இதயம் அழுதிருக்குமோ?

''இனிப் பேசுவதற்கு என்ன இருக்கிறது...எல்லாம் நான் பேசி முடிந்துவிட்டதே?''

அவன் குரல் அழுதது.வெளியில் தெரியாமல் இதயம் அழுதது.

அவள் சிரித்தாள். விடைபெறும்போது அவள் கூறினுள்: ''நாங்கள் என்றும் நண்பர்களாக இருப்போம்...''

அவள் கரத்தைை ஆட்டி விடை தந்தாள். மனச் சுமையோடு அவன் விடுதிக்கு வந்தான்.

காலைச் சாப்பாட்டிற்குரிய அழைப்பு மணி ஒலித்தது.

நினைவில் ஒரு நிகழ்ச்சி எழுந்தது.

மகசின் செக்சனில் சிவராசா அமர்ந்திருந்தான். விரிவுரை முடிந்ததும் அவனைச் சந்திக்க கங்கா வருவதாகக் கூறியிருந்தாள்.கைக்கடிகாரத்தைப் பார்த்தான் அவன். இன்னும் பத்து நிமிடம் இருக்கிறது. அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.பையைத் திறந்து பேப்பர் ஒன்றை எடுத்துக் கிறுக்கினுன்.அவன் வலது கரம் 'கங்கா' என்று எழுதியது.அதற்குக் கீழ் ஒரு படம் வரைந்தது.

அவன் அருகில் நிழலாடியது.அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எப்போது ஓவியராக மாறினீர்கள்?'' மலரிதழ்கள் உதிர்ந்தன.கங்காதான்.அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.முகம் மலர்ந்தது.

''லெக்சர் முடிந்ததா?''

''இண்டைக்கு நேரத்திற்கு முடிஞ்சிது...'' என்றபடி அவன் பக்கத்துக் கதிரையில் அமர்ந்தாள்.

''அந்தப் படத்தைக் காட்டுங்கள்...'' என்றவாறு அவன் கிறுக்கிய பேப்பரைப் பறித்தெடுத்தாள். அவன் தடுக்கவில்லை.சிலபொழுது கங்கா சிலையாக இருந்தாள்.

கங்கா என்ற வாக்கியத்திற்குக் கீழ் இருதயம் அரைகுறையாக வரையப்பட்டிருந்தது.இருதயத்தின் மத்தியினூடாகக் கூரிய அம்பு ஒன்று தைத்திருப்பதாக வரையப்பட்டிருந்தது.

''இதென்ன?...''

''புரியவில்லையா மிஸ் கங்கா...?''

''நீங்கள் என்ன இன்னமும் சிறு பிள்ளையாக இருக்கிறியள்...வாழ்க்கை என்பது கதைகளில் வாறதைப்போல கற்பனையா?''

''கற்பனைகள் மட்டுந்தான் கதைகளல்ல...''

''சரி விடுங்கள்...'' அவள் அந்தப் பேப்பரை மடித்தாள்.காண்ட்பாக்கைத் திறந்தாள்.அதனுள் அம் மடித்த பேப்பரை வைத்துவிட்டு அதனுள் இருந்த கன்டோஸ் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினாள்.அவன் வாங்கிக் கொண்டான்.

''அதையேன் அதனுள் வைத்தீர்கள்...?''

''குப்பைகளை எங்கு வைப்பது?''

''மனமும் குப்பைத் தொட்டிதான்...''

''அதனுள் வைக்க முடியவில்லையே?...'' என்றாள் கங்கா. முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். அவன் இதயம் அதிர்ந்து ஓய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

**மாலை** கழிந்து இரவு படரும் போதில் விருந்துபசாரம் ஆரம்பமானது. அந்த ஆண்டில் பல்கலைக் கழக வாழ்வை நிறைவேற்றிக் கொண்டு வெளியேறவிருக்கின்ற மார்க்கஸ் பெர்ஞண்டோ மண்டப இறுதி வருட மாணவர்களுக்கான இறுதி வருட விருந்துபசாரம் நடைபெற இருந்தது.

"சிவா, நீ இம்முறை டின்னருக்குக் கங்காவை இன்வைற் பண்ணு, நான் புஸ்பாவைக் கூப்பிடுகிறன்..." என்றான் சிகாமணி.

தெய்வசிகாமணி கூறியது சிவராசனுக்குச் சரியாகவே பட்டது. கடந்த தவணை நடந்த சோசலுக்குக் கங்கா அவனை அழைத்துச் சென்றிருந்தாள். இம்முறை கங்காவை அழைக்கத்தான் வேண்டும். அவளை அழைத்த போது மறுப்புத் தெரிவிக்காமல் வருவதற்கு அவள் ஒத்துக் கொண்டாள்.

விடுதி மாணவர்கள் தங்களை அலங்காரம் செய்து கொண்டு தாங்கள் அழைத்திருந்த மாணவிகளை எதிர் பார்த்து விடுதி மண்டப வாயிலில் நின்றிருந்தார்கள். தான் அணிந்திருந்த சேட்டும் லோங்சும் அவ்வளவு தரமானதல்ல எனச் சிவராசன் எண்ணிக்கொண்டான்.

தூரத்தில் அழகுப் பதுமைகளாக மாணவிகள் வருவது தெரிகின்றது.

கங்காவும் வந்தாள்.

அவளது பொன்னிற மேனியைச் செந்நிறச் சேலை தழுவியிருந்தது. அழகாகப் பிகாய் கொண்டையிட்டு, ரோஜா ஒன்றை இடதுபுறக் கொண்டையில் சூடியிருந்

தாள். உடலின் இறுக்கத்தையும், நெளிவுகளையும் காட்டத்தக்கதாகச் சேலையை முழங்காலுக்குச் சற்று மேல் 'பின்'பண்ணி இருந்தாள். உதடுகளில் மிக லேசாக லிப்ஸ்ரிக் தடவப்பட்டிருந்தது. நடந்து வரும் போது தேவ மங்கை ஒருத்தி மண்ணில் கால் பதித்து வருவது போல இடை சிறுத்து அகன்ற கீழ்ப் புறங்கள் இடதும் வலதுமாக அளவோடு அசைய... விழிகளில் அளவோடு வரையப்பட்ட மையின்... பகைப் புலத்தில் கவர்ச்சியும் காந்தமும் நிறைந்த இரு விழிகள் கொக்கிகளாகி ஆயிரமாயிரம் கனவுகளைத் தேக்கி நிற்க... அந்தக் கூரிய மூக்கு... குழி விழும் கன்னம்... உதடுகள் மலர் இதழ்களா?

கங்காவின் பூரண அழகை அன்றுதான் சிவராசன் கண்டான்.

பெண்மையின் ஆயிரம் படைக்கலங்களும் அவனது உடலின் ஒவ்வொரு மயிர்க்காலூடாகவும் நுழைந்தன மாபெரும் மன்னர்கள் அழகிகளின் காலடிகளில் கிடந்தார்கள் என்றால் அவற்றில் எதுவித அதிசயமும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை.

''என்ன, இன்வயிற் பண்ணிவிட்டு, அழையாது நிற்கின்றீர்கள்...?'' என்று சிரித்தாள் கங்கா. முல்லை அரும்புகள் முகிழ்த்தன. யார் அவளை அழைத்தது? யாழின் நரம்புகளை மீட்டது யார்? முந்துத் தரளங்கள் குலுங்கினவா? ஒரு கணந்தான்.

''வாருங்கள்...'' என்றான் சிவராசன்.

அவளை ஹோலுக்கு அழைத்து வந்தான். ஹோலில் உள்ள கதிரைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. ''வெளியே போடப்பட்டிருக்கும் கதிரைகளில் அமர்வோமா?'' என்று கங்கா கேட்டாள்.

விடுதியின் முற்றத்தில் பல கதிரைகள் வட்டம் வட்டமாகப் போடப்பட்டிருந்தன. ஆங்காங்கு ஆணும் பெண்ணுமாகக் கூடிப் பேசிச் சிரிக்கின்ற ஒலி. சிவராசனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்காவும் ஒரு ஒதுக்குப் புறக் கதிரைகளில் அமர்ந்து கொண்டனர்.

சற்று நேரம் இருவரிடையேயும் மௌனம் நிலவியது.

கதிரையின் ஒரு புறக் கைப்பிடி மீது அவளது நீண்ட அழகுக் கரம் கிடந்தது. அக்கரத்தில் இரு சோடித் தங்கக் காப்புகள் மின்னின. அவளின் கரத்தில் இருந்த வளையல்களின் பொன்னிறம் அதிகமா, கரத்தின் பொன்னிறம் அதிகமா? அவளை நிமிர்ந்து பார்த்தான் சிவராசன். அவளது சற்று நீண்டு ஒடுங்கிய முகத்தில் அவன் விழிகள் நிலைத்தன.

அவன் உள்ளத்திலிருந்து சகல நினைவுகளும் அழிந்து போயின. ஒரே ஒரு நினைவு மட்டும்தான் எஞ்சியது...

''என்ன அப்படிப் பார்க்கிறியள்?'' என்று கேட்டாள் கங்கா.

''இல்லை... ஒன்றுமில்லை...'' என்று தலை குனிந்தான் அவன்: ''மிஸ்... கங்கா...''

''சும்மா கங்கா என்றே கூப்பிடுங்கள்... எனக்கு நீங்கள் மரியாதை காட்ட வேண்டாம்...'' என்றபடி கங்கா வானத்தைப் பார்த்தாள். தெளிந்த வானில் நட்சத்திரப் பூக்கள் மலர்ந்திருந்தன.

''உண்மையாகவா?''

''...ம்... ஏன்...?''

''கங்கா... என்னால் உன்னை மறக்கவே முடியவில்லை... கங்கா... கங்கா... நான் உன்னை விரும்புறன்... நேசிக்கிறன்...'' —அவன் பேசிக் கொண்டே போனான். அவள் அவனையே கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

''கங்கா என்று அழைத்தபடி, அந்த இளைஞன் அவள் வலக்கரத்தை மெதுவாகப் பற்றினான். அந்தக் கண நேர ஸ்பரிசம்...?

அவள் மெதுவாகக் கரத்தை இழுத்துக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆக்கள் இருக்கின்றார்கள்...''

அவன் உடல் தணலாகக் கொதித்தது. அவளை அப்படியே அள்ளி விழுங்கிவிட வேண்டுமாப் போல ஆவல்.

காதுகளின் அரைப் பாகத்தை மறைத்தபடி கார் மயிர் கற்றைகள் கொண்டையில் படிந்திருந்தன. கரு நிறப் பின்னணியில் எலும்பிச்சைப் பழ நிறத்தில் தெரியும் காதுகளில் தொங்கிய வளையங்கள் அசைவது இவனுக்கு இன்பத்தைத் தருகின்றது. கைவண்ணம் மிக்க சிற்பி ஒருவன் அழுத்தமாகக் கடைந்தது போல நீல நிற நரம்புகள் வெளித் தெரியும் கழுத்து... எவ்வளவு விம்பிதம்...

''கங்கா... நீ என்னை விரும்பவில்லையா?''

அவள் அவனை விழுங்கிவிடுமாப்போல ஊடுருவிப்பார்த்தாள்.

''உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்க நான் தயாராகவில்லை. உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்காதீர்கள்... கடமைக்குத்தான்... கடமைதான்...'' அவள் விழிகள் கலங்கின. சமாளித்துக் கொண்டாள்.

''கடமை... கடமை... என்று குமுறினான் சிவராசா. ''கடமையைப் புரிவதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? ஒருத்தியைக் காதலிக்கக் கூட கடமை தடைசெய்யுமா?... கங்கா, கடமை கடமை என்று என்னை கட்டிப் போடாதே. என்னால் உன்னை மறக்க முடியவில்லை... உன்னை இழக்கவும் முடியவில்லை... உன் நினைவு என்னைப் படுத்துகின்றபாடு கொஞ்சமல்ல. நிம்மதியாகப் படிக்கவும் முடியவில்லை... கங்கா கங்கா என்னை வெறுக்காதே...''

அவள் துடித்துப்போனாள்: ''என்ன பேசுகிறீர்கள்? நான் உங்களை வெறுப்பதா? அப்படியில்லை... என்னிதயத்தை உங்களைப் போல உங்கள் முன் கொட்டிவிட எனக்குத் தெரியாது. நான் பெண். அவசரப்படுவதால் வரும் இழப்பு வாழ்வில் மறைய முடியாததாகவா இருக்கும்? நடக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியது ஒத்துக்கலாம். கிடைக்கக் கூடியதுக்கு ஆசைப் படலாம். கிட்டாத ஒன்றிற்காக நான் ஆசைப்பட உரிமை யில்லை. சிவா... எனக்கு ஆசைப்படக்கூட உரிமையில்லை''

''கங்கா நான் கிட்டாத பொருளா? அல்லது நீ கிட் டாத பொருளா?''

''நான் பறிக்கக்கூடியளவு தூரத்தில் தான் இருக் கிறன்... நீங்கள் விலைக்கு வாங்க முடியாத இடத்தில் இருக்கிறீர்கள்... ஒரு கணம் உங்கள் குடும்பத்தைச் சிந்தித் துப் பாருங்கள்...''

சிவராசா கதிரையில் சாய்ந்து அமர்ந்தபடி வானத்தை வெறிக்கப் பார்த்தான். இதயம் குரலிட்ட வாறு அலறியது. கடமை என்பதற்கு இன்னொரு பெயர் தியாகமா?

''என் கடமைகளை நான் மறக்கவில்லை கங்கா...... அவற்றை நிறைவேற்றிவிட்டு...''

கங்கா சிரித்தாள்.

''கடமை நிறைவேற்றம் என்பது பணம் தான் சிவா. அந்தப் பணத்தை நீங்கள் தேடி கடமையை நிறைவேற்ற எவ்வளவு காலமாகும்? அதுக்குச் சுருக்கமான வழி சீத னம்... நன்கொடைதான். வேறு வழியில்லை...''

''கங்கா...''

''உண்மை அதுதான்...உங்களுக்காக நான் காத்திருப் பதாக வைத்துக்கொள்வோம். நீங்களும் உழைத்துப் பணம் தேடி உங்கள் கடமைகளை நிறைவேற்றிவிட்டு வரு வீர்கள் என்றும் வைத்துக்கொள்வோம். காலம் நிக்குமா? நீங்கள் ஆண்... எத்தனை வயது வரையும் காத்திருக்கலாம். நான் பெண்... முடியுமா? என் பெற்றோர் சம்மதிப்பார் களா? என் அம்மா விஷம் குடிப்பன் என்பா... அப்பா கண் டிப்பார்... இவற்றையெல்லாம் வென்று நாம் ஒன்று சேர் வதென்பது இலேசல்ல,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கங்கா... அதையும் இதையும் சொல்லி என்னைக் குழப்பாதே...கோழைகள் காதலிக்கக் கூடாது..." என்றான் சிவராசா.

"இது கோழைத்தனமல்ல, நிதர்சன உண்மை... உண்மை எதுவென்று தெரிந்து கொண்டும் அதனைத் தேடி அலைவதால் என்ன பயன்..."

அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"கங்கா... எனக்கு எந்த விளக்கமும் வேண்டாம்... ஒன்றை மட்டும் சொல்லு..."

"என்ன?"

"நீ என்னை விரும்பவில்லையா?"

"அதை வாயால்... சொற்களால் சொன்னால்தான் நம்புவீர்களா சிவா?"

அவன் அவளைப் பார்த்தான். ஏக்கம் நிறைந்த பார்வை. அவனது விழிகளைச் சந்திக்க முடியாது கங்காவின் விழிகள் தாழ்ந்தன.

"இது ஒன்றே போதும் கங்கா. இந்த நினைவுடனே நான் என் கடமைகளை நிறைவேற்றி விட்டு உன்னிடம் ஓடி வருவேன்."

கங்காவின் இதழ்களில் ஏக்கப் புன்னகை. கங்காவின் கரத்தில் இருந்த கைப்பை தவறிக் கீழே விழுந்தது. சிவராசா அதனை எடுத்துத் திறந்தான். வழக்கமான கண்டோஸ்.

"எனக்கா?"

"வேறு யாருக்கு?"

கண்டோசை எடுத்த போது ஒரு மடித்த பேப்பர் தட்டுப்பட்டது. அதனை எடுத்து விரித்தான். அவன் என்றோ வரைந்த கிறுக்கல் படம். இருதயமும் அதில் தைத்த அம்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது இன்னுமா இங்கிருக்கிறது?"

"அது இனி அங்கிருக்கத் தேவையில்லை."

"ஏன்?

"என் கான்ட் பாக் இனிக் குப்பைக் கூடையல்ல... மனந்தான்" என்று தலை குனிந்தாள் அவள்.

டின்னர் ஆரம்பமாகியது. அவன் அவளுக்குப் பரிமாறினான். அவள் தடுக்கவில்லை.

இரவு பன்னிரண்டு மணி. அவன் அவளை அழைத்து வந்து விடுதியில் விட்டுவிட்டுத் திரும்பினான்.

படுக்கையில் படுத்துக்கொண்டான். 'கங்கா என்னைக் காதலிக்கிறாள்' என்று பெரும் குரலில் சத்தமிடவேண்டும் போல உணர்வு. மெதுவாக முணுமுணுத்துக்கொண்டான்.

"கவனமாகப் படியுங்கள்... அதுதான் முக்கியம்" என்று விடைபெறும்போது கங்கா கூறியவை காதுகளில் ஒலித்தன. கவனமாகப் படிக்கத்தான் வேண்டும்.

கண்கள் எப்போது துயின்றனவோ?

கனவு ஒன்று...

கங்கா மிகக் கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

"வாரத்தில் ஒரு நாள் தான் உங்களுடன் வெளியே வருவேன். மற்றைய நாட்களில் நீங்கள் கவனமாகப் படிக்க வேண்டும்."

அவனுக்கு ஏமாற்றமாகவே இருந்தது. ஒவ்வொரு நாள் மாலையையும் இனிமையாகக் கழிக்க விரும்பினான் அவன். ஆனால், அவளது கட்டளைக்கு மறுப்பேது?

மாலையின் இனிய வேளையில் ஒருநாள் அவர்கள் கங்கைக்கரை ஓரப் பாதையில் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவன் அவள் இடையை மெதுவாகத் தன்னுடன் இழுத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்கள்?'' என்று அவள் கேட்டாள்.

''வேறு எப்படி நடந்து கொள்வது கங்கா? இது கூடவா செய்யக் கூடாது?''

''நீங்கள் மிக மோசம்... இதற்காகத்தானு காதலித்தீர்கள்?''

''மாம்பழத்தைக் கையில் வைத்துக்கொண்டு உண்ணுதே என்ருல்?''

''கிணற்று நீரை ஆற்று வெள்ளம் கொண்டுபோய் விடுமா?''

''போன காலம் திரும்பி வருமா கங்கா? அனுபவிக்க வேண்டிய காலத்தில்...'' என்றபடி அவன் அவளை இழுத்து அணைத்தான்.

''விடுங்கள் இதென்ன மிருகங்களைப் போல நடு வீதியில்...'' என்றபடி அவள் திமிறி ஒதுங்கினுள்.

சிவராசனின் உடல் அனலாகத் தகித்தது. கங்காவின் எழில் அவனை நிலை குலைய வைத்தது.

''கங்கா... பிளீஸ்... பிளீஸ்... ஒரே ஒரு தடவை...,' என்றபடி அவளை முரட்டுத்தனமாகப்பற்றி அணைத்தான். தூரத்தில் ஒளி பாய்ச்சியபடி கார் ஒன்று விரைந்து வந்தது. காரில் இருந்தவர்கள் நிச்சயமாக இந்த நடுத்தெரு நாடகத்தைப் பார்த்திருப்பார்கள். கங்கா உண்மையில் குன்றிப்போனுள்.

''நீங்கள் மிருகம்...'' என்றபடி கங்கா வேகமாக நடந்தாள்.

''கங்கா... சொறி...'' என்று அவன் கெஞ்சினுன். விடுதி நெருங்கி விட்டது. அவள் கூறினுள்:

''இனிமேல் இப்படி நடந்து கொண்டீர்கள் என்ருல் பிறகு உங்களுடன் ஒரு போதும் பேச மாட்டேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகவா அவன் அவளைக் காதலித்தான். எல்லாரையும் போலப் பல்கலைக்கழகத்தில் இன்பமாக இருக்கவல்லவா அவன் விரும்பினான்.

வீட்டுச் சிந்தனைகள் அவன் மனதை விட்டு அகன்றன. கங்கா என்ற ஒருத்தியின் அழகே அவனைப் பித்துக்கொள்ளச் செய்து கொண்டிருந்தது.

அவன் மீண்டும் ஒரு தடவை அப்படி நடந்து கொண்டான்.

கங்கைக்கரை ஓரப் பாதையில் அவனும் கங்காவும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

"கங்கா... நீ ஏன் இப்படி இருக்கிறாய்?"

"எப்படி...?"

ஜிம்னேசியத்தின் வெளிவிறாந்தையில் இருவர் அமர்ந்திருந்தனர். காதலின் வேகம், அவசர அனுபவிப்பு.

"சீச்சி..." என்றாள் கங்கா.

அவன் வெறியோடு அக்காட்சியைப் பார்த்தான்.

"வாருங்கள் போகலாம்..." என்றபடி அவள் திரும்பினாள்.

"இப்படி லவ்வேர்ஸ் பார்க்குள்ளால் போய் ஏறினால் உன் விடுதி வரும்... இதால் போவம், என்ன..."

"வேண்டாம்......"

"இதாலையே போவம்..."

அரை மனதோடு அவள் ஒத்துக்கொண்டாள். இருண்ட சூழ்நிலை. ஓங்கி வளர்ந்த மரங்கள் இருள்படவைத்தன. மகாவலி கங்கை விரைகின்ற சலசலப்பும் கேட்டது.

"கங்கா..."

"என்ன...?" அவன் நெருங்க அவள் விலகி நடந்தாள்.

"கங்கா..." என்றபடி அவன் அவளை அணைக்க முயன்றான்.

"வேண்டாம்... வேண்டாம்... தயவு செய்து விடுங்கள்..." என்று அவள் கெஞ்சினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எல்லாவற்றையும் மறந்து அவளை வெறியோடு இழுத்து அணைத்தான். அவள் பயத்தோடு திமிற... அவள் திமிறிப் பின் செல்ல பிளவுசின் பட்டன்கள் அறுந்தன.

''ஐயோ... என அவள் வீறிட்டாள். அவள் வீறிட்டதும் தான் சிவராசனுக்கு சுயநினைவு வந்தது. ''வெறி பிடித்த மிருகம் நீ...''

கங்கா அவனை உதறி விட்டு வேகமாக ஓடினாள்.

''கங்கா... கங்கா...''

''இனி அந்த உறவு இல்லை...''

விடுதியின் பின்புறமாக அவள் ஓடி மறைவது தெரிகின்றது.

சிவராசன் திக்பிரமை கொண்டவனாக அப்படியே அமர்ந்து கொண்டான்.

''கங்கா...'' என்று அலறியவாறு அவன் கண் விழித்தான். அவன் கனவு கண்டான் என்பதை அவனால் சில நிமிடங்கள் ஏற்க முடியவில்லை. பொல்லாத கனவு.

## 17.

மத்தியானம் சாப்பாட்டிற்குப் பின்னர் சற்று ஓய்வாக சிவராசன் கட்டிலில் படுத்திருந்தான். இறுதி ஆண்டு பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. கங்காவிற்கும் இது இறுதி ஆண்டு தான். அவன் பொருளியலில் விசேட பட்டம் செய்வதால் இருவரினதும் இறுதி ஆண்டு ஒன்றாக வுள்ளது.

''ஹாய்....ஜோக்கர்....'' என்றபடி சிகாமணி அட்டகாசமாக அறையினுள் நுழைந்தான்.

''என்னடா... சிகா...''

''இந்தா உனக்கொரு பெரிய கடிதம் வந்திருக்குது... லவ் லெற்றர் போலக் கிடக்குது... இந்தா...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகாமணி நீட்டிய கடிதத்தை ஆவலுடன் வாங்கிக் கொண்டான். கமலத்தின் கையெழுத்து.

''அக்காவின் கடிதமடா...''

''சரி . . . வாசித்து விட்டு பிறஸ் அடிச்சுக் கிட...'' என்றபடி சிகாமணி வெளியேறினன்.

சிவராசன் கடிதத்தைப் பிரித்தான். நீண்ட கடிதம் தான். ஒரு மாதத்திற்குப் பிறகு கமலம் அக்கா கடிதம் எழுதியிருக்கிருள். என்ன எழுதியிருக்கிருளோ? என் படிப்புச் செலவிற்காக ஐயா மூன்ரும் ஈடும் வைத்திருப்பதாக எழுதியிருக்கிருளோ? வீட்டின் வறுமையை எழுதியிருக்கிருளோ? சகோதரங்கள் என்னை ஆதாரமாகக் கொண்டு கட்டியிருக்கும் மனக்கோட்டைகளை எழுதியிருக்கிருளோ? தான் பிரித்துக் கொண்டு வெளியேறிவிடமுடியாக அன்பு வலையால் பிணைக்கப்பட்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

'' . . . இன்னும் இரண்டு மாதங்களில் உன் படிப்பு முடிந்து விடும். நீ முதலாம் பிரிவில் சித்தி பெற்று யூனிவேசிற்றியிலேயே லெக்சரராக வருவாயென இங்கு கதைக்கிருர்கள். கேட்பதற்கு சந்தோஷமாக இருக்கிறது. எங்கள் குடும்பம் உன்ஞல் உயர்வடைய இருப்பதை எண்ண எண்ண பூரிப்பாக இருக்கிறது. ஐயாவிற்கு எப்போதும் உன் பேச்சுத் தான். அம்மா ஒவ்வொரு கோயில்களாக உனக்கு அர்ச்சனை செய்து கொண்டே திரிகிரு. நேற்றும் சன்னதிக்குப் போயிட்டு வந்தா . . . '' கமலம் அக்கா எழுதியிருந்தாள்.

இவற்றைப் படிக்கப் படிக்க சிவராசனைக் கவலை சூழ்ந்து கொண்டது. நீண்ட பெருமூச்சினை விட்டபடி தொடர்ந்து படித்தான். பெற்ருரின் அன்பு அவனை துவளவைத்தது.

''தம்பி, புதிதாக உன்னைப் பற்றிய ஒரு செய்தி இன்று கேள்விப்படுகிறேன். ஐயாவிற்கோ அம்மாவிற்கோ அது தெரியாது. அவர்களுக்குத்தெரிந்தால் ஏங்கிவிடுவார்கள்.

32908

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மனக்கோட்டைகள் எல்லாம் உடன் தரை மட்டமாகிவிடும். பூவும் காயுமான மாமரம் ஒன்று ஒரு இரவில் சாய்ந்தது போல ஒரு உணர்வு இச்செய்தியை அறிந்ததும் எனக்கு ஏற்பட்டது.''

ஒருகணம் சிவராசன் வாசியாது நிறுத்தினான். கங்காவின் செய்தியாகத் தான் இருக்கவேண்டும். கங்காவிற்கும் அவனுக்கும் இடையில் நிலவும் உறவினை அவன் குடும்பத்தினர் ஏற்கும் நிலையில் இல்லை. அவன் அவர்களுக்காகப் படைக்கப்பட்டவன்.

''நீ அப்படி நடக்கக்கூடியவன் அல்ல என்று எனக்குத் தெரியும். ஐயா அப்படி எங்களை வளர்க்கவில்லை. உன்னை நம்பி இங்கே ஒரு குடும்பமே இருக்கிறது என்பதை நீ மறக்கக் கூடியவன் அல்ல. உன்னை எனக்குத் தெரியாதா தம்பி. என்றாலும் கேள்விப்பட்டதும் இடிந்து போனேன். நெருப்பில்லாமல் புகையாது என்பார்கள். பல்கலைக்கழகத்தில் எத்தனையோ பெண்களுடன் பழக வேண்டியிருக்கும். அதைப் பார்த்து விட்டு எவரோ தவறுகக் கதை பரப்பியிருக்க வேண்டும். உனக்கும் யாரோ ஒரு மாணவிக்கும் தொடர்பு என்று சொன்னார்கள். இதுக்காக நீ கவலைப்படவேண்டாம். இப்படி எத்தனை பொய்க் கதைகளைக் கட்டிவிடுவார்கள். கவலைப்படாதே. கவனமாகப்படி.''

கமலம் அக்கா அவன் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறாள்?

''தங்கச்சி கனகத்தின் நடத்தை கவலைக்குரியதாக இருக்கிறது.''

சிவராசன் டக்கென்று எழுந்து அமர்ந்து கொண்டான். கரத்தில் சிறியதொரு நடுக்கம். ஆவலோடு கண்கள் தமக்கையின் கடிதத்தில் மேய்ந்தன.

''உன் சிநேகிதன் பாலசுப்பிரமணியம் கனகத்திற்கு காதல் கடிதம் கொடுத்திருக்கிறான். இவளும் சம்மதித்து வாங்கியிருக்கிறாள். இவர்களிடையே இப்படித் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு காலமாக இருப்பது இப்ப தான் தெரிய வந்தது. கனகத்திற்கு ஐயா நல்ல அடி அடித்தார். அம்மா மருந்து குடிக்கிறன் என்கிறு. கனகத்தை இப்ப வெளியில் விடுவதில்லை. பாலன் அவளைத் தூக்கப் போவதாகச் சொல்லித் திரிகிருனும்.''

'எளிய நாய். இவளுக்கு இப்ப பிடரியைப் பொத்தி உதை கொடுக்கவேண்டும். கண்டறியாத காதல். மூதேசி, என சிவராசனின் மனம் எண்ணியது. மறுகணம் விழித்துக்கொண்டது. அதில் என்ன தவறு? அவன் மட்டும் காதலிக்கலாம்? அவள் காதலிக்கக் கூடாதா? பாலன் நல்லவன் தான். கமக்காரன். ஒரு விதத்தில் சொந்தக் காரன். மிளகாய்ச் செய்கையில் ஏராளமாக உழைத்து கல்வீடும் கட்டியிருக்கிருன். கனகம் விரும்பினுல் அவனும் சம்மதித்தால் செய்து கொண்டு போகட்டுமே? ஆனுல், கமலம் அக்கா? அக்காவிற்குக் கலியாணம் நடப்பதற்கு முன் தங்கச்சிக்கு நடக்கக் கூடாது.

''நான்கு நாட்களுக்கு முன் மாமாவிற்கு நெஞ்சடைப்பு வந்துவிட்டது. டொக்டர் பிலிப்பிடம் காட்டினுர்கள். அவர் வார்டில் மறித்து விட்டார். ஐந்து நாட்கள் வார்ட்டில் இருந்தார். நாங்கள் எல்லாரும் போய்ப் பார்த்தோம். எங்களைக் கண்டதும் அழுதார். நல்லா பயந்து விட்டார். இது முதல் கார்ட் அற்ருக்காம். ஐயாவும் கோபத்தை மறந்து போய்ப்பார்த்தார். இப்போது சுகம். சரோசாவிற்கு உடன் கலியாணம் செய்து வைத்து விட மாமா முயல்கிறுர். தனக்கு ஒன்று நடப்பதற்கிடையில் கலியாணத்தை முடித்துவிட வேண்டும் என்பது அவர் ஆசை. சரோசா ஒத்துக்கொள்கிருளில்லை. மாமாவிற்கு அவள் போக்குத் தெரிந்துவிட்டது. நேற்று எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்.''

சிவராசன் தொடர்ந்து படித்தான்:

''சரோசா கல்யாணம் செய்தால் உன்னைத்தான் செய்வன் என்று பிடிவாதமாக நிற்கிருளாம். மாமா மாமிக்

கும் விருப்பந்தானும். எவ்வளவு சீதனம் வேண்டுமானு லும் தாருராம். ஒண்டுக்கை ஒண்டு. குமருகளுக்கெல்லாம் தானே சீதனம் கொடுத்து நல்ல இடத்தில கலியாணம் செய்து வைக்கிருராம் என்று எவ்வளவோ சொன்னுர். அழகுக் குறை தான். அம்மாவிற்கு விருப்பம். ஐயா மாமாவை ஒரு வார்த்தை தான் கேட்டார். 'சிவராசா உன் மகளுக்கு அவனைச் செய்வன் என்று வாக்குக்கொடுத் திருக்கிருயோ?' என்று. மாமா இல்லை என்ருர். 'சிவ ராசா சரோசாவை நிமிர்ந்தும் பார்ப்பதில்லை' என்ருர். 'அது தானே' என்ருர் ஐயா திருப்தியாக. 'என்ன மச் சான் முடிவு சொல்லிறியள்' என்று மாமா கேட்டார். 'சோதனை முடியட்டும். அவனும் வரட்டும். எல்லாம் சரி வந்தால் செய்யலாம்' என்ருர். மாமா திருப்தியோடு போனுர். இவற்றையெல்லாம் இப்ப உனக்கு எழுதக் கூடாது என்று தான் நினைத்தேன். உனக்கு எழுதாமல் விடவும் முடியவில்லை. சரோசா நல்ல அடக்கமான பிள்ளை. உனக்கு ஏற்றவள். இதையெல்லாம் எண்ணி இப்போது படிப்பைக் குழப்பிக் கொள்ளாது கவனமாகப் படிக்க வும்.''

அக்கா வேறும் பல விடயங்கள் எழுதியிருந்தாள். ஆடு குட்டி போட்டது வரை எழுதியிருந்தாள்.

சரோசாவை எண்ணும் போது சிவராசனுக்குப் பரி தாபமாக இருந்தது. இந்தப் பேதைப் பெண் போயும் போயும் என்னைவிரும்புகிருளே? அப்படிஎன்னிடம்என்னத் தைக் கண்டு விட்டாள்? அவளிடம் இருக்கிற செல்வத் திற்கு எவ்வளவு உயர்ந்த உத்தியோக மாப்பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்கலாம்? இது நடக்கக் கூடியது தானு? என் கங்காவை எப்படி நான் இழக்க முடியும்?

கமலம் அக்கா கடிதத்தின் இறுதியிலும் சரோசாவை பற்றி எழுதியிருந்தாள்.

''அம்மன் கோவில் திருவிழாவில் சரோசாவைக் கண் டேன். மச்சாள் மச்சாள் என்று கூடவே திரிந்தாள். உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது அவளுக்கிருக்கிற அன்பையும் ஆசையையும் புரிந்து கொண்டேன்.''

புதிய பிரச்சினைகள் உருவாகின்றனவோ? கங்காவின் இனியமுகமும் செயல்களும் உள்ளத்தில் நிழலாடின. அவள் வெட்கத்தோடு தலைகுனிந்து சிரித்தமை அவன் மனதில் சதிராடியது.

'கங்கா, என் உயிரே... நான் இழக்கக்கூடாத செல்வம் நீ.'

சிவராசன் நேரத்தைப் பார்த்தான். இரண்டரை மணி. மூன்று மணிக்கு விரிவுரை ஒன்றிருக்கிறது. நான்கு மணிக்கு கங்காவையும் சந்திக்க வேண்டும். கடிதத்தைக் கவரில் இட்டு பையிலில் வைத்தான். லோங்சை மாட்டிக் கொண்டு புறப்பட்டான்.

★ ★ ★

கங்கா அவனை ஊடுவிப்பார்த்தாள்.

''என்ன ஒரு மாதிரி இருக்கிறியள்? . . . ''

''ஒரு மாதிரியா? அப்படியென்றால்... எப்படி? அவன் சிரிக்கமுயன்றான்.

''கலகலப்பில்லாமல் எதையோ பறி கொடுத்தவர் போல''

''அப்பிடியில்லையே கங்கா. . .''

''உங்களை எனக்குத் தெரியாதா? வீட்டிலிருந்து ஏதாவது கடிதம் வந்ததா''?

''அது எப்படி உனக்குத் தெரியும்.''

''சும்மா அப்பிடியிருக்கும் என்று நினைத்தன்.''

''அக்கா கடிதம் எழுதியிருந்தா...வழக்கமான கடிதம் தான். . , ''

''சரி. . . அதுக்காக கவலைப்படாதீர்கள். . . என்றாள் கங்கா. ''கவனமாகப் படிக்கின்றீர்களா?''

''படிக்கிறன் கங்கா. நீ படிக்கிறாயா?''

''நான் ஜெனரல் தானே? படிக்கிறன். நீங்கள் கவனமாகப் படியுங்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் வெகுநேரம் அளவளாவினர். கங்காவிடம் இருந்து விடைபெற்று அவன் விடுதிக்கு வந்தான். இரவு சாப்பிட்டுவிட்டுப் படுக்கும் போது கமலம் அக்காவின் கடிதத்தை மீண்டும் படிக்க வேண்டும் போன்றதொரு எண்ணம் எழுந்தது.

பையைத் திறந்து பார்த்தான். அக்கடிதத்தை அங்கு காணவில்லை.

வழியில் எங்காவது விழுந்திருக்குமோ?

## 18

அப்பகந்தானைக் குன்றிற்கு அப்பால் இருந்தாற் போல வானம் இருண்டது. இன்னும் சற்று நேரத்தில் மலை நாட்டின் மாலை மழை கீழிறங்கப்போகின்றது. பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே வந்த சிவராசன் வானக் கருமையைப் பார்த்தான். எழுதிய களைப்பு. கை ஓய்ந்து கிடந்தது. பெரும் பிரச்சினை ஒன்று தீர்ந்தது போன்ற நிம்மதி. அதே நேரத்தில் இதயத்தின் ஒரு மூலையில் வானக்கருமை படர்ந்து கவ்வியது.

இன்றுடன் நான்கு ஆண்டுப் பல்கலைக் கழக வாழ்வு முடிவடைகின்றது.

பல்கலைக்கழக வாழ்வைப் பிரிவது ஒன்றும் கஷ்டமில்லை. கங்காவை அவன் பிரிய வேண்டும். இனிமேல் அவளை அவன் எங்கு சந்திப்பான்? பசுமை நிறைந்த நினைவுகள்.

நெஞ்சின் ஒரு மூலை வலித்தது. கங்கா இனி உன்னை எங்கு எப்படிச் சந்திக்கப் போகின்றேன்? உன்னைப்பிரிவதென்பது என்னால் இயலக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகவில்லை.

மெதுவாக மழை தூறியது. சிவராசன் வேகமாக நடந்து பில்லரிங் செக்சனில் ஏறினான். கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவன் முன் கங்கா சிரித்தபடி நின்றிருந்தாள். அந்தச் சிரிப்பு பூரணமான சிரிப்பாகவில்லை. பிரிவின் ஏக்கமோ?

''கங்கா''

''நல்லாச் சோதனை எழுதுனீங்களா?''

''நல்லா எழுதினேன். எதிர்பார்த்ததிலும் நல்லாவே எழுதினேன்... கங்கா.''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். முகத்தில் கவலையின் படர்ச்சியூடே மகிழ்வின் சாயல் தெரிந்தது.

''நீ கங்கா நல்லாச் செய்தியா?''

''ஏம்தா செய்தன். என்றால் நல்லாச் செய்யவேமுடியவில்லை. ஆனால் பாஸ் பண்ணுவன் என்று நினைக்கிறன்''

''கங்கா என்ன அப்படிச் சொல்கிறாய்... நீ...''

வானில் மின்னல் கிளைகள் சிறி அழிந்தன. கங்கா வெளியே படபடவெனச் சொரியும் மழைப் பெருக்கைப் பார்த்தாள். பின்னர் காண்ட் பாக்கைத் திறந்தாள். அதனிலிருந்து கன்டோஸ் ஒன்றை எடுத்தாள். எடுக்கும்போது அவள் கரம் நடுங்கியது.

''இந்தாருங்கள் சிவா... இதுதான் நான் உங்களுக்குத் தருகின்ற கடைசி கன்டோஸ்.''

சிவராசன் துடித்துப் போனான். ''கங்கா நீ என்ன சொல்கிறாய்? பிரிவிற்காக இவ்வளவு கவலைப்படுகிறாயா?''

''பிரிவு நிரந்தரமாகிவிடும் என நம்பும் போது...'' கங்காவின் விழிகள் கலங்கின. கஷ்டப்பட்டுக் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''இல்லை கங்கா விரைவில் உன்னை என் துணைவியாக்குவேன்.''

கங்கா சோகத்தோடு சிரித்தாள். அவன் மெதுவாக அவள் கரத்தினைப் பற்றினான். அவள் உடன் உதறவில்லை. சற்று நேரத்தின் பின்னர் கரத்தினை விடுவித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் சகமாணவிகளிடம் ஓட்டோகிருப் வாங்கச் சொன்னியள். இந்தாருங்கள் ஓட்டோகிருப். நீங்கள் சொன்ன அத்தனை பேரும் எழுதியிருக்கிருர்கள். நானும் எழுதியிருக்கிறேன்."

சிவராசன் ஓட்டோகிருப்பை வாங்கிக் கொண்டான்.

"கங்கா நினைவில் இருக்கவேண்டியவர்கள் தான் ஓட்டோகிருப்பில் எழுதவேண்டும். மறக்கக் கூடாதவர்கள் தான் எழுதுவார்கள். நீ ஏன் எழுதிஞய். நீ என் நினைவில் என்றும் அழியாத என் ராணி...என் உயிர்...என் செல்வம்... நீயுமா எழுதவேண்டும்?

"எழுத வேண்டும் போல இருந்தது. எழுதினேன், நானும் உங்கள் வாழ்வில் குறுக்கிட்ட நண்பர்களில் ஒருத்தியாக..."

"கங்கா..." என அவன் வீரிட்டான். அவள் ஏக்கமாகப் புன்னகைத்தாள். விழிகளில் அவன் என்றுமே சந்திக்காத உணர்ச்சிப் பொருமல்.

"கங்கா உனக்கென்ன இன்று பிடித்துவிட்டது? "

"எனக்கு விசர் தான் பிடித்திருக்கிறது... விசர் தான் சிவா... எங்களைப் பெற்றவர்கள் எத்தனை கனவுகளுடன் எங்களை இங்கு அனுப்பி வைக்கின்முர்கள். நாங்கள் எங்கள் எண்ணப்படி இங்கு காதலிக்கிருேம்."

"இந்த நேரத்தில இது கதைக்கவேண்டியவை தாஞே கங்கா... பெற்ருேருக்கு நாங்கள் என்ன துரோகமா செய்யிறம்?"

"இப்போது கதைக்காமல் இனி எப்ப கதைக்கிறது சிவா. என் அப்பா என் மீது உயிரையே வைத்திருக்கிருர். எனக்கு என் மீது வைத்த நம்பிக்கையால் பூரணமான சுதந்திரம் தந்திருக்கிருர். அவர் எங்கள் உறவை நிச்சயம் வரவேற்கமாட்டார் சிவா."

மலை முகடுகளில் இடி இடித்தது. அவன் பதறித் துடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கங்கா நீ என்ன சொல்கிறாய்?"

"என் அம்மா என் காதலை அறிந்தால் நிச்சயம் விசம் குடிப்பாள் சிவா."

"கங்கா நீ என்ன பேசுகிறாய்?"

அவள் அவனை ஆழமாகப்பார்த்தாள். கண்கள் நீரைச் சொரிந்தன.

"நான் என்ன சொல்கிறன் என்று புரியவில்லையா சிவா?"

"கங்கா..."

"நாங்கள் இந்தப் பிறவியில் ஒன்று சேரவே முடியாது. ஒன்று சேரவே முடியாது" என்றவாறு தலையைத் திருப்பிக் கொண்டு விம்மினாள் கங்கா.

"கங்கா எத்தடை வந்தாலும் தான் உன்னைக்கைவிட மாட்டேன். உலகமே எதிர்த்தாலும் நான் உன்னை மணக்காமல் விடமாட்டேன்... நம்பு."

அவன் அவள் கரங்களைப் பற்றிக் கொண்டான். ஒரு கரம் அவள் விழிநீரைத் துடைக்க விரைந்தது. கங்கா அதற்கு இடம் கொடுக்காமல் விலகிக் கொண்டாள்.

"எங்கள் இருவரின் இன்பத்திற்காக எங்களை நம்பியிருக்கின்றவர்களின் வாழ்வுகளைப் பணயம் வைப்பதா?"

"கடமை...கடமை... அது எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை கங்கா. எனக்கு நீ தான் வேண்டும்... என் கங்கா தான் வேண்டும்?"

"உங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய உங்கள் தந்தை?"

"அது அவர் கடமை!"

"உங்கள் மீது அன்பையெல்லாம் சொரிந்து வளர்த்த தாய்... உங்களால்..."

"கங்கா தாயன்பு பிரதிபலன் எதிர்பார்க்காது."

"உங்களால் தங்கள் வாழ்வு சிறப்படையும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் உங்கள் சகோதரங்கள்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவர்களுக்கு நான் என் கடமையைச் செய்வேன். அதற்காக என்னை நம்பிய உனக்கு தான் செய்யவேண்டிய கடமையில்லையா கங்கா."

கங்கா புன்னகைத்தாள். வெளியே மழை கொட்டியது. பல்கலைக்கழக மின் விளக்குகள் வீதியில் ஒளியைப் பாய்ச்சின.

"நீங்கள் உங்கள் கடமைகளை மறக்கலாம் சிவா எனக்காக... ஆனால், என்னால் என் கடமைகளை மறக்கமுடியவில்லையே? என் பெற்றோருக்கு மாறாக என்னால் நடக்க முடியவில்லையே?"

"கங்கா... நீயா பேசுகிறாய்? என் கங்காவா பேசுறாய்?"

"ஓம் சிவா... நான் உங்களைக் கடந்த ஆறு மாதங்களாக ஏமாற்றிவிட்டேன். ஏமாற்றித் தான் விட்டேன்."

கண்களை மின்னல் பறித்தது போலத் துடித்துப் போனான் சிவராசன். அவனால் சில கணங்கள் எதுவுமே பேசமுடியவில்லை. "கங்கா...?"

"என்னை மன்னியுங்கள்... உண்மையாகவே என்னை மன்னியுங்கள்...... என்னைக் கேட்காமலே ஆறு மாதங்களுக்கு முன் என் தந்தை எனக்கு விவாகம் முற்றாக்கி விட்டார். தன் சகோதரி மகனை நான் என்ன செய்வேன்? முகத்தைக் கரங்களில் புதைத்துக் கொண்டு கங்கா அழுதாள்.

"கங்கா அதற்கு நீ சம்மதித்தாயா?"

"என் சம்மதத்தை ஆர் கேட்டார்கள்?"

"அப்ப... கங்கா நீ ஏன் இதனை இவ்வளவு காலமும் மறைத்தாய்?"

"மறைக்காமல் என்ன செய்வது? அன்றே சொல்லியிருந்தால்... உங்கள் படிப்பு... நீங்கள் இங்கு வந்த நோக்கம்... எல்லாம் வீணாகியிருக்கும் சிவா."

அவன் வெறிக்கப் பார்த்தான். அவள் தொடர்ந்தாள்:

PUBLIC LIBRARY
JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் துரோகி... உங்களை ஏமாற்றி விட்டேன்... அதிர்ஷ்டம் எல்லாருக்கும் வாய்ப்பதில்லை. நான் துரதிர்ஷ்டக்காரி... பாக்கியம் செய்யாதவள்."

"கங்கா...எல்லாவற்றையும் மறந்து இவ்வளவு இலேசாகச் சொல்லிவிட்டாய் உன்னை மறந்து விடும்படி. கட்டையில் வேகும் வரை உன் நினைவு மறக்கக் கூடியது தானு? கங்கா... என் கங்கா, நாங்கள் பழகியதை கட்டிய கனவுகளை எல்லாவற்றையும் மறந்து விட்டாயே? ஒரு கணப்பொழுதில் எப்படி உன்னுல் அவற்றை எல்லாம் தூக்கி எறிய முடிந்தது? நீ பொய் சொல்கிருய்? நீ என்னை ஏமாற்ற வேண்டும் என்று பொய் சொல்கிருய். என்னை ஏமாற்ருதே கங்கா- உன் பிரிவை என்னுல் தாங்கவேமுடியாது. உன்னை இழந்து என்னுல் வாழவும் முடியாது."

"சிவா அமைதியடையுங்கள். எங்களுக்காக நாங்கள் வாழ முடியாதவர்கள்."

சிவராசன் சினத்தோடு பார்த்தான். உதடுகள் துடித்தன.

"கங்கா என்னை ஏமாற்றிவிடாதே?"

"நான் என்ன செய்வேன்... என்னை மன்னியுங்கள்... மன்னியுங்கள்..."

சிவராசன் திடமாகக் கூறினுன்: "கங்கா . . உன்னை நான் பிரியமாட்டேன் . . . நீ எனக்கு வேண்டும்."

கங்கா அவனை ஊடுருவி விடுபவள் போலப் பார்த்தாள். காற்றுடன் மழைச் சாரல்கள் அவள் முகத்தில் படிந்தன. திடமாக அவள் குரல் ஒலித்தது.

"இப்போதே என்னை உங்களால் அழைத்துச் செல்ல முடியுமா?"

"கங்கா...?"

அது இயலக் கூடியது தானு? படித்து முடிந்து இப்போது தான் அவன் வெளிவந்திருக்கிருன். எங்கு செல்வது? எப்படிப் பிழைப்பது? தந்தை... தாய்... சகோதரங்கள்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கா சிரித்தாள். கண்கள் அழச் சிரித்தாள்.

"தயங்குகிறீர்கள் சிவா, நாங்கள் எங்களைச் சுற்றிப் பிணைந்திருக்கும் பாசச்சிக்கலில் இருந்து விடுபடவே முடியாது. நாங்கள் குழந்தைகளல்ல. முன் பின் யோசியாமல் முடிவு செய்ய..."

"கங்கா... நான் எப்படி வாழப்போகிறேன்"? சிவராசன் அழுதான்.

"பெண்கள் போல அழுகிறீர்களே? அழாதீர்கள் சிவா...வாழ்வை எதிர் கொள்ளத்தான் வேண்டும். நாங்கள் பழகியதை கனவாக மறந்து விடுவோம்."

சிவராசன் நிமிர்ந்து பார்த்தான்.

"கங்கா என்னால் அது முடியாது."

"எனக்குவிடைதாருங்கள்" என்று விம்மினாள் கங்கா. அவளை ஏறிட்டுப் பார்த்தான் அவன். அவனால் எதுவுமே பேசமுடியவில்லை.

"கங்கா... கங்கா..." இதயம் அழுதது.

அவள் மழையில் இறங்கி நடந்தாள். மின்னலின் வீச்சு வானில் கீறியபடி எழுந்தது. அவள் வேகமாக விரைந்தாள். திக்பிரமை பிடித்தவனாக சிவராசன் நின்றிருந்தான். தூரத்தில் மகாவலி கங்கையின் சலசலப்புக் கேட்டது.

அவன் தோளில் யாரோ கரம் பதித்தார்கள்.

"சிவா..." என்று அன்போடுஅழைத்தான் சிகாமணி. "எனக்கெல்லாம் தெரியும் வா..."

சிவராசனின் தோளில் கரம் பதித்து அழைத்தபடி மழையில் இறங்கி நடந்தான் சிகாமணி.

மழை நீருடன் சிவராசனின் விழி நீரும் கலந்து பிரவாகித்தது. கங்காவின் விடுதியைக் கடக்கும் போது அதனை ஏறிட்டுப் பார்த்தான் சிவராசன்.

"எல்லாம் போச்சுது...சிகா..."

படுக்கையில் வந்து குப்புற விழுந்தான். உடை மாற்றும் எண்ணமேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கொரு கடிதம் வந்திருக்குது" என்முன் சிகாமணி. "உன் ஐயா எழுதியிருக்கிறுர் போலிருக்குது."

"உடைச்சுப் படி."

சிகாமணி கடிதத்தை உடைத்துப் படித்தான். கனகசபை எழுதியிருந்தார்.

"உன் படிப்பு முடிவடைவதை நினைக்க நிம்மதியாக இருக்குது. உன் மாமா உன்னைத் தன் மகளுக்குக் கேட்கிறுர். நானும் சம்மதிச்சிட்டன். கொம்மாவுக்கு வலுசந்தோஷம். கமலத்துக்கு உன்மாமாதான் ஒருவாத்திப்பொடியனை முற்ருக்கியிருக்கிறுர். கனகத்திற்கும் உன் சிநேகிதன் பாலனுக்கும் என்ன செய்யிறதென்று செய்து வைக்க இருக்கிறம். உன் மாமா காணி ஈட்டையும் மீண்டு விட்டான். எல்லாம் உனக்காகத் தான். வருகிற மாதம் உனக்கும் சரோசாவுக்கும் எழுத்திற்கு நாள் வைச்சிருக்கிறம் ஏதோ எங்களைப் பிடிச்சிருந்த இருள் விலகியது போல இருக்குது."

அவனை இருள் மூடியது போலிருந்தது. அவன் விருப்பின்றியே கங்காவைப் போல எல்லாம் நடந்து முடிந்து விட்டது. கங்கா... கங்கா...

அவனுக்கு ஓட்டோகிருப்பின் ஞாபகம் வந்தது. கங்காவும் ஏதோ எழுதியிருப்பதாகக் கூறினுளே? வேகமாக ஒட்டோகிருப்பின் பக்கங்களைப் புரட்டினுன். ஒரு பக்கத்தில் ஏதோ எழுதி அழிக்கப்பட்டிருந்தது. கங்கா தான்... மறுபக்கத்தில் கங்காவின் எழுத்துக்கள்... அவள் எழுதியிருந்தாள்:

"நல்லுறவின் நல்லுதவிகளை நெஞ்சம் மறப்பதில்லை. இழப்பதுமில்லை. இன்ப வாழ்விற்கு இறைவன் ஆசி என்றும் கிடைக்கட்டும்." —கங்கா.

வெளியே மழை பொழிந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றும் பகுதி

## (19)

இளம் காலை மலர்ந்தது. சிவராசனுல் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியவில்லை. உடல் அசதியாக இருந்தது, உடலைக் குறுகிக் கொண்டு பொய்த் தூக்கம் செய்தான். பிள்ளையார் கோவில் அதிகாலைப் பூசை மணி இன்று வழமைக்கு மாருகச்சற்றுச் கணங்கி ஒலித்தது.

பூசை மணியின் ஒலி அவனை நன்கு விழிப்புறச் செய்தது. போர்வையை உதறித் தள்ளி விட்டு எழுந்த போது கிளாஸ் ஒன்றில் தேநீர் ஏந்தியவாறு சரோசா அறைக்குள் நுழைந்தாள். எப்படித்தான் இவள் அதிகாலையில் எழுந்துவிடுகின்ருளோ? பனி விலகாக் காலை வேளை என்ருலும் சரி, மழை பெய்து ஓய்ந்த குளிர் பொழுதாயினும் சரி சரோசா எழுந்து குளித்து விடுவாள். அவன் விழிக்கும் போது கையில் வாய் கொப்பளிக்கத் தண்ணீரும், அருந்த கிளாஸ் நிறையத் தேநீருமாக அவள் எதிரில் நிற்பாள்.

ஒரு மாதமாக இந் நிலையில் மாற்றமில்லை. ஆம், அவள் அவன் மனைவியாகி ஒரு மாதமாகின்றது. காலம் தான் எவ்வளவு விரைவாகச் சிறகு கட்டிப் பறக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. நேற்றுப் போல இருக்கின்றது விவாகமாகி. முப்பது நாட்கள் ஓடிவிட்டன.

"இந்தாருங்கள் அத்தான்.." என அவள் புன்னகைத்தவாறு தேநீர் கிளாசை நீட்டினுள். அவன் அதனை வாங்காது அவளையே பார்த்தான். சரோசா கல்யாணத்திற்குப் பின்னர் சற்றுப் பூரித்திருந்தாள். மகிழ்வின் பூரண பொலிவு அவளில் தெரிந்தது. அவன் பார்வையைத் தாழ முடியாமல் அவள் நெளிந்தாள்.

என்ன பார்வை?..தெரியாதவளைப் பார்க்குமாப் போல...

"சரோ..நீ இப்போது பார்க்க எப்படி அழகா இருக்கின்றுய் தெரியுமா?..."

"எப்படி அழகா இருக்கிறன்?......நல்ல குண்டாகி வருகிறன்... இப்படிக் குண்டாகக் கூடாது என பாக்கியம் சொல்லுகிருள்...பெண்கள் தங்கள் அழகையும் உடலையும் எப்போதும் நல்லநிலையில் வைத்திருக்க வேண்டுமாம்...அப்ப தான் கணவன் மாரை கையில் வைத்திருக்கலாமாம்...இல்லாட்டில்..." அவள் தொடர்ந்து கூறுது சிரித்தாள்.அவன் அவளை இழுத்தவாறு கேட்டான்:

இல்லாட்டில்......?"

"அதையேன் உங்களுக்கு ...தேத்தண்ணி ஆறுது ...குடியுங்க அத்தான்..."

அவன் கிளாசை வாங்கிப் பருகினுன். பருகிவிட்டு கிளாசை அவளிடம் கொடுக்கும் போது அவன் கேட்டான்: "சரோ... நீ ஏன் அப்படி பிடிவாதமாக நின்ருய் என்னைத் தான் மணக்க வேண்டும் என்று... என்னை மணக்காவிடில் மருந்து குடிப்பன் எண்டியாமே?...

அவள் சிரித்தாள். கன்னங்கள் குழிவிழுந்தன.

"இதை நீங்கள் என்னிடம் எத்தனை தடவை கேட்டு விட்டியள்...நானும் எத்தனை தடவை பதில் சொல்லிவிட்டன்?...மீண்டும் சொல்லவா?"...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொல்லன்... சரோ......''

''இப்ப மாட்டன்...''

''எப்ப......?''

''ராவைக்கு...'' என்று வெட்கத்தோடு அவள் சிரித்தாள்.

ராவைக்கு முடியாது சரோ... இன்று இரவு மெயிலில் நாங்கள் மட்டக்களப்பிற்குப் போறம்...''

''ஓ...நான் மறந்து போனன்...அத்தான், அதுக்கிடையில் நான் ஒரு வீட்டிற்குப் போட்டு வரப்போறன்...''

''எங்கு?...''

உங்க வீட்டிற்குத்தான்...மாமி வரச் சொன்னவ...''

''போவன்......போட்டுக் கெதியா வா சரோ...''

நீங்களும் வாருங்களேன்...''

''எனக்கு வெளியில கொஞ்சம் வேலையிருக்குது...நீ மட்டும் தம்பியோடு போயிட்டு வா. நான் வேண்டுமானால் சூட்கேசில் பிரயாணத்திற்கு ஆயத்தமாக உடுப்புகளை அடுக்கி வைக்கிறன் சரியா......?' 'என்றவாறு அவளின் கன்னத்தை கிள்ளினான். அவள் பொய்க்கோபத்தோடு சிணுங்கினாள். அவன் அவளின் அரையில் கிள்ளி விட்டான்.

ஆ''...''என்றபடி சரோசா அறையை விட்டு விரைந்தாள்.

சிவராசன் அவ்வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்து பிரித்தான். பிரித்த பக்கத்தில் ஒரு சிறுகதை. சிறுகதையின் முதல் வாக்கியம் இப்படி ஆரம்பித்தது; அன்பே, நீ ஏன் என்னை வெறுத்து ஏமாற்றினாய்?...'' அவனால் தொடர்ந்து படிக்கமுடியவில்லை' மனக்குகையில் எதிரொலிகள் திடீரென எழுந்தன.

கங்கா...கங்கா...

நீ இப்போது எங்கிருக்கிறாய்? எப்படி இருக்கிறாயோ? எவ்வளவு அன்பாக பழகினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு இனிமையான கனவுகளுடன் சிரித்து மகிழ்ந்தோம். எல்லாம் ஒரு நாளில் கனவாய் போய்விட்டனவே? கங்கா நீ ஏன் என்னை வெறுத்தாய்? ஏன் என்னை ஏமாற்றினாய்?

கங்கா... கங்கா... அவன் இதய அடிவாரத்தில்இருந்து ஏக்கத்தின் பிரதிபலிப்பாக வெளிப்பாயும் அழைப்பிற்குப் பதில் எங்கே? தீ அவியாத் தணலாக அவன் இதயம் இருந்தது.

கங்கா என்னை விட்டே நீ ஓடிவிட்டாய். என்னைவிட்டு... நீ ஓடலாம். ஆனால், என் இதய உணர்வுகளின் கொந்தளிப்பை நீயன்றி வேறு யார் தணிக்க முடியும்? முடிவிலா மலரின் மென்மையை' பனி நிலவின் குளிர்மையை நீயன்றி வேறு யார்தான் தரமுடியும்? முடிவிலா இதய வானத்தின் கருநீலத்திரையில் ஒளி மின்னலாக சீறிப் பிளந்த நீ இன்று என்னை இருளில் ஆழ்த்திவிட்டுப் போய் விட்டாயே?

கங்கா, உயிரோடு பிணைந்த உறவு போல உன்னையே நான் தேடி அலைந்த நாட்கள்? உன்னை மறக்க என்னால் முடியவில்லையேடி... நான் என்ன செய்வேன்?

அவன் பத்திரிகையைத் தூக்கி வீசிவிட்டு எழுந்தான். மனம் குழம்புகிறது. அவன் இனிக் குழம்பக் கூடாது.. அவனுக்காக ஒருத்தி இருக்கிறாள் சரோ...

அறையின் ஒரு மூலையில் தேக்க அலுமாரி இருந்தது. அதன் மேல் சூட்கேசுகள் இரண்டுகிடந்தன. சரோ உடுப்புகள் அடுக்கிவைக்கச் சொன்னாளே? இல்லையில்லை நான் தான் அடுக்கி வைப்பதாகச் சொன்னேன்.

நல்ல சூட்கேஸ் ஒன்றை அலுமாரியின் மேலிருந்து இறக்கிவைத்தான். கரப்பான் ஒன்று வேகமாக சூட்கேசினுள் நுழைவது தெரிந்தது.

அருவருப்புடன் சூட்கேசை திறந்தான். கரப்பானைக் காணவில்லை. எங்கு போயிருக்கும்? சூட்கேசின் அடியில் விரித்திருந்த பேப்பரினுள் நுழைந்திருக்குமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேப்பரை எடுத்து உதறினான். கரப்பானுடன் கடிதம் ஒன்றும் கீழே விழுந்தது. கடிதத்தை எடுத்தான். சரோசாவுக்குரிய கடிதம். கடித உறையில் இருந்த எழுத்துக்கள்...? அவ்வெழுத்துக்களை அவன் மறக்க முடியுமா? கங்கா இவை உன் எழுத்துக்கள். நீ சரோசாவுக்கு அப்படி என்ன எழுதியிருப்பாய்?

மிதந்தபரபரப்போடும், ஆவலோடும் அவன் கரங்கள் கடிதத்தைப் பிரித்தன. கண்கள் வேகமாகக் கடிதத்தில் மேய்ந்தன. விழிகள் கலங்கி நீரைச் சொரிந்தன.

"...சரோ, நீ உன் அத்தான்மேல்இவ்வளவு காதல் கொண்டிருப்பாய் என்று நான் எண்ணவில்லை. உனக்குரியவரை நான் அபகரிப்பதாகக் குற்றம் சாட்டியிருந்தாய், இதயம்என் றுஒன் றுஇருக்கிறதே சரோ. உனக்குரியவரை நான் ஒருபோதும் அபகரிக்க மாட்டேன். அவரின் பொறுப்புகளை, கடமைகளை அவரை நம்பியிருக்கும்குடும்பத்தினரை நான் அறியாதவளல்ல. அவரின் பிரச்சினைகளைத் தீர்க்க நான் வலுவற்றவள். உன்னால் தான் அவற்றைத் தீர்க்க முடியும். கமலம் அக்கா அவருக்கு எழுதியிருந்த கடிதத்தையும் நான் படிக்க நேர்ந்தது. அவரின் வாழ்வை என் ஒருத்திக்காக நான் அபகரிக்கலாமா? என்று பல நாட்கள் நான் என்னையே கேட்டுக் கொண்டேன். நீங்கள் எல்லாரும் கண்ணீர்விட்டு என்னைத்திட்ட, அவரின்கடமைகளைநிறைவேற்றிவைக்க வழியற்ற நான் அவரைத் துயரில் ஆழ்த்துவதா? மாட்டேன். நான் முடிவு செய்து விட்டேன். அதிர்ஷ்டம் என்பது எல்லாருக்கும் வாய்ப்பதல்ல சரோ. நான் துரதிஷ்டம் பிடித்தவள். உன் அத்தானை உன்னிடமே திருப்பித் தரும் படி கேட்டாய். அவரைஅப்படியே உன்னிடம் தந்துவிட்டேன் சரோ. எனக்காக உன்னிடம்ஒன்றைத்தான் யாசிக்கிறேன். எப்போதாவது அவரிடம் எனக்காகச் சொல், அவரின் கங்கா அவரை ஒருக்காலும் ஏமாற்றவில்லை என்று. கடைசி நாள் அவள் அவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியதெல்லாம் மனமறிந்த பொய் என்று சொ... இதயத்தைக் கல்லாக்கி அவரின் இதயத்தை சுக்கல் சு... கலாக்கி விடைபெற்றேன் என்று சொல்' 'சொ... வாயா...?''

தொடர்ந்து அவனால் படிக்க முடியவில்லை அ... படியே பிரமை பிடித்தவனாக அமர்ந்துவிட்டான். அவன் கரத்தில் கங்காவின் கடிதம் படபடத்தது.

கங்கா...கங்கா...இதயம் அழுதது. நான் எவ்வளவு தப்பாக உன்னைக் கணித்து விட்டேன்.

நீ செய்தது?......கங்கா......கங்கா......

அறைவாசலில் நிழலாடியது. சரோசா நின்றிரு... தாள். அவள் நிலைமையைப் புரிந்து கொண்டாள். ஓ... வந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

என்னை மன்னியுங்கள்...என்னை மன்னியுங்கள்...''

அவளின் கண்ணீர் கால்களை நனைத்தது. அவன் அவ... தோள்களில் ஆதரவாகக் கரம் பதித்தான். அ... எழுந்திருந்து அவனைப் பார்த்தாள். அவன் கலங்கி... விழிகள்.

அவனைப் அப்படியே அணைத்துக் கொண்டு வி... ளாள் சரோசா.

அவன் இதயம் அழுதது......

''...கங்கா, என் அன்பே. உன்னை நான் இழந்து வி... டேனே?...

★ ★

32908
1377 cc.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org